ஞானப் பள்ளு

பதிப்பாசிரியர்

ஆ. சதாசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NANAP- PALLU

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nanappallu

ஞானப் பள்ளு

பதிப்பாசிரியர்

கலாநிதி ஆ. சதாசிவம் M. A., D. Phil.

தமிழ்த்துறைத் தலைவர்
இலங்கைப் பல்கலைக்கழகம்
கொழும்பு.

275608

அரசு வெளியீடு,
231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு - 13, (இலங்கை).

VIJAYALUCKSHMI BOOK DEPOT
248, Galle Road,
WELLAWATTE
T/PHONE 88930.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு வெளியீடு: 18
முதற் பதிப்பு: நவம்பர், 1968
விலை: ரூ. 4-00

GNANAP-PALLU

(A Literary Work of the Seventeenth Century)

Edited by:

Dr. A. Sathasivam M. A., D. Phil.
Head of the Department of Tamil
University of Ceylon, Colombo.

Published by:

ARASU Publications,
231, Wolfendhal Street,
Colombo-13 (Ceylon).

First Edition:

18th November, 1968.

ரெயின்போ பிரிண்டர்ஸ், 231, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டுரை

ஆலம் விதை ஒன்று. அஃது உயிர்ப்புப் பெற்று முளை கொள்ளுகின்றது. அக் கன்று கால ஓட்டத்திலே மரமாகி, பல விழுதுகளையுஞ் செழுங்கிளைகளையுந் தாங்கிப் பெரு வாழ்க்கை சுகிக்கின்றது. கன்றுக்கும் இப்பாரிய மரத்திற்கும் எத்தனையோ வேறுபாடுகள் இருப்பதான தோற்றம். ஆனால், 'ஆல்' என்ற ஓரம்சம் எத்தகைய மாறுபாட்டையும் அடையவேயில்லை. இந்த உருவகத்தில் இன்னோர் உண்மை முளை கொள்ளுகின்றது.

தமிழ்க் கன்னி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உயிர்ப்புப் பெற்று, செந்நாப் புலவர்களின் உதடுகளிலும், சேரிவாழ் பாமரரின் இதழ்களிலும், ஏககாலத்தில், இன்றுவரை ஆடல் பயின்று வருகின்றாள். அவளுக்கு முன்னரும் பின்னரும் தோன்றிய மொழிகள் பல இன்று இறந்தனவாயின; 'பிறிது பிறிதாகின' சில; இன்னுஞ் சில பனுவல்களின் பக்கங்களிலே சயனிக்கின்றன. ஒன்றில், காலத் தேவைகளுக்கு இசைவான நெகிழ்வுகளை அநுமதிக்காத வைரம் பாய்ந்த வைதீகப் போக்கோ, அன்றேல் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்ற அதீதமான போலிப் புதுமை மோகமோதான் அவற்றின் அவலக்கதிக்கு ஏதுவாக அமைந்தது. ஆனால், நித்திய பெருவாழ்க்கை தமிழுக்கு மட்டும் எவ்வாறு தனிச்சிறப்பாகச் சித்தித்தது? இலக்கிய இலக்கண மரபுகளை மரபுநிலையிற் பாதுகாத்துத் தேவையான நெகிழ்வுகளையும் மரபாகத் தமிழ்ச் சான்றோர் ஏற்றமையே இதற்கான காரணியாகும்.

இலக்கிய மரபு பற்றிய பயிற்சியும் ஞானமுமின்றி, 'மரபு வைதீகர் வகுத்த வழி, புதிய இலக்கிய ஆக்கத்திற்குத் தடையான வேலிகளை அது இட்டுள்ளது' எனக் கூறி, சில ஆண்டுகளுக்கு முன்னர், சேரி இலக்கியத்தை மட்டுமே காமித்த எழுத்தாளர் சிலர் போர்க்கோலம் பூண்டனர். 'இப்போக்கு அறியாமையில் முளைகொண்டது; இலக்கிய சேமத்திற்கு ஒவ்வாதது' என்பதை அப்பொழுது இருவர் தெளிவாக உணர்ந்தனர். அவர்களுடைய உள்ளங்களில் அருள் சுரந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அருள் நெஞ்சின் அபயக் குரல் முதன் முதலிற் பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து எழுந்தது. தனித்துவம் - திண்மை - துணிவு - தெளிவு - தமிழ்மீது செறிந்த பக்தி ஆகிய பஞ்ச பண்புகளும் அக்குரலில் நேர்த்தியாக இழைந்தன. அக்குரலை எழுப்பியவர் இன்று இலங்கைப் பல்கலைக்கழகத் (கொழும்பு) தின் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கும் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்களேயாவர்.

'மரபுநிலை திரியின் பிறிதுபிறி தாகும்' என்பதை விளக்கி, 'வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே; நிகழ்ச்சி அவர்கட் டாக லான' என்பதை வலியுறுத்தி, 'The still point of the turning wheel' (ஓடும் சக்கரத்தின் அசையாப் புள்ளி) போன்றது மரபு என்பதை அவர் தெளிவாக்கினர்.

கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் பழந்தமிழிலக்கியத்தில் நிறைந்த புலமையுள்ள பண்பாளர். தமிழின் மேன்மைக்காக உழைத்தல் என்ற இலட்சியப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் இனியர். எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்கும் தகைமையர். இந்நூலினை அச்சிடும் பொழுது அவர் நல்கிய ஒத்துழைப்பு இனிய அநுபவமாகும். எதையும் 'கருமமே கண்ணாக' இயற்றும் அவர்தம் ஏக சிந்தையும், அற்புதப் பொறுமையும் நம்மை வியப்பிலாழ்த்தியது. ஒரே இடத்தில் பல மணிநேரம் அமர்ந்து, எழுத்து எண்ணிச் செப்பம் பார்த்தார். அவருடைய அத்தகைய உழைப்பின் அறுவடையான ஞானப்பள்ளு நூலின் திருந்திய பதிப்பான இதனை நமது பதினெட்டாவது நூலாக வெளியிடுகின்றோம்.

இந்நூல் கத்தோலிக்க கிறிஸ்தவப் புலவரால் இயற்றப்பட்டது. எம்மதஞ் சார்ந்தவர்களாயினும் தமிழ் மரபிற்காலூன்றித் தமிழ் செய்த அவர் திறன் வியக்கத்தக்கது. கவிச்சக்கரவர்த்தி கம்பன் வழிநின்று, சீறு செய்த உமறுப் புலவர் பாவலனங்களிலும் தமிழகத்தின் வளமிக்கச் சோலைகளைக் கண்டுகளிப்புற்றூர் அவ்வாறே ஞானப் பள்ளு நூலாசிரியர் 'நெற்றியி லிடும் மஞ்சணைப் பொட்டும், மற்றொரு திருநாமப் பொட்டும்' எனவும், 'மங்கலமி கப்பெருக வாகு

புரிகுழலில் மாலையுமிட்டு' எனவும் மூத்த பள்ளியைத் தமிழச்சியாகவே கண்டு களிப்புறுகின்றார். இப்புலவர் பெருமக்களின் இலக்கிய ஆக்கங்களும் தமிழிலக்கியச் சோலைக்கு வனப்பூட்டின என்பதை உணர்ந்து, வரலாற்றுப் பிறழ்வுகளுக்கு இடமளிக்காது, நடுவு நிலைமை நெறி பேணி, பழைய தமிழ் நூல்கள் முறைமையிற் பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற இலட்சியத்தின் வடிவாக, சைவப் பழமாக வாழும் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் 'ஞானப் பள்ளு' என்னும் கிறிஸ்தவ மதஞ்சார்ந்து எழுந்த இந்நூலினைப் பதிப்பிக்கும் பெருமுயற்சியில் ஈடுபட்டார் போலும். இன்று நமக்கு முழுமையாகக் கிடைத்துள்ள பள்ளு நூல்களுள் காலத்தால் முந்தியதும், நீளத்தாற் பெரியதும் ஞானப்பள்ளு நூலேயாகும். நல்லூரிலமைந்த தமிழரசர்களாம் சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளுடைய ஆட்சி வீழ்ந்து பறங்கியர் ஆட்சி நிலைத்த பின்னரும், ஈழத்துக் கவிதையின் ஊற்றுக் கண் அடைபடாது வளம்பெற்று விளங்கிற்று என்பதற்கு இந்நூல் தக்க சான்றாகவும் அமைந்துள்ளது.

தமிழிலக்கிய மரபிலே கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் எத்தகைய திளைப்பும், தெளிவான கருத்துக்களும் வைத்திருக்கின்றார் என்பதை ஓரளவிற்குப் புரிந்து கொள்ளுவதற்கு, அவர் எழுதி இந்நூலில் இணைத்துள்ள இரு ஆராய்ச்சிக் கட்டுரைகளும் திறவுகோல்களாக அமைகின்றன.

சங்க காலத்தின் தனிப்பாடல் மரபில் அன்பினைந்திணை கூறும் அகப்பாட்டுகளும் எழுந்தன. மருத நிலத்திற்கான உரிப்பொருள் ஊடலாகும். மருத நிலை வாழ்க்கையைச் சித்திரிக்கும் பிரபந்த வகையான பள்ளு நூலின் தொனிப் பொருளாக இவ்வுரிப் பொருள் மாறாது நிலைத்துள்ளமை கவனத்திற் குரியது. அதே வேளையில், கால ஓட்டத்திற்கு இசைந்தொழுகும் முறையில் உருவ மாற்றம் நிகழ்ந்துள்ளது. தமிழில் எழுந்த முதற் காப்பியமான சிலப்பதிகாரக் காலத்திலேயே ஏர் மங்கலமும், முகவைப் பாட்டும் மருத நிலப்பாடல்களாக அமைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன. இவை பக்தி இலக்கிய காலத்தில் பத்துப்பாடல்களில் நிறைவுறும் முறைமை பெற்று உழத்திப் பாட்டாக வளர்ச்சி பெற்றன. அதனைத் தொடர்ந்த சோழர் காலத்துக் காவியப் பண்புகளின் தாக்கத்தினால், சிற்றிலககியஞ் சார்ந்த பள்ளுப் பிரபந்த உருவம் மலர்ந்தது.

மாறாத தொனிப் பொருளும், மாறும் உருவங்களும் என்ற முறைமையிலும், மாறாத உருவங்களும் மாறும் தொனிப் பொருளும் என்ற முறைமையிலும் தமிழின் மரபு நிலை பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை அவர் சுட்டாமற் சுட்டி ஆராயும் பகுதிகள் பொதுவாகத் தமிழ்ச் சுவைஞர்களுக்கும், குறிப்பாகப் பல்கலைக் கழக மாணாக்கருக்கும் பெரு விருந்தாக அமைந்துள்ளன.

தமிழர் மத்தியிற் பண்டைய நூல்களைப் பற்றிய அறிவு அகலிக்கும் அதே வேளையில், அன்னாரின் சுவைக்குப் புதிய இலக்கியங்களும் படைக்கப்படல் வேண்டும் என்பது நமது குறிக்கோளாகும். எனவே, ஈழத் தமிழகத்தில் ஆக்க இலக்கியத் துறையில் வகையிலும் எண்ணிக்கையிலும் அதிக நூல்களை இதுவரையில் வெளியிட்டுள்ள நாம், குறிக்கோளின் பிறிதொரு பகுதியைப் பூர்த்தி செய்யும் முகமாகவும் ஞானப்பள்ளு நூலின் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்களின் பதிப்பினைத் தமிழன்னையின் திருவடிகளிலே சமர்ப்பிக்கின்றோம்.

எம். ஏ. ரஹ்மான்
அரசு வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

ஞானப்பள்ளு என்னும் இந்நூல் யாழ்ப் பாணத்துக் கத்தோலிக்க கிறித்தவப் புலவர் ஒருவராற் பதினேழாம் நூற்றாண்டில் இயற் றப்பட்டதாகும். இதன் காலம் கி. பி. 1642 என்பர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர். இந் நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை.

கிறித்து பெருமானைப் பாட்டுடைத் தலை வனாகக் கொண்டு மருதநில மக்கள் வாழ்க் கையைச் சித்திரித்துக் காட்டும் இந்நூல் ஏறக் குறைய 250 ஆண்டுகளாக ஏட்டு வடிவிலி ருந்து முதன் முதலாக 1904 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. 'இஃது சில்லாலை பண்டிதர் ஸ்ரீ. ச. அந்தாம்பிள்ளை அவர்கள் கேள்விப்படி பழைய ஏட்டுப் பிரதிகளிலிருந் தெடுக்கப் பட்டு மாதகல் ஸ்ரீ. வ. லோ. அமிர்தநாத பிள்ளை அவர்களால் தமது "தைரியநாத" அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டது. 1904 என்னுங் குறிப்பு மட்டும் அம்மூலப் பதிப்பிற் காணப்படுகின்றது.

ஈழத்தெழுந்த பிற பள்ளு நூல்களாகிய கதிரைமலைப் பள்ளு, பருளை விநாயகர் பள்ளு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டிகைக் கனகராயன் பள்ளு ஆகிய மூன்றும் சிதைந்த நிலையிலோ அன்றி அகப்படாத நிலையிலோ அச்சிடப்பட்டுள்ளன. அங்ஙனமின்றி ஞானப்பள்ளு முழுநூலும் மூலப்பதிப்பில் இடம் பெற்றுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். நூலில் இடைச் செருகல்கள் எதுவும் நுழையாதிருப்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

யாம் இப்பதிப்பை மேற்கொள்வதற்குரிய காரணங்கள் பலவாகும். முதலாவதாக, ஈழத்துக் கவிதைக் களஞ்சிய நூற்றொகுப்பைத் தொடங்கிய காலத்தில் ஞானப் பள்ளின் ஒரு பிரதியைத் தேடியலைந்து மிக்க இன்னல் எய்தியபோது, அருகிய இந்நூற் பதிப்பை யாமே விரைவிற் கொண்டுவர வேண்டுமென்று முடிவு செய்தோம். அந்நூல் வெளியாகி இரண்டாண்டுகள் பூர்த்தியாவதற்கிடையில் இந்நூற் பதிப்பு வெளிவருவது திருவருளின் துணையாலாகும். இரண்டாவதாக, மூலப்பதிப்பிற் பல செய்யுள்கள், அசை சீர் தளை முதலியன பிரிக்கப்படாதும் இசைவகுக்கப்படாதும் தெளிவின்றியிருந்தமையின் அவற்றை வகுத்தமைத்து வெளியிட வேண்டுமென்னும் அவா எழுந்தது. பெரும்பாலும் செய்யுள்கள் ஒன்றன்பின் ஒன்ருக அடியெண்ணிக்கையோ செய்யுள்களின் எண்ணிக்கையோ குறிக்கப்படாத நிலையில் அச்சிடப்பட்ட மூலப்பதிப்பைத் திருத்திமுறைப்படச் செய்யுள்களாக்கி 257 ஆக வகுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளோம். மூன்ருவதாக, செய்யுள்கள் பல இன்னபா எனப் பெயரிட வேண்டியிருந்தமை யின் ஓரெழுத்துக் குறைந்தோ கூடியோ காணப் பட்ட கட்டளையடிகளைச் சமன்செய்து கட் டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை எனப் பெயரிட்டுள்ளோம். நான்காவதாக, மூலப் பதிப்பில் நூலின் உபதலைப்புக்கள் மிகச் சிலவே கூறப்பட்டிருக்க, முக்கூடற் பள்ளு முதலிய பள்ளு நூல்கள் பலவற்றையும் ஒப்பு நோக்கிப் பள்ளுப் பிரபந்தங்களின் அமைப்புக் கிணங்க உபதலைப்புக்களாக வகுத்துள்ளோம். ஐந்தாவ தாக, 'குயில் கூவல்' முதலிய பகுதிகள் மூலப் பதிப்பில் இடம் மாறி அச்சிடப்பட்டிருப்பவும் ஏனைய பள்ளு நூல்களின் அமைப்புக்கிணங்க இப்பதிப்பில் உரிய இடத்திற் கூறப்பட்டுள் ளன. ஏட்டுச் சுவடியின் இதழ்கள் மாறியிருந்த போது எழுதுவோர்விட்ட பிழையே இது வாகும். ஆருவதாக, கையெழுத்துப் பிரதிகளை எழுதியோர் செய்த தவறுகளெனக் கண்டவற் றையும், அச்சுப் பிழைகளையும் இப்பதிப்பிலே திருத்தியுள்ளோம். மூலப்பிரதியிலிருந்து மாற் றிய சொல்லையோ, சொற்ளெடரையோ அடிக் குறிப்பிலே தவருது குறித்துள்ளோம். இஃது எமது பதிப்பிற் பிறர் காணுங் குறைகளை நீக்கிப் பிறிதோர் பதிப்பைக் கொண்டுவர விரும்புவோருக்கு மிக உதவுவதாகும். பொருள் விளங்காத இடங்களை எம் மனம் போனவாறு மாற்ற விருப்பமின்மையால் மூலப்பதிப்பிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டவாறே பதிப்பித்துள்ளோம். பிற்காலத்தில் நூல்களைப் பதிப்பித்தோர் சிலர் மூலங்களைத் தாம் விரும்பியவாறு மாற்றியும் திரித்தும் சிதைத்தும் உள்ளனர். இது பெரிய தவறாகும்; இத்தகைய தவறு இப்பதிப்பில் நிகழாவகை பார்த்துள்ளோம்.

இப்பதிப்பு ஒரு சீரிய பதிப்பு எனக் கூறுவதற்கில்லை. மூலத்தைத் திரிக்க விருப்பமில்லாத கோட்பாட்டோடு பதிப்பிக்கும் இந் நூலில் வரும் கட்டளைப் பாக்கள் தளைதட்டுண்டும் ஓசையில் முரிவுபட்டுஞ் செல்லுதல் இயற்கையே. வேறு ஏட்டுப் பிரதிகள் அகப்படுங் காலத்தில் அத்தகைய பாக்கள் சீர்தூக்கி மாற்றியமைக்கப்படலாம். அன்றியும் இந் நூலைப்படிக்கும் தமிழன்பர்கள் தங்கருத்துக்களைக் காலத்துக்குக் காலம் அறிவிப்பரேல் அடுத்த பதிப்பிலே திருத்தங்கள் செய்ய உதவியாயிருக்கும்.

இந்நூலைப் பதிப்பிப்பதற்கு மூலகாரணராயிருந்து வருபவர் கொழும்பு அரசாங்க மொழித்துறை மொழிபெயர்ப்புப் பகுதி மேற்பார்வையாளர் வித்துவான் எப். எக். சி. நடராசா அவர்களாவர். 1904-இல் அச்சிடப்பட்ட மூலப்பிரதியை அவர்களே தந்துதவினர். அத்துடன் பல்கலைக்கழகத்து நூல் நிலையத்தில் அகப்படாத பிற பள்ளு நூல்களையும் அன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞரே தந்துதவினர்; பள்ளு நூல்களெல்லா வற்றையும் ஒப்பு நோக்கி எமது கருத்தைத் துணிந்து கொள்வதற்கு அந்நூல்கள் மிகவும் பயன்படலாயின. அன்னருக்கு யாம் மிகக் கடப்பாடுடையோம். நூலின் யாப்புக்களைத் துணிந்து இசை, சீர், தளை என்பன அமைக் குங்கால் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் அனைத் தையும் போக்கியவர் செந்தமிழ்ப் புலவர் க. பாண்டியனர் அவர்கள். அன்னரின் கைவண் ணம் இந்நூலிற் பதிந்திராவிடின் இப்பதிப் பால் நூலில் ஏற்படும் சிறப்புப் பண்புகள் பல இல்லாது போயிருக்கும் என்பது எமது நம்பிக்கை. அன்னர் நீடூழி வாழ்க என்று வாழ்த்துவதுடன் எமது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேம். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையவர்களும் இப்பதிப்பிற் சில திருத்தங்களைச் செய்துதவியதற்காக எமது நன்றி அவர்க்கு உரியதாகுக.

தாம் வெளியிடும் எந்நூலையும் சிறப்பாக அச்சிட்டுத் தமிழ் மக்களின் நன் மதிப்பை ஈட் டிக் கொண்ட கொழும்பு அரசு வெளியீட்டி னர் இந்நூலைத் தமது பதினெட்டாவது வெளி யீடாக வெளியிட முன்வந்துள்ளனர். ஆக்க இலக்கியங்களை வெளியிட்டுப் பெருமையீட்டிக் கொண்ட அவர், ஈழத்துப் பழைய நூல்கள் அழியவிடாது பாதுகாக்கும் வண்ணம் இன்று முன்வந்து ஞானப்பள்ளை வெளியிட்டதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துப் புலவர் பரம்பரையினர் அவர்களை வாழ்த்துவார்களாக. மிகக் குறுகிய கால வெல்லையில் சிறப்பாக இந்நூலை அச்சிட்டு வெளியிட்ட அரசு வெளியீட்டு உரிமையாளர் திரு. எம். ஏ. ரஹ்மான் அவர்களுக்கு எமது நன்றி உரியதாகுக.

இந்நூற் பதிப்பைத் தொடர்ந்து வெளிக் கொணர விருக்கும் ஈழத்துப் பழம்பெரு நூல் களுக்குத் தமிழ் மக்களின் பூரண ஆதரவும் எல்லாம்வல்ல இறைவனின் தூண்டுதலும் கிட்டுவனவாகுக.

ஆ. சதாசிவம்

இலங்கைப் பல்கலைக்கழகம்,
கொழும்பு.
15-10-68.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

பள்ளுப் பிரபந்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

பள்ளு என்பது தமிழிலுள்ள தொண்ணூற்றாறு பிரபந்த வகைகளுள் ஒன்று. தமிழ்ப் பிரபந்த இலக்கணங் கூறும் பாட்டியல் நூல்களில் 'பள்ளு' என்னும் பெயருக்குப் பதில் 'உழத்திப்பாட்டு' என்னும் பெயர் காணப்படுகின்றது. நாயக்கர் காலத்திற்றோன்றிய பள்ளுப் பிரபந்தங்களின் முன்னோடியே சோழர்காலத்திற் றோன்றிய உழத்திப் பாட்டுக்கள் எனக் கூறினும் இழுக்காகாது. பள்ளிசை, பள்ளேசல் என்பன பள்ளுப் பிரபந்தத்துக்குரிய மறு பெயர்கள்.

தமிழிலுள்ள பள்ளு நூல்களாவன: கதிரைமலைப்பள்ளு, ஞானப்பள்ளு, முக்கூடற் பள்ளு, திருவாரூர்ப்பள்ளு, குருகூர்ப்பள்ளு, திருமலைப்பள்ளு, சிவசயிலப் பள்ளு, வைசியப்பள்ளு, வடகரைப் பள்ளு, உரிமை நகர்ப்பள்ளு, சீர்காழிப்பள்ளு, பருளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, கண்ணுடையம்மை பள்ளு, திருவிடைமருதூர்ப் பள்ளு, மாந்தைப் பள்ளு, கூடற்பள்ளு, தஞ்சைப் பள்ளு, தென்காசிப் பள்ளு, கொடுமளூர்ப் பள்ளு, இராசைப் பள்ளு, புதுவைப் பள்ளு, முக்கூட்டுப் பள்ளு, மன்னார்மோகனப் பள்ளு, சண்பகராமன் பள்ளு, வையாபுரிப் பள்ளு, திருச்செந்தில் பள்ளு முதலியன. இவற்றுட் காலத்தால் முந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியது கதிரைமலைப் பள்ளு ஆகும். இஃது ஈழத்துத் தென்கதிரை வேலவரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது. 130 செய்யுள்கள் கொண்ட இப்பிரபந்தத்தைப் பாடிய ஆசிரியரின் பெயரையோ அவர் வாழ்ந்த காலத்தையோ வரையறுத்துக் கூறுதல் முடியாது. 1478 - 1519 இல் நல்லூரிலிருந்து அரசாண்ட பரராசசேகர மகாராசாவின் காலத்தது இந்நூல் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள. பரராசசேகரனின் ஆணையின்படி பன்னிரு புலவரால் இயற்றப்பட்ட பரராசசேகரம் என்னும் வைத்திய நூலிலே 'தென் கதிரை வேலவர்' பலவிடங்களிற் புகழப்படுகிறார். இப் பன்னிரு புலவர்களுள் ஒருவரே கதிரைமலைப் பள்ளைப் பாடினர் எனக் கருதக்கிடக்கிறது. கதிரைமலைப் பள்ளைத் தொடர்ந்து ஞானப்பள்ளும் (1642), முக்கூடற்பள்ளும் (1680) எழுந்தன எனக் கூறலாம். இம்மூன்று பள்ளு நூல்கள் தவிர்ந்த ஏனைய பள்ளு நூல்கள் 1700 ஆம் ஆண்டின் பின்னரே தோன்றின. கடந்த 250 ஆண்டுகளில் எழுந்த பள்ளுப் பிரபந்தங்களின் எண்ணிக்கை நூற்றுக்கு மேலாகும். இவற்றுட் பல அச்சிடப்படா நிலையில் ஏட்டிலிருந்து செல்லரித்து அழிந்தும் போயின. 'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்னும் பழமொழி ஈண்டு நினைவு கூரத்தக்கது. தமிழகத்தில் முக்கூடற் பள்ளு தோன்றுவதற்கு முன்னர்த் தோன்றிய பள்ளு நூல்கள் அழிந்தொழிந்தன எனக் கூறுவது பொருந்தும்.

தோற்றம்

பள்ளுப் பிரபந்தம் மருத நிலத்து உழவர் வாழ்க்கையைச் சிறப்பித்துக் கூறுவதாகும். சங்க காலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்திலே தோன்றிய பாடல்கள் அனைத்தும் அகத்திணையையோ புறத்திணையையோ கூறும் திணைப் பாடல்களாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து நிலங்களில் வாழ்ந்த மக்கள் தம் நிலத்து வாழ்க்கை முறைகளையும் ஆடல் பாடல் முதலியனவற்றையும் சிறப்பித்துப் பாடிய பாடல்களின் மரபை யொட்டியெழுந்தவையே சிலப்பதிகாரத்தில் வருணிக்கப்படும் வரிப் பாட்டுக்களும், குரவைப் பாட்டுக்களுமாகும். அந் நூலில் வரும் குன்றக் குரவை குறிஞ்சிநில மக்களின் வாழ்க்கை முறைகளையும் ஆய்ச்சியர் குரவை முல்லைநில மக்களின் வாழ்க்கை முறைகளையும் கூறுவன. இக்குரவைப் பாடல்கள் போன்றே வேட்டுவவரி பாலைநில மக்கள் வாழ்க்கை முறைகளையும் கானல்வரி நெய்தல் நில மக்கள் வாழ்க்கை முறைகளையும் கூறும் வரிப்பாட்டுக்களாகும். ஐந் திணையுள் மருதத்துக்கு மாத்திரம் சிறப்பான குரவைப் பாடலோ வரிப்பாடலோ சிலப்பதிகாரத்தில் அமையவில்லை. (ஊர்சூழ்வரியில் மருதநில வருணனையின்மை காண்க.) கானல்வரியிற் கூறப்படும் மூன்று ஆற்று வரிப் பாடல்கள் மருதநிலத்தைச் சிறப்பிப்பனவாகும். அவற்றுள் ஒரு பாடல் பின்வருமாறு:

ஆற்றுவரி

உழவ ரோதை மதகோதை யுடைநீ ரோதை
தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி
காவேரி
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்த வெல்லாம்
வாய்காவா
மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆற்றுவரிப் பாடற் பொருள் விரிந்து பிற் காலப் பள்ளுப் பிரபந்தங்களில் 'ஆற்று வரவு அல்லது 'ஆற்றில் வெள்ளம் வருதல்' என்னும்' இயலாக இடம்பெற்றிருக்கிறது. சிலப்பதிகாரத் திலே தனிக்காதையில் விரித்துக் கூறப்படாத உழவர் வாழ்க்கை முறைகளைப் பற்றியும் அவர்தம் ஆடல் பாடல்களைப் பற்றியும் கூறும் பல குறிப் புக்களை ஆசிரியர் அந்நூல் 'நாடுகாண் காதை' (10)யிலே தருகிருர்.

கருங்கை வினைஞரும் களமருங் கூடி
ஒருங்குநின் ருர்க்கு மொலியே யன்றியும்
கடிமலர் களைந்து முடிநா றழுத்தித்
தொடிவளைத் தோளு மாகமுந் தோய்ந்து
சேருடு கோலமொடு வீறுபெறத் தோன்றிச்
செங்கய னெடுங்கட் சின்மொழிக் கடைசியர்
வெங்கட் டொலைச்சிய விருந்திற் பாணியும்
கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்கு கதிர்த் தொடுத்த விரியல்சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
ஏரொடு நின்ருே ரேர்மங் கலமும்
அரிந்துகால் குவித்தோ ரரிகடா வுறுத்த
பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்
(வரி 125 — 137)

என்னும் அடிகளிற் சுட்டப்பட்டுள்ள ஏர்மங்கலம், முகவைப் பாட்டு ஆகியன முறையே ஏர் பூட்டி யுழும் நேரத்திற் பாடப்படும் பாட்டும், நெல்லு முகந்து கொடுக்கப்படும் போது பாடப்படும் பாட்டு மாகும். எனவே மருத நிலத்தில் வயல்வேலை செய் வோராற் பாடப்படும் ஏர்மங்கலமும், முகவைப் பாட்டும் சிலப்பதிகார காலத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வழக்கிலிருந்தனவாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்துப் பள்ளுப் பிரபந்தங்களில் வரும் 'ஏர்பூட்டி யுழுதல்' என்னும் பகுதி 'ஏர்மங்கலம்' என்னும் பாடலின் விரிவாகவும், 'நெற்பொலி தூற்றல்' என்னும் பகுதி 'முகவைப்பாட்டு' என்பதன் விரிவாகவும் அமைந்திருத்தல் நோக்கற்பாலது. எனவே சிலப்பதிகாரத்திற் குறிக்கப்பட்டுள்ள ஆற்றுவரி, ஏர்மங்கலம், முகவைப்பாட்டு ஆகிய மூன்றும் பிற்காலத்திற் றோன்றிய பள்ளுப் பிரபந்தத்தின் முக்கிய உறுப்பாக அமைதலைச் சிறப்பாகக் காணலாம்.

இனி, சிலப்பதிகாரத்துக்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்டுத் தோன்றிய தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில் வரும் 'ஏரோர் களவழி' (புறத்திணை. 21) என்பது மருதநிலத்திலே விளையுட் காலத்தில் நெற்கதிரை ஆய்ந்து சூடுவைத்துப் பொலி தூற்றி யாவருக்கும் பகிர்ந்துகொடுத்து உண்டு களியாட்டயரும் வேள்வியைச் சுட்டுவதாகும். இதனை விரித்து விளக்கும் பிற்காலத்தெழுந்த புறப் பொருள் வெண்பாமாலை யென்னும் நூல் 'கிணை நிலை' யென்னுந் துறையில்,

தண்பணை வயலுழவனைத்
தெண்கிணைவன் றிருந்து புகழ் கிளந்தன்று

எனக் கூறுகின்றது.

பகடுவாழ் கென்று பனிவயலு ளாமை
அகடுபோ லங்கட் டடாரித் — துகடுடைத்துக்
குன்றுபோற் போர்விற் குருசில் வளம்பாட
இன்றுபோ மெங்கட் கிடர்

(வாகைப் படலம் 32)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விளக்கமுங் கூறுகின்றது அந்நூல். மருத நிலப் பண்ணைத் தலைவனது ஏர் வாழ்கவென்று கிணை கொட்டுமவன் புகழ்ந்து பாடியது இச்செய்யுளில் விளக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் சங்ககாலத் தமிழகத்திற் பாடப்பட்டு வந்த ஆற்றுவரி, ஏர்மங்கலம், முகவைப்பாட்டு, ஏரோர் களவழி ஆகியன பிற்காலத்துப் பள்ளுப் பிரபந்தங்களின் உறுப்புக்களாய் அமைந்திருத்தல் ஈண்டு நோக்கத்தக்கது.

இலக்கணம்

தமிழ்ப் பாட்டியல் நூல்களுட் காலத்தால் முந்தியதாகிய பன்னிருபாட்டியலில் உழத்திப் பாட்டு, குறத்திப்பாட்டு என்பனவற்றின் இலக்கணங் காணப்படுகின்றது. இவற்றுள் உழத்திப் பாட்டு என்பதே பிற்காலத்தில் பள்ளுப் பிரபந்தமாகவும், குறத்திப்பாட்டு என்பதே குறவஞ்சி யென்னும் பிரபந்தமாகவும் மாறின. இவற்றிற்குப் பன்னிருபாட்டியல் கூறும் இலக்கணம் பின்வருமாறு:

உழத்திப் பாட்டு

புரவலற் கூறி யவன்வா ழியவென்
றகல்வயற் றொழிலை யொருமை யுணர்ந்தன
ளெனவரு மீரைந் துழத்திப் பாட்டே. (335)

குறத்திப் பாட்டு

இறப்பு நிகழ்வெதிர் வென்னு முக் காலமுந்
திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே. (336)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறத்திப் பாட்டுமதனோ ரற்றே. (337)

இவ்விரு பாட்டுக்களின் இலக்கணங்களையும் பிற் காலத்துப் பள்ளு, குறவஞ்சி என்பனவற்றின் இலக் கணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தோற் றக் காலத்தில் அவை பெற்றிருந்த எளிமை புலனு கின்றது. இவற்றுள் உழத்திப்பாட்டு என்பது 'புரவ லன் நீடுவாழ்வானாக' என்று அவனை வாழ்த்து வதுடன் வயலில் நடைபெறும் தொழில்களை உழத்தி ஒப்பற உணர்ந்து கொண்டாளெனப் பத் துப் பாட்டாற் பாடப்படுவதாகும். எனவே உழத் திப்பாட்டு தோற்றக் காலத்திற் பின்வரும் பண்பு களைக் கொண்டிருந்தது:

1. புரவலனை வாழ்த்துதல்
2. வயற் றொழிலை வருணித்தல்
3. உழத்தி யென்னும் பெண்பாற் கூற்றாய் அமைதல்
4. பத்துப் பாடல்கள் கொண்டிருத்தல்.

இவ்விலக்கணங்கொண்ட நூல்கள் ஒன்றும் இன்று வழக்கிலில்லை.

பதினான்காம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கரு தப்படும் நவநீதப் பாட்டியலின் மிகைச் செய்யுள் கள் நான்கு, உழத்திப்பாட்டின் இலக்கணத்தை விரித்துக் கூறும்.

கடவுள் வணக்கம் உழத்திய ருங்குடும் பன்
வரலொன்
நடைமுறை நாடு வளங் குயிற் கூமழைக்காங்
குறியோர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுமா றுவரற் சிறப்புட் டுறத்தலை வன்வரற்
கூப்
படுமவ னன்னுள் உரப்பல் வெளியாம் பண்ணைச்
செயலே.

விஞச்சொல லாயர்வரு விக் கவரல்
தகைமுதலாள்
தனதுரை கேட்டுக் குடும்பன் கிடையிருந்தா
னெனவந்
தனற்றெழு மாட்டப் புலம்ப முற்பள்ளி கூழ்
கொண்டுவரல்
சொனனவன் மன்னித்தற் கேட்க வேண்டற்கு
மறுத்திடலே.

சூளவனை மீட்பவனைப் பணிவித் துழவருழக்
காளை வெருட்பளை பாயப் புலம்பல் எழுந்து
வித்தல்
ஆளத் தலைவற் குணர்த்தல் நடல்விளை செப்பம்
செய்நெல்
நீள அளத்தல் முதற்பள்ளி கூவேசல்
மூட்டவையே.

இவ்வமயங்களிற் பாட்டுத் தலைவன் பெருமை
யாங்காங்
கொவ்விய சிந்து விருத்தம் விரவிவரத்
தொடர்ப்பு
செவ்விதிற் பாடுமது உழத்திப்பாட்டு
பள்ளுமென்பர்
நவ்வி எனக்கண் மடவீர் பிறவிதம் நாட்டுவரே.

இறுதிப் பாடலில் வரும் 'செவ்விதிற்பாடுமது உழத்திப்பாட்டு பள்ளுமென்பர்' என்னும் அடியிற் சுட்டப்பட்டவாறு அக்காலத்தில் 'பள்ளு' என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரால் சிலர் உழத்திப் பாட்டினை அழைத்தனர் எனத் தெரிகிறது. எனவே, பள்ளு என்னும் பெயர் சிறுவரவிற்றாய் வழக்குக்கு வந்தமை இதனாற் பெறப்படுகிறது. இவ்விலக்கணத்தை ஆராயுமிடத்துச் சோழர் காலத்துக் காவியமரபுக்கேற்பப் பழைய உழத்திப்பாட்டு அலங்கார நடைபெற்றுச் சிற்றிலக்கியம் அல்லது காவியமாக மாறிற்றெனலாம். பல்லவர் காலத்திற் பத்துப் பாடல்கள் கொண்ட பதிகங்களே பெருவழக்கு. இதனால், பல்லவர் காலத்திற் றோற்றமெடுத்த உழத்திப்பாட்டானது பன்னிரு பாட்டியல் கூறும் இலக்கணத்திற்கேற்பப் பத்துப் பாடலாக அமைவதாயிற்று. பல்லவர் காலத்திற் புரவலனைக் கூறிய உழத்திப் பாட்டு சோழர் காலத்திற் பாட்டுடைத் தலைவன் பெருமை யாங்காங்கு கூறும் காவிய இலக்கணத்தைப் பெறுவதாயிற்று. அன்றியும், தோற்றக் காலத்தில் 'உழத்தி' என்னும் பெண்பாற் பெயராற் பெயர் கொண்ட 'பாட்டு' சோழர்காலத்தில் 'பள்ளு' என்னுஞ் சாதியின் பெயரைப் பெறுவதாயிற்று. பள்ளர் — பள்ளமாகிய வயலில் வேலை செய்வோர். பள்ளி, பள்ளத்தி என்ற இரண்டும் பள்ளன் என்பதன் பெண்பாற் பெயர்களாய் அமைதல் காண்க. பள்ளம் + அத்து + இ — பள்ளத்தி; மகரமெய்யீற்றுப் பெயர்கள் இகர விகுதி பெறும்போது அத்துச் சாரியை பெறுதல் வழக்கு.

பள்ளன் பள்ளத்தி தோற்றினரே.
(ஞானப்பள்ளு, 13)

பள்ளத்தி யார்அழகு பார்க்க முடியாதே.
(முக்கூடற்பள்ளு, 7)

அன்புவைத்தாற் சண்டையுண்டோ தங்கைப்
பள்ளத்தி (திருமலை முருகன் பள்ளு, 184)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1732-இல் வீரமாமுனிவரால் இயற்றப்பட்ட சதுர கராதி என்னும் நூலில் வரும் தொகையகராதியில் 96 வகைப் பிரபந்தங்களின் இலக்கணங் கூறும் போது 'உழத்திப் பாட்டு' என்பதற்குப் பின்வரும் இலக்கணங் கூறுவர்:

"கடவுள் வணக்கம், முறையே மூத்தபள்ளி இளையபள்ளி குடும்பன் வரவொடு அவன் பெருமை கூறல், முறையே அவர் வரலாறு, நாட்டுவளன், குயிற்கூக் கேட்டல், மழை வேண்டிக் கடவுட் பரவல், மழைக்குறி யோர்தல், ஆற்றின் வரவு, அதன் சிறப்புக் காண்டல், இவற்றிற்கிடையிடை அகப் பொருட்டுறையுங் கூறிப் பண்ணைத் தலைவன் வரவு, பள்ளிகளிருவர் முறையீடு, இளையாளை அவன் உரப்பல், பள்ளன் வெளிப்படல், பண்ணைச் செயல் வினவல், அவன் அது கூறல், ஆயரை வருவித்தல், அவர் வரல், அவர் பெருமை கூறல், மூத்த பள்ளி முறையீடு, குடும்பன் கிடையிருந்தான் போல வரல், அவனைத் தொழுவில் மாட்டல், அவன் புலம்பல், மூத்தபள்ளி அடிசிற் கொடு வரல், அவன் அவளோடு கூறல், அவன் அவளை மன்னித்தல் கேட்க வேண்டல், அவள் மறுத்தல், அவன் சூளுறல், அவள் அவனை மீட்க வேண்டிப் பண்ணைத்தலைவனைப் பரவல், விதை முதலிய வளம் கூறல், உழவர் உழல், காளை வெருளல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளிகள் புலம்பல், அவன் எழுந்து வித்தல், அதைப் பண்ணைத் தலைவற்கு அறிவித்தல், நாற்று நடல், விளைந்தபின் செப்பஞ் செயல், நெல் அளத்தல், மூத்தபள்ளி முறையீடு, பள்ளிகளுள் ஒருவர்க்கொருவர் ஏசல் என இவ்வுறுப்புக்கள் உறப் பாட்டுடைத் தலைவன் பெருமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்காங்கு தோற்றச் சிந்தும் விருத்தமும் விரவி வர இவற்றூற் பாடுவது.''

வீரமாமுனிவர் உழத்திப்பாட்டுக்குக் கூறிய இந் நாற்பத்தெட்டு உறுப்புக்கள் பள்ளுப் பிரபந்தத்தின் உறுப்புக்களாம். சில பள்ளு நூல்கள் இவ்வுறுப்புக்களிற் சில குறைந்தும் மிக்கும் வருவன.

அமைப்பு

இங்கு ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பள்ளுநூல்கள் கதிரைமலைப் பள்ளு, ஞானப்பள்ளு, முக்கூடற் பள்ளு, திருமலை முருகன் பள்ளு, பருளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, சண்பகராமன் பள்ளு, வையாபுரிப்பள்ளு ஆகிய எட்டு ஆகும். ஒரு நூலின் அமைப்பு அது கூறும் பொருளிற் றங்கியிருக்கிறது என்பர். பள்ளுப் பிரபந்தத்தினுட் கூறப்படும் பொருள்களை இரண்டு முக்கிய பிரிவினுள் அடக்கலாம்:

1. மருதநில வருணனை.
2. பாட்டுடைத்தலைவன் பெருமை.

இவற்றுள் மருதநில வருணனை அந்நிலத்திற் பயிர் செய்யும் மக்களின் வாய்மொழியாக அமையும்: பள்ளன், அவன் மனைவியான மூத்தபள்ளி, ஆசை நாயகியான இளையபள்ளி, அவன் வேலைசெய்யும் பண்ணையின் உரிமையாளனாகிய பண்ணைத் தலைவன் ஆகிய நான்கு கதாபாத்திரங்கள் காவியமேடையிற் றோன்றி உரையாடி நடித்துக் காட்டும் பான்மையிற் பள்ளு அமையும். இக்கதாபாத்திரங்களின் பெயர்கள் சுட்டப்படலாகாது என்பது மரபு. சங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் தலைவன், தலைவி, காதற் பரத்தை எனப்பாத்திரங்கள் கொண்டமை போன்று பள்ளுநூல்கள் இயற்பெயரைக் கூறாது பாத்திரங்களின் ஊர்ப் பெயரால் அவரைச் சுட்டும்; சில பள்ளுநூல்கள் அவர்தம் நாட்டின் பெயரால் அவரைச் சுட்டும். செருசலைப் பள்ளி — ரோமாபுரிப் பள்ளி; மாவலிகங்கைப் பள்ளி — பகீரதாகங்கைப் பள்ளி, ஈழமண்டலப் பள்ளி — சோழமண்டலப் பள்ளி; வட காரைப் பள்ளி — தென்காரைப் பள்ளி; முக்கூடற்பள்ளி —மருதூர்ப் பள்ளி; வையாபுரிப்பள்ளி—தென் பழனிப்பள்ளி முதலிய பெயர்களால் முறையே மூத்தபள்ளியும் இளையபள்ளியும் அழைக்கப்படுதல் காண்க. பள்ளுப் பிரபந்தத்தில் வரும் பெரும் பாலான பாடல்கள் இவ்விருவர் கூற்றாக அமையும்.

பாட்டுடைத் தலைவனின் இயற்பெயர் பள்ளுப் பிரபந்தத்திற் கூறப்படும். திருமலை முருகன், தண்டிகைக் கனகராயன் முதலிய பெயர்களை நோக்குக. பாட்டுடைத் தலைவன் பெருமை கவிக் கூற்றாகவும் அமையும்; கவிக்கூற்றாக வரும் பாடல்கள் இயற்றமிழ்ப் பண்புமிக்கு வெண்பா, கலிப்பா, விருத்தம் முதலிய பாவகைகளில் யாக்கப்படும். பாட்டுடைத் தலைவன் பெருமையைக் கவிக்கூற்றாக வரும்பாடல்களிலன்றிப் பள்ளியர் குடித்தரங்கூறல், தலைவன் பெருமை கூறல், நாற்று நடுகை முதலிய இயல்களை வருணிக்கும்போதும் ஆங்காங்கு விரவிக் கூறப்படும். முருகன், விநாயகர் முதலிய கடவுளரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட கதிரைமலைப் பள்ளு, பருளை விநாயகர் பள்ளு என்பன தேவ பாணி வகுப்பைச் சாரும். தண்டிகைக் கனக ராயன் முதலிய புரவலர்களையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு மிகப் பிற்காலத்திற் பள்ளு நூல்கள் எழுந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியர் கூற்றாக வரும் பாடல்கள் சிந்து, தரு, ஏசல் முதலிய பாவினங்களில் அமையும். 'சிந்து' என்னும் பாவினமே பள்ளுப் பிரபந்தத்தின் உயிர் நாடி எனலாம். பள்ளன், பள்ளியர் கூற்றாக வரும் பெரும்பான்மையான பாடல்கள் 'சிந்து' என்னும் இசைத்தமிழ் வண்ணத்தில் அமையும். பொது மக்கள் பாடியாடும் நாட்டுப்பாடல் மெட்டுக்களிற் சிந்து அமைகிறது. பள்ளியர் கல்வியறிவு குறைந்தவராகையின் அவர் வாயிலிருந்து வரும் பாடல்களிற் சேரிமொழி விரவி வரும் என்பர். ஈழத்தெழுந்த பள்ளு நூல்களிற் சேரிமொழி அருகியும் தமிழகப் பள்ளு நூல்களிற் சேரிமொழி மிக்கும் வருவதை அந்நூல்களைப் படிப்போர் உணர்வர்.

இசைத் தமிழும் நாடகத் தமிழும் விரவ, சேரிமொழி கலந்த பேச்சு மொழியிலெழும் பள்ளு நூற்குப் பழந் தமிழிலக்கணங்களில் எடுத்துக் காட்டு இல்லையாயினும் அது

அம்மை யழகு தொன்மை தோலே
விருந்தே யியைபே புலனே யிழைபெனுஅப்
பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே
(தொல். பொருள் 313, 11-15)

எனத் தொல்காப்பியர் வகுத்துக் கூறும் எண்வகை வனப்பினுள் ஒன்றாகிய 'புலன்' என்பதன் பாற்படும் இசைப்பாட்டு, நாடகச் செய்யுள் வகையைத் தழுவியதாகக் கொள்வர் அறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே
(தொல். பொருள் 553)

என்பதுவே 'புலன்' என்னும் வனப்பின் இலக்கண மாகும். எனவே, பள்ளுப் பிரபந்தத்தின் அமைப் புக் கேற்ற வித்து பல நூற்றுண்டுகட்கு முன்னர் விதைக்கப்பட்டுவிட்டது.

மருத நிலத்து உரிப்பொருள் ஊடலாகும். இதுவே பள்ளுப் பிரபந்தத்தின் கதை வளர்ச்சியின் மையமாக விளங்குகிறது. எல்லாப் பள்ளு நூல்களி லும் பள்ளன் 'இரு பெண்டாட்டிக் காரனுக' அமை கிருன். இளையபள்ளி யென்னும் பாத்திரமில்லை யெனில் ஊடலுக்கு இடமேயில்லை. மூத்த பள்ளி உத் தமப் பெண்; இளையபள்ளி ஓர் ஆடையலங்காரக் காரி: பள்ளனும் அவன் மனைவியான மூத்த பள்ளியும் ஒரே ஊரினர்; அவனை மருட்டிய இளைய பள்ளி அய லூரினளாக அல்லது அயல் நாட்டினளாக வருணிக்கப் படுகிருள். காவிய மேடையில் முதலில் மூத்த பள்ளி யும், பின் இளைய பள்ளியும், அதன்பின் பள்ளனும் தோன்றுகின்றனர்; அவர்தம் குடிப்பெருமை கூறல், தலைவன் புகழ் கூறல், நாட்டுவளங் கூறல் ஆகியன பெரும்பாலான பள்ளு நூல்களில் மிகச் சிறு வேறு பாட்டுடன் அமைகின்றன. சில பள்ளு நூல்களில் நகர் வளங்கூறலும் காணப்படுகின்றது. சோழர் காலத்துக்காவிய மரபுக் கேற்ப முதலில் கடவுள் வணக்கம் அல்லது காப்பு என்பதனைப் பெற்று, நாட்டு நகர வருணனைகளை யுடைத்தாய்த் தன்னிக ரில்லாத் தலைவன் பெருமை கூறிப் பள்ளு என்னும் காவியம் வழிநடக்கிறது. பள்ளனதும் அவன் மனைவி மூத்தபள்ளியினதும் நாடே பாட்டுடைத் தலைவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுமாகும். இளையபள்ளி வேற்று ஊரினள் அல்லது வேற்று நாட்டினளாகையாற் பள்ளு நூல்கள் சில வற்றில் இரு வேறு நாடுகளின் வளன் கூறப்படுகிறது. 'ஈழ மண்டல நாடெங்கள் நாடே' 'சோழ மண்டல நாடெங்கள் நாடே' எனப் பறுளை விநாயகர் பள்ளில் இருபள்ளியரும் தத்தம் நாட்டுவளன் கூறுதல் காண்க.

எல்லாப் பள்ளு நூல்களும் 'பள்ளியர் ஒருவரை யொருவர் ஏசல்' என்னும் இயலுடன் முடிவு பெறு கின்றன. ஞானப்பள்ளில் 27 பாடல்கள் இந்நிகழ்ச் சியை வருணிக்கின்றன. சில பள்ளு நூல்களில் வாழ்த்துப் பாடல் ஈற்றிற் காணப்படுகின்றது. காவி யத்தின் நடுவில் இடம்பெறும் வருணனைகள் குயில் கூவல், மழை வேண்டல், மழை பொழிதல், ஆற்றில் வெள்ளம் வருதல், பண்ணைத் தலைவன் வரவு, விதைத் தல், நாற்றுநடுதல், அரிவி வெட்டுதல், சூடு வைத் தல், பொலி அளத்தல் என்னும் மருத நிலத்து நெல்வேளாண்மைக் கால நிகழ்ச்சிகளாகும். இவை யனைத்தும் பள்ளியர் பாடலாக அமைகின்றன. இந் நிகழ்ச்சிகளிடையே ஊடலுரிப் பொருள் வருணிக் கப்படுகின்றது. வயலுக்குள் வெள்ளம் வந்தும் பள்ளனைக் காணவில்லை; அவன் இளையபள்ளி வீட் டிற் கிடையாய்க் கிடக்கிறான் என மூத்தபள்ளி கூறும் பகுதி ஊடலைச் சிறப்பிக்கிறது. பள்ளனைப் பண்ணைத்தலைவன் வருத்த, மூத்தபள்ளி இரங்கி அவனை விடுமாறு கேட்கிறாள். மூத்தபள்ளி இரக்க வுணர்வுள்ளவளாகவும் இளையபள்ளி பெருமிதவுணர் வுள்ளவளாகவும் படைக்கப் படுகின்றனர். பள்ள னின் திண்டாட்டம் எல்லாப் பள்ளு நூல்களிலும் அழகுறச் சித்திரிக்கப்படுகிறது. நாடகங்களில் வரும் நகைச் சுவைப் பாத்திரமாகப் பண்ணைத் தலைவன் படைக்கப்படுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு கண்ணும் பருத்திப்பைக்
கூறை வயிறும் — கீரை
மத்துப் போல் தலையும் சுரை
வித்துப் போல் பல்லும்
நீறு போல் எழுந்த மூளை
யூறு நாசியும் — தட்டி
நெரித்த மாங்கொட்டை போல் ஈ
அரித்த வாயும்
தாறு மாருய் மீசையில் அஞ்
சாறு மயிரும் — தூங்கற்
சண்ணைக்கடாப் போல் நடையும்
மொண்ணை முகமும்
வேறு கீறி ஒட்ட வைத்த
ஏறு காது மாய் — நேமி
வீரஞர் முக்கூடற் பண்ணைக்
காரஞர் வந்தார். (53)

என முக்கூடற் பள்ளில் பண்ணைக்காரன் வரவு சித்திரிக்கப்படுகிறது. வயல் நாடக மேடையில் இவன் தோன்றும்போது பார்ப்போர் கைகொட்டிச் சிரிக்கும் நகைச் சுவைப் பாத்திரமாக விளங்குகிருன்.

சில பள்ளு நூல்களில் மாடுகளின் வகை, நெல்லின் வகை என்பன மிக விரித்துக் கூறப்படுகின்றன. இவை நூலெழுந்த காலத்து மக்களின் வாழ்க்கை முறைகளை அறிய உதவுவன. சில பள்ளு நூல்களின் பாக்களெண்ணிக்கை குறைவாகவும் வேறுஞ் சிலவற்றில் மிக்கும் காணப்படுகின்றன. ஞானப்பள்ளு 257 செய்யுள்களையுடையது; கதிரை மலைப் பள்ளு 130 செய்யுள்களையுடையது. ஏனைய பள்ளுநூல்கள் இந்த இரண்டு நூல்களின் பா எண்ணிக்கைக்கு இடைப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி

சங்க காலத்து மருத நிலப் பாடல்களான ஏர்மங்கலம், முகவைப்பாட்டு என்பன புரவலனையும் கூறும் பண்புடன் பத்துப் பாடல்கள் கொண்ட உழத்திப் பாட்டாகப் பல்லவர் காலத்தில் மலரலாயின என்பதைப் பன்னிருபாட்டியலின் துணைக் கொண்டு முன்னர் விளக்கினேம். இவ் உழத்திப்பாட்டு, காவியப் பண்புகள் பெற்றுத் தன்னிகரில்லாத் தலைவனை வருணிக்கும் சிற்றிலக்கியமாக ஏறக்குறையப் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் உருப்பெறலாயிற்றென நவநீதப் பாட்டியலின் துணைக்கொண்டு ஆராய்ந்தோம். இருபதாம் நூற்றாண்டிலே பள்ளு நூல்கள் எழுந்தனவாகக் கூற ஆதாரங் கிடைக்கவில்லை. எனவே, 1200—1900 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட எழுநூறு ஆண்டுகளிற் றோன்றி வளர்ந்த உழத்தியர்பாட்டு என்னும் பள்ளுப் பிரபந்தம் சிற்சில வகைகளில் மாற்றம்பெற்று வளர்ந்துள்ளதை அறிய முடிகிறது.

பள்ளினுள் அகப்பொருட்டுறைகள் விரவியும் வரும் என இலக்கணங் கூறுகின்றது. காலத்தால் முந்திய பள்ளு நூல்களில் இப்பண்பைக் காண முடியவில்லை. பிற்காலத்தெழுந்த பறாளை விநாயகர் பள்ளு, குருகூர்ப் பள்ளு, திருமலை முருகன் பள்ளு முதலிய நூல்கள் சிலவற்றில் மட்டும் இப் பண்பைக் காண முடிகிறது. உதாரணமாகப் பறாளை விநாயகர் பள்ளில் வரும் பின்வரும் துறைகளைக் குறிப்பிடலாம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிக்கரைப் புலம்பல்

விரைமலர் மேலறு காலிசை காளிசை
மேவுபருளையில் வாழ்
வரைகிழி வேலவ னினிய சகோதர
மதகய மாமுகனூர்
கரையொலி வார்கட லேதிரை யேசுற
வேகழி யேகயலே
யுரைமது நீண்மழை யேமய லோபெரி
தோதரி தோதரிதே.

என்னுஞ் செய்யுள் (64) தலைவன் பொருள்வயிற் பிரிவில் தலைவி யிரங்கலாகக் கூறப்படுகின்றது. இவ்வகப் பொருட்டுறைச் செய்யுள் 'குயில் கூவல்' என்பதற்கும் 'மழை கேட்டல்' என்பதற்குமிடையே புகுந்துள்ளது.

தலைவன் பொருள் வயிற் பிரிந்துழித் தலைவி வருத்தம் பாங்கி கூறல்

சங்கத்தை யேந்தும் பரஞ்சோதி நாதர்
சயிலமின்னூர்
புங்கத்தை வாய்ந்த மணிநீலப் பார்வை
பொலியுமுத்து
மங்கத்தி லேற்றிடு தங்கத்திற் பீருமுண்டா
யிருக்க
வங்கத்தி லேறித் தனந்தேடப் போனவர்
வந்திலரே.

என்னுஞ் செய்யுள் (106) 'பள்ளன் ஆண்டைக்குக் கணக்கொப்பித்தல்' என்னும் பகுதியின் பின் வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றுயிரங்கல்

காமன்மகிழ் மைத்துனனுர் பொன்னுலைப்
    பதியிலுறை காயா மேனி
மாமன்மகிழ் மருமகனுர் சுழிபுரம்வாழ்
    பரஞ்சோதி வரதர் நாட்டிற்
பூமகள்கேள் வனேயனேய கானேயுடன்
    தழல்வடவை பொங்கு கானிற்
சேமநிதி மங்கலமான் சீறடிவைத்
    தெவ்வாறு செல்கின் ருளே.

என்னும் நற்றுயிரங்கற் செய்யுள் (115) 'நாற்று நடவு' என்னும் பகுதியிற் கூறப்பட்டுள்ளது. இவ் வகைப் பொருட்டுறைப் பாடல்கள் காவியத்தின் இயற்கை நடையை ஊறு செய்கின்றன எனலாம். பொருத்தமில்லாத இடங்களில் புலவனின் வித்துவத் தன்மையைக் காட்டுதற்காக வலிந்து நுழைக்கப்பட்டனபோன்று இச்செய்யுள்கள் காட்சி தருகின்றன. இதுபோன்றே 'மாலேயிரத்தல்' (58), வண்டு விடுதூது (109) என்னும் இரு அகப்பொருட்டுறைச் செய்யுள்கள் திருமலே முருகன் பள்ளிற் கூறப்படுகின்றன.

'பள்ளியர் கும்மி யடித்தல்' என்பது பள்ளுப் பிரபந்தங்களுக்குக் கூறப்பட்ட இலக்கணங்களுள் ஒன்றன்று. ஆயினும், திருமலே முருகன் பள்ளில் 'குயிற்சிந்து' என்பதன் பின் 'பள்ளியர் கும்மி யடித்தல்' (28 — 39) என்னுந்துறையில் பன்னிரண்டு பாடல்கள் கூறப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்மி

கும்மியடி பெண்ணே கும்மியடி — இரு
கொங்கைகளுங் காப்புங் குலுங்கத்
தெம்முனை வேலனைக் கொண் டாடிச்
சேர்ந்து கும்மி யடியுங்கடி. (29)

பள்ளியரே வட்டம் போடுங்கடி — ஐயன்
பன்னிரு தோள்வெற்றி பாடுங்கடி
கள்ளை எடுத்துக் குடியுங்கடி — கூடிக்
கட்டாய்க் கும்மி யடியுங் கடி. (30)

சிறுக்கி அழகி யுதட்டுக் குள்ளே
சிரிக்கும் வெறியிடு செம்மிமகன்
கறுப்ப னவளை யணைத்து தட்டைக்
கவ்விச் சுழன்று விழுவது பார். (33)

வாகாக் கொண்டை முடியுங்கடி — முலை
மாராப்பைக் கட்டி யிறுக்குங்கடி
ஆகா வழிம்புத் திருமலைப் பள்ளன்
அண்டாமற் கற்கொண் டெறியுங்கடி. (34)

என வரும் பாடல்கள் நான்கும் மேற்படி கும்மிப் பாடல்களுட் சிலவாம். இப்பாடல்கள் மிக்க சுவையுள்ளன. சின்னத்தம்பிப் புலவர் தம் வித்துவத் தன்மையைக் காட்டச் சிறந்த அகப்பொருட்டுறைப் பாடல்களைத் தம் நூலில் வலிந்து கூறியது போன்று பெரியவன் கவிராயரும் திருமலைமுருகன் பள்ளில் அகப்பொருட்டுறைகளையும் கும்மியையும் பாடினர். இவர்கள் குருகூர்ப் பள்ளினைப் பின்பற்றினரெனலாம். காலத்துக்குக் காலந் தோன்றிய பள்ளுப் பிரபந்தங்கள் நூலாசிரியனின் கற்பனை ஆற்றலுக் குத்தகப் புதிய புதிய அமிசங்களைக் கொண்டு வளரலாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும், காலத்தால் முந்திய பள்ளு நூல்களின் பாட்டுடைத் தலைவன் இறைவனுவான். பிந்திய காலத்தில் எழுந்த நூல்களாகிய தண்டிகைக் கனகராயன் பள்ளு, வடகரைப் பள்ளு முதலியன வள்ளல்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு செயற்கை அமிசங்கள் பெற்ற நடையில் அமையலாயின. பண்டைக் காலத்திற் பத்துப் பாடல்கள் கொண்டமைந்த உழத்திப்பாட்டு 'புரவலற் கூறி' என்றே இலக்கணம் பெற்றுள்ளது. அக்காலத்திய புரவலன் பண்ணைத் தலைவனுகவோ வள்ளலாகவோ இருந்திருக்கலாம். ஆனல் தெய்வங்களை வாழ்த்திய பண்பு உழத்திப்பாட்டுப் பாடப்பட்ட ஆரம்ப காலத்தில் இருந்திருக்கவில்லையெனலாம். எனவே கதிரைமலைப் பள்ளு, ஞானப்பள்ளு, முக்கூடற்பள்ளு முதலியன தாமெழுந்த காலத்துப் பண்பிற்கேற்பத் தெய்வத்தின் பெருமை கூறும் பண்பினவாய் அமையலாயின. பின்னும் 19-ஆம் நூற்றுண்டில் உபகாரிகளைப் பாடும் மரபு வழக்குப் பெறலாயிற்று. இக்காரணத்தால் 'புரவலற் கூறி' எனப் பண்டு கூறப்பட்ட பண்பு மீண்டும் பள்ளுப் பிரபந்தங்களில் இடம் பெறலாயிற்று எனலாம்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பின்னர் பள்ளு நூல்கள் தோன்றுமைக்குப் பல காரணங்கள் உள; அவற்றுள் முக்கியமானது, மக்கள் வாழ்க்கை முறைகளில் ஏற்பட்ட பெரும் மாறுதல்களின் பயனுய்ச் சாதிப் பிரிவினையை வலியுறுத்தும் கோட்பாடுகளைக் கொண்ட இலக்கிய வகைகளை மக்கள் எழுதுவதற்குச் சமுதாயத்தின் ஆதரவு கிட்டாமையாகும். இரண்டாவதாக, சமுதாயச் சீர்திருத்தத்தின் கருவியாக இலக்கியச் சிந்தனைகளை வழிப்படுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளில் கணவன் மனைவியரிருவரின் கைப்பட்டுத் திண்டாடும் வாழ்க்கை முறையைச் சித்திரிப்பது ஓர் இலட்சிய நெறியாகாது என நூலறிபுலவர் கருதிப் 'பள்ளு' முதலிய பிரபந்தவகைகளைப் பாடத் தலைப்பட்டிலர் எனக் கூறலும் பொருந்தும்.

பரணி, உலா, பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்த வகைகள் புத்துயிர் பெற்றுத் தழைப்பதற்கேற்ற சூழல் இன்று காணப்படவில்லை யெனினும் பள்ளு நூல்கள் பெயர்மாற்றம் பெற்றோ அமைப்பிற் சிறிது மாற்றம் பெற்றோ மீண்டும் வாழ்வு பெறுவதற் கேற்ற அறிகுறிகள் இன்று தோன்றுகின்றன.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

என்னும் வள்ளுவர் வாக்கைக் கடைப்பிடிக்க இன்று மக்கள் மீண்டும் தலைப்படுகின்றனர். அரசாங்கத்தினரும் 'ஏர்மன்னர்'களைத் தெரிந்து அவர்களே நாட்டின் தலைவர்களௌன மக்களுக்குப் பறைசாற்றி வருகின்றனர். கல்லூரி மாணவரும் வயல்வேலையின் உயர்வைக் கருத்திற்கொண்டு ஓய்வு நேரங்களை வயல்களில் உபயோகப்படுத்துகின்றனர். உழத்தியர்பாட்டானது பள்ளுப் பிரபந்தமாக மாற்றுருப் பெற்றது போல் வருங்காலத்தில் 'ஏர்மன்னர் காவியம்' முதலிய புதுப்பெயர் புனைந்த இலக்கியம் தோன்றி இரசிகர்களுக்கு நல் விருந்தாகும் என எதிர்பார்ப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பள்ளு நூலாராய்ச்சி

நூற் பெயர்

கத்தோலிக்க சமயத்தைப் புகழ்ந்து இயேசு நாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு விளங்கும் இந்நூல் 'ஞானப்பள்ளு' எனப் பெயர் பெறும்.

ஆதி கத்தன்தி ருவேத மாகிய
அருப ஞானத்தை யம்புவி மீதிலே
நீதி யுற்றசொ ரூபம தாகிய
நீண்ட ஞானநி றைந்தபள் ளோதிட . (2)

எனவரும் இந்நூற் பாடற்பகுதியில் 'ஞானநிறைந்த பள்' எனச் சிறப்பிக்கப்படுவது கொண்டு இதற்கு ஞானப்பள்ளு என்னும் பெயராயிற் றெனலாம். கிறித்து நாதரே ஞான வடிவமானவர் என்பதை ஆசிரியர் பலவிடங்களிற் கூறுகிறார்.

'வண்மை ஞானப் பெலசொரூ பத்திஞன்' (53)

'ஞானக் கிறீஸ்து' (77)

என வருஞ் சொற்றொடர்களை நோக்குக. நூலினுள் கவிக்கூற்ருக வரும் 29 அறிவுறுத்தற் பாடல்கள் ஞானத்தின் மேன்மையையும் உலக வாழ்க்கையின் நிலையாமையையும் மக்களுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிப்பன. எனவே ஞானமே உருவாயினரது புகழைக் கூறும் நூலுக்கு ஞானப்பள்ளு எனப் பெயராயிற்று.

இந்நூலுக்கு 'வேதப்பள்ளு' என்னும் பெயரும் உண்டு என்பர். அவர் கூற்றுக்கு ஆதாரமாக

'அறைந்த வேதபள் ளானதி னிக்கதை' (4)

'நிமலன் றிரு வேதபள் ளின்னிசை நெறிகூற' (6)

'செம்பொன்பத மேவிய வேதபள்
ளிசைபாட' (8)

'வேதபள் ளாகிய விசைபாட' (11)

எனவரும் அகச்சான்றுகளைக் காட்டலாம்.

நூலாசிரியர்

கதிரைமலைப் பள்ளு, முக்கூடற்பள்ளு முதலிய பள்ளு நூல்களின் ஆசிரியர் பெயர் தெரியாதிருப் பது போலவே இந்நூலாசிரியரின் பெயரும் தெரிய வில்லை. ஆயினும் இவர் ஒரு கத்தோலிக்க சமயத் தவரென்பதும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள ஓர் ஊரில் வாழ்ந்து வந்தவரென்பதும் நூலகச் சான்று மூலம் தெரியவருகின்றது.

தழைவுபெற்ற யாழ்ப்பாண
சத்தியகி றிஸ்துவர்கள்
சந்ததமும் வாழவே—கூவாய் குயிலே (85)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் குயிற்பாட்டின் இறுதிச் செய்யுளில் யாழ்ப் பாணத்துக் கிறித்தவர்கள் வாழ்த்தப்படுவது காண்க. தெல்லிப்பழைவாசியாகிய பேதுருப் புலவர் 1647 ஆம் ஆண்டில் அர்ச். யாகப்பர் அம்மானை என்னும் நூலைப் பாடினர் என அவ் அம்மானை நூலின் பாயிரம் கூறுகின்றது. இப் பேதுருப் புலவருக்கும் ஞானப்பள்ளின் ஆசிரியருக்குமுள்ள தொடர்புபற்றி யாதும் அறிய முடியவில்லை. இது மேலும் ஆராயத்தக்கது.

நூலின் காலம்

இந்நூலெழுந்த காலம் இதுவெனத் திட்டமாகக் கூறுவதற்கேற்ற அகச்சான்றுகள் ஒன்றும் அகப்படவில்லை.

'பேரான பாராளும்
பிடுத்துக்கால் மனுவென்றன்
பிறதானம் வீசவே—கூவாய் குயிலே' (84)

என்னும் குயிற்பாட்டிற் பாராளும் போர்த்துக்கல் (பிடுத்துக்கால்)மன்னன் வாழ்த்தப்படுவது கொண்டு போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்ட காலப் பகுதி முடிவதற்குள் இந்நூல் பாடப்பட்டது என்பர். அவர் 1658 - ஆம் ஆண்டுவரை இலங்கையை ஆண்டனர் என வரலாறு கூறும். 'பாராளும்' என நிகழ் காலத்தால் மன்னனின் ஆட்சி சுட்டப்படுவது காண்க. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ஞானப்பள்ளு எழுந்த காலம் 1642 எனத் தம் நூல்களிற் பலவிடங்களிலே குறிப்பிடுகிறுர். அவர் கொண்ட ஆதாரங்கள் எவையென்பது புலப்படவில்லை. பேதுருப் புலவர் அர்ச். யாகப்பர் அம்மானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய காலம் 1647 எனப் பாயிரத்தால் திட்ட வட்டமாக அறிய முடிகின்றமையின் கத்தோலிக்கமத நூல்கள் பல அக்காலச் சூழலிற் றோன்றினவெனக் கொள்வதும் பொருத்தமுடைத்தாகும்.

நூற்பொருள்

கிறித்து பெருமானின் புகழைப் பாடுதலே ஞானப்பள்ளு என்னும் இந்நூல் நுதலிய பொருளாகும். ஆசிரியரின் ஆழ்ந்த சமயப்பற்றே நூலியற்றற்குக் காரணமாயிற்றெனலாம்.

ஈறில் லாதவன் ருனுயி ருப்பவன்
என்றும் உள்ளவன் எல்லாம றிந்தவன்
மாறில் லாதவன் மாட்சிமை யுள்ளவன்
வளரு நன்மைச்சொ ரூபம தானவன்
பேறு தானவன் பேரின்ப முள்ளவன்
பிறந்தி றக்குஞ்ச ரீரமில் லாதவன்
ஆறு லட்சண முள்ளவ னேகனு
மவனே கத்தன றிந்துகொள் நெஞ்சமே
(21)

அண்டர் வானும் புவியும்ப டைத்தவ
ரத்த னைக்குமு பகார மானவர்
துண்ட வான்மதி சூரிய னைச்செய்து
தொல்பு விக்குத் துணையாக வைத்தவர்
தொண்டர் ஞானிகள் தோத்திரம் பண்ணவே
சுருதி தந்து துணையா யிருப்பவர்
கண்டெந் நாளு மளவிடொண் ணுதவர்
கர்த்த ரானவ ராகுமென் நெஞ்சமே (51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவரும் அறிவுறுத்தற் பாடல்கள் கத்தோலிக்க மதப்பற்றை மக்களிடையே பெருக்குதலே ஆசிரியரின் தலையாய நோக்கம் என்பதைக் காட்டுகின்றன. வயல் வேலைசெய்யும் மக்கள் ஆடியும் பாடியும் மகிழ்ந்து உரையாடுவதாக வைத்துப் பாடப்படும் பள்ளுப்பிரபந்த அமைப்பினை ஆசிரியர் பாட்டுடைத் தலைவராகிய கிறித்துபெருமானின் பெருமையை மிகுத்துக் கூறுவதற்காகப் பயன்படுத்திக்கொண்டா ரெனலாம். ஏனைய பள்ளுப் பிரபந்தங்களிற் காணப்படும் சிருங்காரரசம் இந் நூலில் இல்லை.

நூலில்வரும் பாத்திரங்கள்

மூத்தபள்ளி, இளையபள்ளி, பள்ளன் பண்ணைக்காரன் ஆகிய நால்வருமே இந்நூலிற் றோன்றி நடிக்கும் பாத்திரங்களாகும். இவருள் மூத்தபள்ளி, பள்ளன் ஆகிய இருவரும் கிறித்து பெருமானின் பிறப்பிடமாகிய செருசலை (Jerusalam) நாட்டவர்; இளையபள்ளி கத்தோலிக்க திருச்சபையினதும் பாப்பாண்டவரினதும் தலைமைப் பீடமான உரோமாபுரி (Rome) நாட்டவள்; பண்ணைக்காரன் உரோமாபுரி யென்னும் பண்ணைவயலுக்கு உரிமையாளன்; இந் நால்வருள் மூத்தபள்ளி, இளையபள்ளி ஆகிய இருவரைச் சுற்றியுமே கதை வளர்கிறது. பள்ளனின் முதல் மனைவி மூத்தபள்ளி; இரண்டாம் மனைவி இளையபள்ளி. இக்கதாபாத்திரங்கள் தத்தம் இயற் பெயர் கொள்ளாது கிறித்து பெருமானின் பெயரையோ அன்றி அவர்தம் பதிகளுடன் தொடர்புபட்ட பெயரையோ கொள்வர்; எனவே மூத்த பள்ளி செருசலைப்பள்ளி; இளையபள்ளி றோமைப் பள்ளி; பள்ளன் தன்மகுணப்பள்ளன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெரும்பகுதி கிறித்து பெருமானின் புகழைச் செருசலைப்பள்ளி, ரூமைப்பள்ளி ஆகிய இருவரின் வாயிலாகக் கூறும் பாடல்களாக அமைந்துள்ளது. பள்ளியர் பெயர்ப்பெருமை கூறல், நாட்டுவளம், பள்ளியர் தலைவன் பெருமை கூறல், பள்ளிகள் ஒருவரை யொருவர் ஏசல் ஆகிய பகுதிகளிற் செருசலைப்பள்ளியும் ரூமைப்பள்ளியும் தத்தம் நாடுகளுடன் தொடர்புபட்ட கிறித்தவ வேதத்தின் சிறப்பையும், தலப்பெருமையையும் கர்த்தனின் புகழையும் வருணிக்கின்றனர்.

மூத்தபள்ளி

காவியமேடையில் ஆசிரியர் முதன்முதல் நடமாடவிடும் பாத்திரம் மூத்தபள்ளியாகும். இவளே காவியத்தின் கதாநாயகியும் பள்ளனின் முதல் மனைவியுமாவாள்; எனவே இவளை வருணிக்கு மாசிரியர் இவளின் மங்கலகரமான தோற்றத்தைக் கூறும்போது நெற்றியின் திலகத்தை வருணித்துச் செருசலைநாட்டிற் பிறந்த பள்ளியையும் ஒரு தமிழ்ப் பெண்ணாக ஆக்கி விட்டார்.

'அழகாய் முடிதிருத்தி யதனில் மலரிருத்தி
யாலோ னிகரென வேதில
தம்பொருத்தி' (13)

என முதல் மனைவியின் நெற்றியில் திலகத்தைக் காட்டுவது மங்கலநாணெனக் கருதும் காவியமரபு போலும். முக்கூடற்பள்ளிலும் மூத்தபள்ளி முதன்முதலில் அறிமுகப்படுத்தப்படும் போது அவளின் நெற்றித் திலகத்தை ஆசிரியர் வருணிப்பதைப் பின்வரும் அடிகள் காட்டும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நெற்றியி லிடும் மஞ்சணைப் பொட்டும்
மற்றொரு திருநாமப் பொட்டும்
நெகிழ்ந்த கருங் கொண்டையும் ரெண்டாய்
வகிர்ந்த வகுப்பும்' (6)

ஞானப் பள்ளில் மூத்தபள்ளியை மேலும் வருணிக்கும் ஆசிரியர் 'மங்கல மிகப்பெருக வாகுபுரிகுழலில் மாலையுமிட்டு' (13) எனக் கூறுவதால் அவளின் மங்கலத் தோற்றத்தைக் காண்பதே அவரின் நோக்கமென்பது புலப்படுகின்றது.

இளையபள்ளியின் வசீகரத் தோற்றத்திலும் வாய் மயக்கிலும் தன்னைப் பறிகொடுத்து அவளின் வீட்டிலேயே அதிக நாட்களைக் கழிக்கும் பள்ளனின் செய்கையைக் கண்டிக்கும் மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் முறையிடும்போது கூறுங் கூற்று பரிதாபமாகக் காணப்படுகிறது:

'நீதமற என்னைவிட்டு ரோமாபுரியில்
நித்தியமும் பள்ளியுட னேச மேயானன்
ஏதுபிழை யேயறியே னென்னிடத்திலே
எல்லாமாண்டை தானறியு மென்றே
கூறினள். (116)

மூத்தபள்ளி தான் பள்ளனுக்கு ஏது பிழையுஞ் செய்ய வில்லையே என்று தன்னை நோகிருள். அவள் செய்த பிழைதான் என்னே? தான் மூத்த மனைவியை விட்டு இளையாளைத் தேடி உரோமாபுரிக்குப் போனதற்கான காரணத்தைப் பிறிதோரிடத்தில் பள்ளன் பண்ணைக்காரனிடம் ஒப்புவிக்கிருன்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியான இவளையும் மற்றுள்ள
சங்கை தேடுந் தனவான்கள் தம்மையும்
நீதி யாய்விட்டு நீண்டவு ரேழைமையில்
நித்தி யமும் நினைத்தேனே ஆண்டே (178)

சாதியையும் பணத்தையும் அடிப்படையாகக் கொண்ட உயர்ந்த சங்கையை நம்பியே செருசலைப் பள்ளியும் அங்குள்ள தனவான்களும் வாழுகிறார்கள் எனப் பள்ளன் குறைகூறுவது ஈண்டு குறிப்பிடத் தக்கது. இதுவே அவன் செருசலையை விட்டு உரோமாபுரிக்குப் போனதற்கான காரணம் எனக் கூறுவதிலிருந்து பாப்பாண்டவரின் இராசதானி யாகிய உரோமாபுரியின் பெருமை மறைமுகமாகக் கூறப்படுகிறது. எனவே இக்குறைபாட்டை மூத்த பள்ளி உணர்ந்திராததால் தான் பிழையாதும் செய்ய வில்லை எனக் கூறுகிறாள்.

வயலுழும் பள்ளனை எருது முட்ட அவன் மூர்ச் சித்து விழுந்ததைக் கண்ட மூத்தபள்ளி புலம்பும் பின்வருஞ் சோகப் பாடல்கள் சோகத்தின் சிகரத் தைத் தொட்டு நிற்கின்றன:

தெண்டிரை சூழும் புவிதனில் வந்திருந்த
தேவனுக் குகந்த பள்ளனே
கண்ட சோபமே துனக்கையோ என்கொடுமை
காணேன் மாயமாகி நின்றாயோ? (202,3-4)

பெரியபண்ணை பார்ப்பவராரோ நீதிக்கென்
பிள்ளைகளு நானுமுய் வோமோ?
சரியொருவ னுன்னை நிகரோ எனது
தன்மப் பள்ளனே யெழுந்திராய் (203,3-4)

பள்ளனின் உழைப்பில்லாவிட்டால் தானும் பிள்ளை களும் வாழ்வதெப்படி யெனக் கூறி மூத்தபள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்புவது இப்பாடற் பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளது.

மூத்தபள்ளியை ஏசும் பாடல்களில் அவளின் நாட்டிலுள்ள குறைகளை இளையபள்ளி கூறுவது காவிய மரபு. கத்தோலிக்க மதத்தின் தலைமைப் பீடமாகச் செருசலைநகரம் அமையாததற்குரிய காரணங்களை இளையபள்ளி கூறும்போது அவை யாவும் மூத்தபள்ளியின் குறைகளாகப் பின்வரும் பாடல்களிற் காட்டப்பட்டுள்ளன:

ஆண்டவருந் தானறிவார் நீண்ட ரோமை
அர்ச்சியசிட் டசபையி லன்பு டையோராய்
ஆண்டவருந் தானறிவா ரென்கரு மங்கள்
அத்தனைகாண் காணியார்க்கு விண்ணப்
பஞ்செய்தேன்
வேண்டாண்மைகள் மெத்தவுண்டு மூத்த
பள்ளிதான்
வேத னுக்கந் நாளிற்செய்த தேதுந் தவிர
நீண்ட தன்ம மொன்றுஞ் செய்யாள் என்னை
யுந்தேடாள்
நித்தம் பூசை தானுங் காணாள் நேச
மும்பேணாள் (229)

இட்டமுடனே தூயவர் கிட்டி டாமலே
எத்தனைவகைகள் எண்ணி யின்ன மும்வேத
கட்ட ளையெல் லாந்த விர்த்துத் தன்ம
னப்படி மூத்த
காரிகை நடப்ப தெல்லாங் கண்டு
கொள்ளுமே. (230)

கிறித்து பெருமான் அவதரித்த நாளில் செருசலை மக்கள் அவர் பொருட்டுச் செய்தனவற்றைத் தவிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலங்களில் அவரின் பெருமையை உலகுக்குக் கூற ஏற்றநடவடிக்கைகள் ஒன்றும் எடுக்காது சமயக் கொள்கைகளுக்கு எதிராக வாழ்ந்து வருகின்றனர் எனக் கூறி மூத்தபள்ளிக்கு அவதூறு செய்கிருள் இளையபள்ளி.

இளையபள்ளி

பள்ளனை முறைப்படி விவாகஞ் செய்யாது அவனின் அன்புக்கும் இன்பத்துக்கும் பாத்திரமாய் வாழ்ந்துவருபவள் இளையபள்ளி. இவள் தன் அழகினுலே பள்ளனை வசீகரிப்பதுடன் முதல்மனைவியை எட்டியும் பாராதபடி அவனுக்கு ஆவன செய்து கொடுப்பள். இவளுடைய நடையலங்காரங்களைப் பற்றிப் பள்ளுப் பிரபந்தங்களெல்லாம் சிறப்புறக் கூறும். ஏனைய பள்ளுநூல்களில் இளையபள்ளிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைக் காட்டிலும் ஞானப்பள்ளில் அதிகமாகக் கொடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. காரணம் நூலாசிரியர் கத்தோலிக்கரானமையின் அம்மதத்தின் தலைமைப் பீடமான உரோமாபுரியை இழித்துக் கூறுவது பொருந்தாது. எனவே உரோமாபுரியின் பெருமை இளையபள்ளியின் பெருமையாகையின் அவள் காவியத்தின் கதாநாயகியாகிய மூத்தபள்ளிக்குச் சற்றும் இளைத்தவளல்லள் என இக்காவியம் காட்டுகிறது.

இளையபள்ளியை முதன் முதலில் அறிமுகஞ் செய்து வைக்கும் ஆசிரியர் பின்வருமாறு கூறுகிருர்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதமிரண்டு நடமுயன்று பரிபுரங்கள் புலம்பப்
பகைவிளங்கு முடலுலக மலகையங்கே
மலங்க
அதமுமவன் பிதிர்வழியுள் ளவர்கள்கெதி
யடைய
அர்ச்சியசிட்ட சபையின்மிக அறந்தினமும்
விளங்க
மதமுடைய வெழுத லையின் பாவமெலா
மழுங்க
மகிமையுள்ள வரமேழும் வானவரு மிலங்க
உதவுநன்மை தமக்கெல்லாம் உகந்தபுவி யான
ரோமானுநகர்ப் பள்ளத்தி உகந்துதோற்றி
னளே. (16)

இப்பாடலில் 'பதமிரண்டு நடமுயன்று பரிபுரங்கள் புலம்ப' என்னும் அடியில் இளையபள்ளியின் நடையலங்காரத்தை வருணிக்கத் தொடங்கி 'உதவு நன்மை தமக்கெல்லாம் உகந்த புவியான ரோமானு நகர்ப் பள்ளத்தி' என்னும் அடியில் அவளின் இருப்பிடமான உரோமாபுரியின் பெருமையை இணைத்துக் கூறுவது நோக்கத்தக்கது.

தன்னுடைய கணவனுகிய தன்மகுணப் பள்ளனை இளையபள்ளி வசமாக்கிக் கொண்டாள் என்று மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் முறையிட்ட போது அதற்கு இளையாள் கூறுகிருள்:

கூறியென்ன நீகுழப்பங் குற்றங்
களல்லோ — வாண்டே
கோதிலாத தன்மக்குணப் பள்ளன்
றன்னையே
ஆறியிரு மென்றென்னிட மாக்கி யேவிட்டார்
ஆனதினு லன்புகொண்டே னுதரவிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீறியழப் பெற்றதாயும் சீடர்களுந்தான்
சிலுவைதன் னைச்சுமத்தித் தேவன்மகனைத்
தாறிருப்பி ஞலறைய மெய்பொருந்திய
சத்துருநீ யல்லவோ சாற்றடிபள்ளி. (117)

இப்பாடலில் 'கோதிலாத தன்மக்குணப் பள்ளன் றன்னையே ஆறியிரு மென்றென்னிட மாக்கியே விட்டார் ஆனதிஞு லன்புகொண்டே ஞுதரவிலே' என இளையாள் சாதுரியமாக விடைகூறுவது மகிழ்ந்து இன்புறத்தக்கது.

இளையபள்ளி ஓர் அகங்காரங் கொண்ட பெண்; அவளுடைய பேச்சில் கோபத்தொனி அடிக்கடி பிறக்கும். தன்னைக் குறைசொல்லப் பொருதவள் அவள். மூத்தபள்ளி குறைகூறியபோது பின்வருமாறு விடையிறுக்கிருள் இளையபள்ளி:

பாரழியுங் கால மின்ன மந்த ரத்திலே
பன்னிருவ ரோடுகர்த்தன் வாற
துகண்டால்
ஆரடியெதிர்ப் பாயுன் மக்க ளும்நீயும்
அப்பறிவா யிப்பறியாய் தப்ப றை காறி
(254)

என்னும் பாடலில் வரும் 'அப்பறிவாய் இப்பறியாய் தப்பறை காறி' என்னும் அடியில் உள்ள றகர மெய்கள் இளையபள்ளியின் கோபப் பேச்சின் அறிகுறிகளாய் நிற்பதைக் காணலாம். இயேசுநாதருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தவறிவிட்டது செருசலை நாடு என அவள் அடிக்கடி கூறி மூத்தாளை வைகிருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளன்

இவனின் இயற்பெயர் காவியத்திற் கூறப்படலாகாது. கிறித்து பெருமானின் குணங்களில் ஒன்ருகிய' தன்மக் குணம்' என்னும் பெயரால் காவியத்தில் அழைக்கப்படுகிருன். 'நீதியான நீணிலத் தினிறுத்து தன்மத்திஞல்' (4) எனக் கிறித்து பெருமான் புகழப்படுதல் காண்க.

'தன்மப் பள்ளனுமக் காசை
கொண்டால்' (233)

'கோதிலாத தன்மக்குணப் பள்ளன்
றன்னையே' (117)

'பழுதில்லாத் தன்மகுணப் பள்ளனும்' (16)

'தன்மக்குணப் பள்ளனைப் பார்த்து' (189)

என்னும் அடிகளிற் பள்ளனின் சிறப்புப் பெயர் கூறப்படுதல் காண்க. இவனை முதன்முதலிற் காவியத்தில் அறிமுகஞ் செய்து வைக்கையில் ஆசிரியர் பின்வருமாறு வருணிக்கிருர்:

இடையினிலே கயிறுகட்டி இந்திரிய மொடுக்கி
இதமாக எரிசுடரை யிருகரத்தி லேந்தி
உடையவன்றன் வயலான உலகத்தா ரகத்தை
ஒப்பாக மண்வெட்டி யொருதோளிற்
சுமந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடியுங்கன உடமையுஞ்சொல் மீருத தயவும்
மேற்குருவி னிடமாக மேதினி விளங்கும்
படிருேமை நகராளும் பாப்புசொல்லுக்
கிணங்கும்
பழுதில்லாத் தன்மக்குணப்பள்ளனுந்
தோற்றினனே. (17)

இப்பாடலில் தன்மகுணப் பள்ளன் மனஅடக்க மும், தயவும் தன்மமும் மேலோருக்குக்கீழ்ப்படி வும் போப்பாண்டவரின் கட்டளையை ஏற்றலும் ஆகிய அருங்குணங்களுடையவனுகச் சித்திரிக்கப் பட்டுள்ளான்.

அடுத்ததாகப் பள்ளன் காவியத்திற் ருேன்று மிடம் பண்ணைக்காரனுக்குக் கணக்குக் கூறும்போ தாகும் பண்ணையிலேயிருக்கும் மண்வெட்டி, ஏர், மாடு முதலியவற்றின் எண்ணிக்கையை எசமானு கிய பண்ணைக்காரனுக்குக் கூறும்போது மூத்தபள்ளி குறுக்கிட்டுப் பள்ளன் கூறுவது பொய் என்கிருள்; அப்போது பண்ணைக்காரன் மீண்டும் வினுவுகிருன்: பின் மூத்தபள்ளியானவள் பள்ளனை ஆக்கினைசெய் யும்படி வேண்ட அவன் பள்ளனைக் குட்டையில டைக்கிருன்; மூத்தபள்ளி பரிவுகொண்டு அவனை விடுதலை செய்விக்கிருள்; பின் அவன் வயலை உழு கிருன்; எருதுமுட்ட மூர்ச்சித்து விழுகிருன். பின் பள்ளியர் இரங்கியழ எழுந்து நெல் விதைக்கிருன்;

காவியத்திலே பள்ளன் உரையாடும் இடங்கள் மிகச் சிலவே; அவனின் பண்பை ஆசிரியர்

'ஆண்டவ னுரைத்த வார்த்தையின் படியே
ஆகிய தன்மக் குணமெனும் பள்ளன்'
(199 - 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார். இவன் தன் முதல்மனைவியான செருசலைப் பள்ளியை விட்டு உரோமாபுரிப் பள்ளியுடன் நேசவுறவு கொள்ளத் தொடங்கியபின் ஊடல் என்னும் உரிப் பொருள் சிறப்பிக்கப்படுகிறது. மருதநிலத்து மக் கள் வாழ்க்கையைச் சித்திரிப்பது பள்ளுப் பிரபந்த மாகையால் உரிப்பொருளின்றி நடத்தல் காவியத் திற்குப் பொருந்தாது. எனவே காவியத்தை நகைச் சுவைமிக நடத்திச் செல்வதற்குப் பள்ளன் என் னும் பாத்திரம் கருவியாகிறது.

பண்ணைக்காரன்

அருவருக்கத்தக்க தோற்றமுடையவனாகப் பண்ணைக்காரனைச் சித்திரித்தல் பள்ளுப் பிரபந்த மரபு. உலகத்தில் எங்காவது காணுதற்கரிய அழ கில்லா மானிடனாக முக்கூடற் பள்ளு, கதிரை மலைப்பள்ளு முதலியன இவனை வருணிக்கின்றன; கதிரைமலைப் பள்ளில் பண்ணைக்காரனின் உடற் றோற்றம் பின்வருமாறு வருணிக்கப்பட்டுள்ளது:

சுற்றித் திரித்தபழு தைப்புரிபோல் வாகும்
— மிக்க
தொந்திவயி றும்வளையற் காலினழகும்
வற்றிப்போன வாரணம்போல்
மார்பினழகும் — சுட்ட
வட்டப்பானைபோ லுள்ளமொட்டந்
தலையழகும்
உற்றுப் பார்க்க வச்சமான கூகைமுகமும்
— தெத்தல்
ஓலைச்செவி யூசற்பாசிப் பல்லினழகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றப்பாலே விட்டுப்போன வொட்டற்
காதும் — பெற்ற
தனிப்பண்ணைக் காரனுருந்
தோற்றினுரே. (51)

ஞானப்பள்ளிலோ பண்ணைக்காரன் கண்ணுக்கினிய தோற்றமில்லாதவனுகப் படைக்கப்பட்ட போதும் அவன் சமய ஒழுக்கங்கள் பூண்டவனுகக் காட்டப் படுகிருன்:

இடையதனிற் கயிறுகட்டி இந்திரியங்
களொடுக்கி
எரிகின்ற தீபமதை யிருகரத்தி லேந்தி
உடையுற்று லோகபண்பு முன்னறிவ
தாகவே தான்
உற்றகனல் மீதோடு தேறலுமில் லாமல்
அடையுங்கைக் கோலுமின்றி யடப்பமுந்தா
னில்லாமல்
அம்பரத்தி லன்னையில்லா னன்றுரைப்
படியே
படைவிட் டுடனுலகை பகைதொட்ட
லகைதன்னைப்
பண்ணைக்கா ரன்வந்து தோற்றி
னுனே. (114)

நாட்டில் மழைபொழிகிறது; ஆற்றில் வெள்ளம் பெருகுகிறது; அது பண்ணை வயல்களிற் ருவுகிறது; பண்ணைக்காரன் வருகிருன்; நெல்லு விதைப்பதற் கான ஆயத்தங்களைச் செய்யுமாறு பள்ளனை உரப்பு கிருன். இக்கட்டமே பள்ளு நூல்களிற் பண்ணைக் காரன் தோன்றுங் காட்சியாகும். மூத்தபள்ளி தன் குறைகளை இவனிடம் முறையிடுகிருள்; இவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணை செய்கிறான்; பண்ணைக் கணக்குக் காட்டும்படி பள்ளனைக் கேட்கிறான்.

பண்ணைக்காரன் காவியத்தின் நடுவிற் காட்சியளித்து மறைகிறான். கதைவளர்ச்சிக்கு முக்கியமான பாத்திரமானபோதும் இவன் தோன்றும் காட்சிகள் மிகச் சிலவாகும்.

இவன் 'றேமாபுரி யென்னும் பண்ணை'யின் உரிமையாளன்; அதிகாரம் படைத்தவன்; ஏழை மக்களை உரப்பிநடத்தித் தன் சொந்த இலாபத்திற் கண்ணுங் கருத்துமுடையவனாகப் படைக்கப்பட்டுள்ளான்.

இலக்கிய நலன்

இயேசுபெருமானின் பெருமையைப் பொது மக்களுக்குக் கூறி அவர்களை நல்வழிப்படுத்துதலே ஞானப்பள்ளு ஆசிரியரின் நோக்கமாகும். இந்நோக்கத்தை நிறைவேற்றவே பள்ளுப் பிரபந்தத்தைக் கருவியாக அமைத்துள்ளார்; இயேசுநாதரே நூலின் பாட்டுடைத் தலைவர்; அவரின் பெருமையையே பள்ளியரிருவரும் பாடுகின்றனர்; கவியும் தன் கூற்றாக 'அறிவுறுத்தல்' செய்கிறார்; இவ்வறிவுறுத்தற் போதனைகள் நூல்முழுவதிலும் ஊடுருவி நிற்கின்றன.

நூலின் நலனை அறிவதற்குக் கிறித்தவமதப் புராண வரலாறுகளைப் பற்றிய அறிவு மிக இன்றியமையாததாகும். செருசலே, உரோமாபுரி ஆகிய புனித தலங்களுடன் தொடர்புபட்ட வரலாறுகள் நூலிற் செறிந்துள்ளன. நூலின் மொழிநடை மிக இலகுவானதாகும்; யாப்பு எளிமையானது; உவமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுருவகங்கள், கற்பனைகள் மிகக் குறைவு; நூலின் நடை ஆற்றொழுக்குப் போல் தங்கு தடையின்றிச் செல்கின்றது. எம்மதத்தவராயினும் இந்நூலைப் படிக்கும்போது அவர் பத்திப்பரவசத்தி லாழ் வார்; இதுவே நூலின் சிறப்பாகும். நூலிற் சமயப் பூசல்கள், கிண்டல்கள் கிடையா; ஆசிரியர் இறைவனுடன் ஒன்றிவிட்டார்; அந்நிலையிற் பாடிய பாடல்கள் வாழ்க்கை நிலையாமையை மக்களுக்குப் போதித்து நிற்கின்றன; வீடுபேற்றுக்கு வழிகாட்டுதலே ஆசிரியரின் நோக்கம்; அதுவும் கல்வியறிவு குறைந்த ஏழை மக்களுக்கு இறைவனின் புகழொளியைப் புகட்டி அவர்களை மனிதர்களாக வாழ வழிகாட்டுகிறார் ஆசிரியர்; அவரின் நோக்கத்தைப் புலப்படுத்தப் பள்ளு என்னும் பிரபந்தம் வாய்ப்புடைய கருவியாயிற்று. அறிவுறுத்தற் பொருளிற் கவிக்கூற்றாக வரும் பின்வரும் பாடல் சிறந்த செய்யுளுக்கு எடுத்துக் காட்டாகும்.

இறந்தி றந்தின்ன மும்பிறப் போமென்றே
எண்ணி யேழைக ளிச்சித்தி ருக்கிறார்
கறந்து றைந்தபால் தாய்முலை யேறுமோ
கணக்கொ டேசென்ற காலங்கை கூடுமோ
பிறந்த றந்தெரிந் தாலுண்மை மோக்கிசம்
பிழைசெய் தால்நர கந்திடன் பேதமோ
மறந்து சிந்தனை வாக்காற் கிரியையால்
வாழ வேநன்மை வாஞ்டு தேடுமே. (15)

இப்பாடலில் வரும் 'கறந்துறைந்தபால் தாய்முலை யேறுமோ, கணக்கொடே சென்ற காலங்கை கூடுமோ' என்னும் எடுத்துக்காட்டுக்கள் மூலம் ஆசிரியர் தங்கருத்தை வலியுறுத்துந்திறன் மெச்சத்தக்கது. வாசகர் மனத்திலே பசுமரத்தாணி போல் ஆசிரியரின் கருத்துக்கள் அழுந்தி உறுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கு இப்பாடல்போல் நூலின் எப்பாடலும் எடுத்துக் காட்டாய் அமையும். இன்னுமொரு பாடலைக் காண்பாம்:

ஈட்டி யீட்டிப் புதைக்குந் தனங்களும்
இரப்ப வர்க்கொன்று மீயாம னங்களும்
மூட்டி மூட்டி முழுநர குக்கிடு
மோச வாழ்க்கையும் முந்துகு ணங்களும்
கூட்டை விட்டுயிர் போகின்ற வேளையிற்
கூடி நம்முடன் வாராது மாந்தரே
போட்டு வித்தொழி லம்பரத் தாதிமுன்
போக வேணும் புரியுஞ்ச னங்களே. (96)

இப்பாடலில் வரும் 'ஈட்டி யீட்டி' 'மூட்டி மூட்டி' என்ற சொல்லிரட்டைகள் கருத்தை அழுத்திக் கூறப் பயன்படுத்தப்பட்டிருத்தல் காண்க. 'கூடி நம்முடன் வாராது மாந்தரே' 'போக வேணும் புரியுஞ்ச னங்களே' என்ற சொற்றொடர்கள் மக்களை முன்னிலைப்படுத்திக் கூறப்படுவதைக் காட்டுவதுடன், இரக்கம், கருணை ஆகிய சுவைநலன் கனிந்திருப்பதையும் காணலாம்:

மழை பொழிதல், ஆற்றில் வெள்ளம் வருதல் ஆகிய பகுதிகளில் வரும் பாடல்கள் ஓசையும் பொருளும் ஒத்துநடத்தற்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாம்:

திடுதிடு திடெனச் செருமிடி குமிறத்
திரண்மலை யலைகொண் டுலையவே
கிடுகிடு கிடென வுடலுயிர் வெருவக்
குழாமுட னெழிலிகள் பொழியவே (93)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பாடலைப் படிக்கும்போது பாடற் பொருளை அறிதற்குமுன் இடியிடித்து மழைபெய் யும் ஓசை எம்காதிற் கேட்பதை யுணரலாம்.

இயற்கையைப் பற்றிய சிறந்த வருணனைப் பாடல்கள் பள்ளுப் பிரபந்தத்தில் இடம்பெறும் பகுதி 'ஆற்றில் வெள்ளம் வருதல்' என்னும் இய லாகும். ஞானப்பள்ளில் ஐந்திணைவளம் கூறும் இப்பகுதியில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலத்தி னூடேயும் ஆறு பாய்ந்து செல் லும்போது இடையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அழகுற ஓசையும் பொருளும் ஒத்துநடக்க உணர்த்தப்படுகின்றன.

'பதிக்கு மருத நிலத்திற் புகுந்து வாழைச்
செடியைத் தாவியே
வண்டலை யடைத்துக் கொண்டலை யுடைத்து
வழங்குந் தாதுகள் திரும்பியே
கதிக்கும் பஞ்சங் கமுகோ டலர்ந்த கன்ன
ஞளி கேரமும்
காம்பு தூங்கிய மாங்க னிகளும்
கலவினி வுற்ற தீயவே' (104)

என்னும் மருதநிலச் செய்யுள்

பாசவல் லிடிப்பவ ருலக்கை வாழைப் பல்பழம்
ஆசினி வருக்கை மாதடிந்து தேங்கனி யுதிர்த்
தூசலாடு பைங்கமுகு தெங்கிஞெண் பழம்பரீஇ
வாசத்தாழை சண்பகத்தின் வான்மலர்
கணக்குமே

என்னும் சீவகசிந்தாமணி நாமகளிலம்பகச் செய்யு ளின் (68) பொருளை நினைவூட்டி நிற்பது காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழங்களெல்லாம் ஒன்ருகக் கலந்து பிசையும்போது பிறக்கும் இனிய மணம் ஈண்டு வருணிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் மருத நிலத்தினூடு செல்லும் ஆற்று வெள்ளம் பழங்களை யுதிர்த்துச் செல்லும் போது அவையாவும் ஒன்றுசேர்ந்து நறுமணத்தை நீருக்கு ஊட்டின; ஆறு விரைந்து தாவிச் செல்கின்றது:

'ஏற்றம் பரந்து நீற்றம் பொருந்தி யிடித்து
நிலத்தை முடுக்கியே
யிரண்டு கரையும் திரண்டு தரள மேறிப்
பாதவ மூறியே
நாற்றம் பொருந்தும் பழனக் கரையும் நறும்
பூங் கொடியும் வேலியும்
நாகண வாய்ப்புள் கோகில மேற்கொள்
நற்றருவான துதைக்கவே (105)

என்னும் பாடல் ஆற்றின் வேகத்திற் கேற்ற ஓசை பொருந்தி நடப்பதை இனிது காட்டுகின்றது.

இந்நூலிற் பொதிந்துள்ள சுவைகளுள் கருணை அல்லது இரக்கம் மிக்கு நடப்பதை நூலின் பல பகுதிகளிலும் காணலாம்: 'எப்படியாகிலும் நானே பாதகிதானே, எண்ணித்திரிந்த பள்ள னுன்னிடமாஞன்' (255). நாட்டுவளங் கூறும் பாடல்களிலும், பள்ளியர் ஒருவரையொருவர் ஏசும் பகுதியிலும் பெருமிதம் மிளிர்கின்றது:

சொல்லச் சொல்லத் தன்மைதன்னை வெல்லப்
பேசிருய் — எங்கள்
சோதிநாதன் மானிடஞய் வந்திடு முன்னம்
நில்லப்பாலே கல்லைத்தொழு தல்லற்
பாடதாய்த் — தானே
நீணிலத்தி லேதிரிந்த தாரடிபள்ளி (234)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இளையபள்ளியின் பேச்சில் பெருமிதவுணர்வு 'கக்கப்படுவதை'க் காணலாம். பள்ளனின் நேசத்துக்குப் பாத்திரமான தன் வாழ்க்கையிற் குறுக்கிட்டுக் குழப்பப் பார்க்கிருள் மூத்தபள்ளி என அறியும்போது இளையபள்ளி ஆவேசங்கொண்டு பேசுவது இயற்கைதானே; அதுபோலவே முறைப்படி மணந்த தன் மணுளனுகிய பள்ளன் தன்னைவிட்டு இளையபள்ளியிடஞ் சென்று வருகிருன் என்பதை மூத்தபள்ளி எண்ணும்போது அவள் சோகக் கடலில் ஆழ்வதும் இயற்கையே; இவற்றையே ஆசிரியர் தம் காவியத்திற் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

யாப்பும் ஓசையும்

இந்நூலில் வரும் பாடல்கள் வெண்பா, கலிப்பா, விருத்தம், தரு, சிந்து ஆகிய ஐவகையினவாம். இவற்றுள் வெண்பா, கலிப்பா, விருத்தம் ஆகிய மூன்றும் இயற்றமிழ் இலக்கியங்களிற் காணப்படும் யாப்பு வகைகளாகும்; சிந்து, தரு ஆகிய இரண்டும் இசைப்பாட்டுக்கள்; இவை பன்னிரண்டாம் நூற்ருண்டிற்குப் பிற்பட்ட காலத்திற் ருேன்றி, குறவஞ்சி, கீர்த்தனே, பள்ளு முதலிய பொது மக்களிலக்கியங்களில் மிகப்பயின்று வருவன.

இந்நூலிலுள்ள 257 பாடல்களும் பின்வரும் யாப்பு எண்ணிக்கையைக் கொண்டுள்ளன:

சிந்து	—	223
கலி	—	20
தரு	—	6
விருத்தம்	—	4
வெண்பா	—	4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் பெரும்பாலும் சிந்து என்னும் இசைப் பாட்டாற் பாடப்பட்டுள்ளது; சிறுவரவினவே கலிப் பாக்கள்; நூலினுள் ஆசிரியர்கூற்ருய் வரும் அறிவுறுத்தற் பாட்டுக்கள் வெண்பா, விருத்தம் கலி ஆகிய மூவகையாப்புக்களாற் பாடப்பட்டவை; கலியினத்தைச் சேர்ந்த பாடல்களுள் கட்டளைக் கலிப்பாக்கள் 12; கட்டளைக் கலித்துறை 3; கொச்சகக் கலிப்பா 2; கலிப்பா 3; சிந்துப் பாடல்கள் பலவகை வண்ணங்களைச் சார்ந்தவை; மழைபெய்யும் ஓசையில் மழைச்சிந்து அமைந்துள்ளது; குயில் கூவும் ஓசையிற் குயிற்சிந்து அமைந்துள்ளது. இங்ஙனமே பொதுமக்களின் பேச்சுப் பாணியில் பள்ளியர் உரையாடற் சிந்துகள் அமைந்துள்ளன; அவற்றின் எண்ணிக்கை மிகப்பல; இந்நூலிற் சில சிந்துப் பாடல்கள் திருப்புகழ் வண்ணத்தில் அழகுறப் பாடப்பட்டுள்ளன. தரு என்னும் பாவினப் பாடல்களும் திருப்புகழ் வண்ணத்தைச் சார்ந்தவை.

இந்நூலிலமைந்த விருத்தங்கள் நான்கனுள் இரண்டு எழுசீர் ஆசிரிய விருத்தம்; இரண்டு அறுசீர் ஆசிரியவிருத்தம்; ஆசிரியரின் கைவண்ணத்தை எழுசீர் ஆசிரிய விருத்தம் இரண்டிலும் கண்டு தெளியலாம்; 'பனியால் நனைந்து வெயிலாலுலர்ந்து, என்னும் அரிச்சந்திர புராணப் பாடலின் மெட்டை ஒத்துள்ள இவ்விரு பாடல்களும் படிக்குந் தோறும் இன்னிசை நாதம் பகருகின்றன. அவ் விருபாக்களும் பின்வருவன :

(பனியால் நனைந்து-என்ற மெட்டு)

மனுவாயெ டுத்தவுடல் மடியாதி ருப்பதிலே
மகராச மெய்த்த விமலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனமாயு ரைத்தபடி கதிரோன்மு ழக்கிடிகள்
கடல்சூழ்பு விக்கு லமெலாம்
அனலாலெ ரிக்குமுதல் அடியார்பி ழைக்கவருள்
அரசேய ளிப்ப வெனவே
நினைவாலு மிக்குடைய ஒளியாலு முத்தர்சொன
நிலைதேடு முற்ற மனுவே (64)

வாணாளெ டுத்த மனுவேயு மக்கு
வருநாளி றத்த லறியீர்
ஊனால்ம ருண்டு லகவுடல்பேய் மருண்டுமது
உள்ளங்க ழிக்க நினைவீர்
பேணாதி ருப்ப துடல்பிரிவே யுயிர்க்குவரு
பெருநோய்வ ருத்த மடைவீர்
நாணார்ப வத்தை யினிநாடா தவத்தைமிக
நவில்வாய்செ கத்தி லினியே (198)

தருவென்னும் பாவினத்தின் இலக்கணம் வரையறுக்கப் படவில்லை; இந்நூலில் வரும் 'தரு' ஆறு பாடல்களும் கடவுள் வணக்கத்தின் பின் வருவன; தண்டிகைக் கனகராயன் பள்ளில் மிகப் பயின்று வரும் பாவினம் 'தரு' ஆகும்; அந்நூலில் கதிரையாண்டவர் வணக்கம், பள்ளன் தோற்றம், மூத்த பள்ளி சொல்லல், பண்ணைத் தலைவன் விரைகாளை கருவி வளம் வினவல் முதலியன தரு என்னும் பாவினத்தாற் பாடப்பட்டுள்ளன. எனவே 'தரு' என்பது நான்முகத்திற் றந்து கூறப்படுவது, தரவு, தருக்கம் என்னும் பொருள்களிற் பிறவிடங்களிற் பயின்று வருவதேனும் பள்ளுநூல்களில் சிந்து என்பதைப் போன்ற இசைப்பாட்டின் பெயராய் வருவது குறிப்பிடத்தக்கது. இக்கருத்தானன்றே 'இவ்வுறுப்புக்களுறப் பாட்டுடைத்தலைவன் பெருமைகளை ஆங்காங்கு எடுத்துக் கூறிச் சிந்து, கலிப்பா, விருத்தம், தரு ஆகிய பாவின வகைகள் விரவப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று, நாடகத் தமிழாய் வருவது பள்ளு என்னும் உழத்திப் பாட்டின் இலக்கண மாகும்' எனத் தண்டிகைக் கனகராயன் பள்ளுப் பதிப்பாசிரியர் கூறுவது காண்க.

மொழி வளம்

'செந்தமிழாற் பள்ளினிசை தேனுலகிற்
பாடுதற்கு
அந்தமிலான் ருனே யருள்'

என்னுங் கடவுள்வணக்கப் பாவடியிற் கண்டவாறு செந்தமிழ் மொழியால் ஞானப்பள்ளைப் பாடுவதே ஆசிரியரின் நோக்கமென்பது தெரிகின்றது. இந்நோக்கத்திற்கேற்ப நூலினுட் சேரிமொழிகளின் எண்ணிக்கை மிக அருகிக் காணப்படுகின்றது; இலக்கண வரம்புள்ள சொற்களினுதவி கொண்டே ஆசிரியர் தங் காவியத்தைப் பாடியிருக்கிருர். ஈழத்தெழுந்த பள்ளு நூல்கள் எல்லாவற்றிலுமே சேரிமொழியின் மணம் குறைந்து காணப்பட்டபோதும் ஞானப்பள்ளில் மிகமிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

மாதவரும் ஞானிகளும் மாமு னிவோரும்
வஞ்சகமில் லாததவ நெஞ்சு டையோரும்
நீதியுருே மாபுரியில் வேத வயலில்
நின்றுவிரைத் திட்டசெந்நெல் நாலு
முளைத்து
கீதமென வேசிலம்பு கிண்கிணி பொங்கு
கிள்ளைமொழி வாய்திறந்து சங்கீதம் பாட
ஓதரிய நாற்றுநாங்க ளீட்டுவ தெல்லாம்
ஒக்கநின்று காணவேணு
மாண்டவர் தாமே. (208)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பள்ளியர் வாயிலிருந்து வரும் பாடலாகப் பாடப்பட்டபோதும் செந்தமிழ் மணங்கமழ் வதைப் பாடியறியலாம்; இஃது ஒரு சிந்து ஆகும். ஆயினும் பல்லவர்காலத்து இசைத்தமிழ்ப் பாக்க ளாகிய விருத்தங்கள் செந்தமிழில் இயன்றிருப்பது போல் இதுவும் காணப்படுகின்றது. ஞானப்பள்ளி லுள்ள பெரும்பாலான பாடல்கள் இத்தகையனவே.

பள்ளு என்பது ஓர் இசைநாடகத் தமிழிலக் கியம் என்பது முன்னர்க் கூறப்பட்டது. இசைத் தமிழின் சந்தமும், நாடகத் தமிழின் உரையாடல் நடிப்புப் பாண்மையுந் தோன்ற யாக்கப்படு வது பள்ளுப் பிரபந்தமாகும். அங்ஙனமாகவும், 'பஞ்சன்மணீயம்' முதலிய நாடகங்கள் ஆடுவதற் கன்றிப் பாடிச் சுவைப்பதற் கென்றே எழுதப் பட்டனபோல் ஞானப்பள்ளும் படித்துப் பத்திச் சுவை பெறுவார்க்கென எழுதப்பட்ட செந்தமிழ்க் காவியமாகும். ஞானப்பள்ளில் வரும் பின்வருஞ் சொற்களும் சொற்றொடர்களும் பொதுமக்களின் பேச்சுமொழியை ஞாபகமூட்டுகின்றன:

வைத்திருக்குது (196), நாற்றுநடுகச்சே (212-218) கத்தா (219), பிச்சையெல்லாம போச்சு (128), விரைத்தேன் (125), பிறதானம் வீசவே (84), பள் ளனைப் பாரமாக்கிக் கொண்டது (118), விழுந்தே போச்சு (126), சங்கை (137), மோக்கிச வீடு (140), வெகுத்த செலவு (142), சில விட்டேனே (147), ஆக்கினை செய்ய (173), அவம்பிடிக்கச்சே (183), வார்த்தையை நம்புமேன் (186), தேடுமேன் (188), மானிட சென்மம் (196), புண்ணிய மோசே (197), கும்பிடுங் காணுமே (204), நம்புறீர் (206), தித்திமி தித்திமிதோ வென்ன (223), தளம்புறீர் (224), சின்ன வஞ்சகர் (226), காணியார்க்கு (229),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிருய் (234), பிறவலங் காணேம் (235), வாற செய்தி (236), உண்மையாய்ச் சொல்லும் (236), விண்டு பேசிருய் (238), சூட்சி (240), சீமான் (250), பாடுகள் பட்டார் (251), சுமத்துருய் (253), வாறது (254), இறந்து போறது (257).

17-ஆம் நூற்றுண்டுத் தமிழ் எழுத்தொலியியல்

ஈழத்திலே 17-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த மக்கள் தமிழ்ச் சொற்களை எவ்வாறு உச்சரித்தார்கள் என்பதைத் திட்டமாகக் கூறுவது பொருந்தாது. ஏடுகளைப் புதுக்கி எழுதுவார் விட்ட பிழைகள் அநேகம்; ஞானப்பள்ளிற் காணப்படும் பின்வரும் ஒலிமாற்றங்கள் கருத்திற் கொள்ளத்தக்கன.

இன்றைய தமிழில் ழகரமெய்யுடன் காணப்படும் பல சொற்கள் மூலப்பதிப்பில் ளகரமெய்யுடன் காணப்பட்டன. இவையாவும் ஏடுகளைப் புதுக்கி எழுதுவார்விட்ட பிழைகளெனவே எமக்குத் தோன்றுகின்றன. எனவே மூலத்திற் கண்ட சொற்கள் அடிக் குறிப்பிற் றரப்பட்டுள்ளன:

மூலம்		திருத்தம்
அளகாய்	(13-1)	அழகாய்
இளந்தாள்	(187-11)	இழந்தாள்
உளவர்	(146-2; 163-2; 103-3; 106-4)	உழவர்
உளத்திப்பாட்டு	(பக். 9)	உழத்திப்பாட்டு
ஏள்தலை	(212-7)	ஏழ்தலை
ஏளிரண்டு	(199-3)	ஏழிரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீளாய்	(248-1)	கீழாய்
கீளே	(54 5)	கீழே
குளப்பம்	(117-1)	குழப்பம்
குமிளி	(122-2)	குமிழி
கொளிக்கவே	(101 3)	கொழிக்கவே
திகள்	(6-3)	திகழ்
தோளர்	(231-4)	தோழர்
நளுவாதி	(5-8)	நழுவாதி
நாளி	(148-1)	நாழி
நீடுளி	(84-2)	நீடுழி
பளனி	(105-3)	பழனம்
பளகும்	(13 6)	பழகும்
புகள்	(22-4)	புகழ்
முளங்கி	(87-13)	முழங்கி
வளங்கி	(118-2)	வழங்கி
வாள்	(167-1)	வாழ்
வாளியே	(110-2)	வாழியே

பின்வரும் உதாரணங்களில் ளகரமெய் ழகர மெய்யாகக் காணப்படுகின்றது.

கிழப்பி	(98-3)	கிளப்பி
ஆழ	(253-2)	ஆள
விழைந்தது	(223-3)	விளைந்தது

வல்லின மெய்யின் முன்னர் வரும் ழகரமெய் டகரமெய்யாகப் பின்வரும் உதாரணங்களில் மூலப்பதிப்பிற் காணப்படுகின்றது:

சூட்சி	(135-4; 240-4; 241-1)	சூழ்ச்சி
யாட்பாணம்	(85-1)	யாழ்ப்பாணம்
வாட்கை	(96-4; 122-1; 122-2; 140-1; 201-1)	வாழ்க்கை
வாட்சி	(101-3)	வாழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடெழுதுவார் விட்ட பிழைகள் என யாம் மேலே கூறியதற்கு ஆதாரங்களாகப் பின்வரும் உதாரணங்களைக் காட்டலாம்:

செந்நெல் விளைவதின்	(222-2)
விழைந்தது செந்நெல்	(223-3)
விளைந்த செந்நெல்	(226-2)

இவ்வுதாரணங்களுள் ஒன்றில் மட்டும் ழகர மெய் வருகின்றது. எனவே 'விளைவதின்' 'விளைந்த' என்பன போன்று 'விழைந்தது' என்பதும் 'விளைந்தது' எனப் பிழைதிருத்தத்தில் மாற்றப்பட்டுள்ளது.

உழவன்	(221-3)
உழக் கோல்	(203-2)
உழுகின்ற	(199-4)
உழவே	(195-2)
உழுங்கலப்பை	(196-4)
உளவர்	(146-2: 163-2; 103-3; 106-4)

இவ்வுதாரணங்களிற் சில விடங்களில் ழகரமெய்யும் உளவர் என்பதில் ளகரமெய்யும் காணப்படுவதால் ஏடு எழுதுவார் விட்ட பிழையாம்.

இழந்தேன்	(190-1)
இளந்தாள்	(187-11)

என்பனவும் அன்ன.

வளங்கி	(118-2)
வழங்கும்	(104-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவும் அன்ன. இவ்விதமே ஏனைய உதாரணங்களதும் இருவேறுபட்ட வடிவங்கள் மூலப்பதிப்பிற்காணப்படுகின்றமையின் நூலெழுந்தகாலத்து எழுத்தொலியியலை ஆராயப் போதிய ஆதாரங்கள் கிடையா.

இயற்பெயர் விளக்கம்

ஞானப் பள்ளு கூறுங்கதை மேனாட்டு நிகழ்ச்சிகளை யொட்டியதாகலின் அப்பண்பாட்டை விளக்குஞ் சொற்கள் தமிழ்மொழியிற் புகுதல் எதிர்பார்க்கப்பட வேண்டியதேயாகும். எனவே இயேசுநாதரின் பிறப்பு, அவரது சங்கம், கத்தோலிக்க திருச்சபையுடன் தொடர்புபட்டோர் முதலியோரின் இயற்பெயர்களையும் பிறவற்றையும் போர்த்துக்கேய மொழியிலிருந்தோ இலத்தீன் மொழியிலிருந்தோ தமிழாக்கஞ் செய்யவேண்டியது ஆசிரியரின் பொறுப்பாகும். நூலிற் காணப்படும் இயற்பெயர்களும் அவற்றிற்கு நேரான ஆங்கிலச் சொற்களும் பின்வருமாறு:

அதம் [Adam]

'அதமுமவன் பிதிர்வழி' (*16*),
'அதத்தை மீண்டு' (*123*),
'அதத்தையு மவனுடைய' (*202*),
'அதஞ்செய்வன்பினை' (*10*).

அதமேவை [Adam and Eve]

'நம்மை யீன்ற அதமேவை' (*65*),
'அதமேவையை வைத்தவன்' (*214*).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராம் / அபரும் / அபிரும் [Abraham]
'இயக்கோ அபிராந் தவி நோவையர்' (11),
'அபிராமைக் கூவி' (31), 'அபிராமுக்கும்' (41),
'அபிரா முனிக்கன்பு செய்' (57),
'அபிராங் கிளைகள்'(78)

இயக்கோ / இயக்கோபு [Jacob]
'இயக்கோ அபிராந் தவி' (11),
'இயக்கோ பிதிர்களை' (57),
'பார்வோன் இயக்கோபு பிதிர்வழி' (129).

இன்ஞுசியார் [Ignatius]
'சங்கை மாமுனி யின்ஞுசி யார்க்கு' (32),
'சன்ஞுசி யின்ஞுசி தேவனே' (83).

இஸ்பிரீத்து [Spirit]
'ஆதி பிதாச்சுத னிஸ்பிரீத்துச் சாந் தென்னு
மாள் மூவர்' (32), 'ஏந்த லாதி பிதாவுந் திருச்
சுதனிஸ்பிரீத்துச் சாந்தேக நேசத்தால்' (68).

ஏமியா [Emia]
'நாளு மேவல் நடத்து மேமியா' (44)

ஏவை [Eve]
'பெண்ணெ னும் மேவை தன்னைக்
கொடுத்த (66)

கத்திரீன் [Catherine]
'கன்னி யான கத்திரீனவுந்' (213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருசு [Cross]

'குமாரனைக் குருசுடன் கண்டு' (204),
'குருசோடு' (193),
'சுமையிறக்கச் சுமந்த குருசென' (224).

குஸ்தீஞார் [Costinge]

'தலைவன் நாம குஸ்தீஞார் பேரெழுதி' (235)

கோமுசு [Gomez]

'மிக்கவன் கோமு செழுத்தின் படியே' (134)

சவேரியார் [Xavier]

'பிரஞ்சீஸ்க்குச் சவேரியா ரின்பநாமம்' (83)

சலமோன் [Solomon]

'மன்ன ஞன சலமோ னெடுத்த' (156),
'இம்பர் மீதி லேசலமோன் செய்த கோயில்'
(245),
'சலமோன் மகன் சொன்னது மல்லால்' (248).

சலோமை [Jerusalem]

'கன்னி யான சலோமை மகன்' (124)

சாந்து [Saint]

'ஆதி பிதாச் சுதனிஸ் பிரீத்துச் சாந்தென்னு மாள் மூவர்' (32), 'ஆதி பிதாவுந் திருச்சுத னிஸ்பிரீத்துச் சாந்தேக நேசத்தால்' (68).

சிசிலி / சுசீலி / உசிலி [Cecilia]

'சிசிலியாருடன் மங்கை குலாவு மரிக்கு' (218),
'உயங்கி ருசியாள் சுசீலியாளு முகந்து' (215),
'பொய்யா மொழியு சிலியாளொடு' (216),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவானி [John]

'மிக்க மேன்மைச் சுவானியுந் தேவியும்' (169)

செபதேயு / செவ்வஸ்தியா [Sebastian]

'ஏந்தலான செபதேயு மைந்தன்' (75),
'சிறந்த சந்த செவ்வஸ்தியானும்' (4),
'செவ்வஸ்தி யாம்பெருஞ்சீர்ச் செக்கெனுந்
தேசிகர்' (5).

சூசை [Joseph]

'சூசையு மிராச கன்னி யான வளுந்தான்'
(241)

தவீது / தவி / தவிராசன் [David]

'மன்ன னன மகராச தவீது, (20),
'இயக்கோ அபிராந் தவி நோவையர்' (11),
'துங்கராச தவி குலத்தோனுக்கு (41),
'தவிகுலம் வாழவந்த' (191 204),
'மாமகுடத் தவிராசனுனேன்' (60);

தொபியாசு [Thophias]

'துய்ய யோபுக்கு மிக்கவனன தொபியாசுக்குத்
துயரம் வருத்தி' (168)

நோவ் [Noah]

'மீண்டு நோவை யிடமாகவே யிந்த' (56),
'இயக்கோ அபி ராந் தவி நோவையர்' (11).

பிரஞ்சீஸ்/பிறஞ்சீஸ் [Francis]

'எந்நாளு மெமக்கருள் பிரஞ்சீஸ்க்கு' (83)
'பிறஞ்சீஸ்க்கு அன்றுரைத்த வாசகப்படி' (203)

பேதுரு [Peter]

'தவமுனி யான பேதுருவும்' (213)

மத்தேசு [Mathew]

'பேறுடைய மத்தேசெனு மாமுனி' (149)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதலேனு [Mathalena]
'மதலேன கன்னிகை ஆண்டை பாதத்திற்
பூசிய எண்ணெக்கு' [132-133]

மரி [Mary]
'தாய் மரிக்கு மிளையவன் புத்திரன்' (158),
'மங்கை குலாவு மரிக்குத் தானும்' (218),
'கன்னி மாமரி காப்பது வாகுமே' (2),

யேசு [Jesus]
'யேசுவின் நிறைந்த சங்கத்தில்' (4),
'நாதனுத்தம யேசு தோழமைச் சபை' (5),

யோகோறு [Johoah]
'யோகோரு லாயிரத்து முன்னூறு வருடம்
கண்டு கொள்ளாதே' (238)

பிடுத்துக்கால் [Portugal]
'பேரான பாராளும் பிடுத்துக்கால் மனு' (84)

யூதேயு [Judha]
'அரும்பாவி யூதேயு தீண்டியே யெங்கள்
ஆண்டையை விற்ற' (133),
'ஒற்றனுகி யூதேயு தன்னை யுகப்பதாக' (182)

யொர்தாம் [Jordhan]
'செருசலேப் பாங்கும யொர்தாம் நதியிற்
போகியே' (111)

ரோமானுபுரி [Rome] செருசலே [Jerusalam]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

வெளியீட்டுரை III
பதிப்புரை V
பள்ளுப் பிரபந்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும் XIII
ஞானப்பள்ளு நூலாராய்ச்சி XXXV

நூல்

கடவுள் வணக்கம் 1
காப்பு 1
அவையடக்கம் 2
ஆசிரியர் வணக்கம் 2
தரு 3

உழத்திப் பாட்டு

பள்ளன் பள்ளி தோற்றம் 9
இளையபள்ளி தோற்றம் 11
பள்ளன் தோற்றம் 11
இளையபள்ளி தற்புகழ்ந்து பாடி மகிழ்தல் 12
பள்ளியர் பெயர்ப் பெருமை கூறல் 14
நாட்டு வளம் 16
பள்ளியர் தலைவன்பெருமை கூறல் 24
குயில் கூவல் 32
மழைபெய்ய வரங்கேட்டல் 35
மழை பொழிதல் 36
ஆற்றில் வெள்ளம் வருதல் 38
பண்ணைக்காரன் தோற்றம் 44
பள்ளியர் பண்ணைக்காரனை வணங்கல் 45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் முறையிடுதல் 45
இளையபள்ளி எதிர்மாற்றங் கூறுதல் 46
பண்ணைக்காரன் பள்ளனிடம் பண்ணைக் கணக்குக் கேட்டல் 49
பள்ளன் கணக்குக் கூறல் 49
மூத்தபள்ளி முறையீடு 58
பண்ணைக்காரன் பள்ளனை வினவுதல் 61
பள்ளன் மறுமொழி கூறல் 61
பண்ணைக்காரனிடத்திற் பள்ளன் முறையீடு 64
மூத்தபள்ளி குட்டையிலடைக்கப்பட்ட பள்ளனுக்கு வருந்திப் பரிந்துரை செய்து பண்ணைக்காரனை வேண்டல் 66
பள்ளன் வயலுழும்போது எருதுமுட்ட மூர்ச்சித்து விழுதல் 70
மூத்தபள்ளி புலம்பல் 71
மூத்தபள்ளி புலம்பப் பள்ளன் எழுந்திருத்தல் 72
நாற்று நடுகை காண வருமாறு பள்ளியர் பண்ணைக்காரனை வேண்டுதல் 73
நாற்று நடுதல் 74
அரிவி வெட்டுதல் 81
சூடடுக்குதல் 83
பள்ளிகள் ஒருவரையொருவர் ஏசல் 84

பாட்டு முதற்குறிப்பு அகராதி 93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப் பள்ளு

கடவுள் வணக்கம்

நேரிசை வெண்பா

பொன்னு பரண்கொலுவும் பூதலமு மாகிமுதற்
றன்னுலே தானுகுந் [1]தற்பரற்கு — எந்நாளுஞ்
செந்தமிழாற் பள்ளிசை தேனுலகிற் பாடுதற்
கந்தமிலான் ருனே யருள். 1

காப்பு

மரியன்னை

கட்டளைக் கலிப்பா

ஆதி கத்தன்தி ரு[2]வேத மாகிய
அருப ஞானத்தை யம்புவி மீதிலே
நீதி யுற்றசொ ரூபம தாகிய
நீண்ட ஞானநி றைந்தபள் ளோதிடப்
பூத லத்தரும் பொன்னுட ரும்பதம்
போற்றி யேற்றப்பொ ருப்பின்பொ தும்பிலே
காத லித்துக்க டவுளை யீன்றருள்
கன்னி மாமரி காப்பது வாகுமே. 2

---

1. தற்பரர்க்கு 2. வேதமாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையடக்கம்

கட்டளைக் கலிப்பா

விண்ணி லன்னையும் மேதினித் தந்தையும்
வேற தாய்நின்ற மெய்ப்பொருட் காரணம்
எண்ணி வானவ ரும்மனு வோர்களும்
1இசைக்கி னும்மிங்கி வர்வாக்குக் கெட்டுமோ
புண்ணி யந்தெரி யங்குநிஸ் தோர்சொன்ன
புத்தி கேட்டுப் புகன்றேனிக் காதையை
மண்ணி லன்புறக் காவியங் கற்றவர்
மகிமை 2மாமரிக் காகப்பொ றுப்பீரே. 3

இறந்த காலமு மற்று மதிலுள
தினித றிந்துது றந்தாற்சன் ஞசியாஞ்
சிறந்த சந்த3செவ் வஸ்தியா ஞம்பெருஞ்
செக்கை னுஞ்சிட்ட தேசிகன் யேசுவின்
நிறைந்த சங்கத்தில் நின்றேங்கு நீதியான்
நீணி லத்தினி றுத்துதன் மத்தினல்
அறைந்த வேதபள் ளானதி னிக்கதை
அறிஞர் 4கேட்டிங்ஙன் அன்பாய்த் தரிப்பீரே. 4

ஆசிரியர் வணக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி யிரட்டை யாசிரிய விருத்தம்

வேதலட் சணதாரி மெஞ்ஞான போதகன்
வித்தியா பாரகனுயர்
வெண்ணிலவு மண்டலம் வெண்கதிரின் மண்டலம்
மேலுலகு விண்மண்டலம்

---

1. இசைக்கினுமிங்
2. மாமரியாட்காய்ப் பொறுப்பீரே
3. செவ்வஸ்தியாம்பெருஞ்
4. கேட்டுயிங்கன்பாய்த்தரிப்பீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[1]ஆதிகைக் குளநீள மைம்பூத நிலைகளும்
அண்டகோ ளச்சொருபமும்
அருவான [2]ஆத்துமா நிலைமைலா பங்களும்
ஆரணப் படி[3]கற்றவன்
நாதனுத் தமயேசு தோழமைச் சபையதனில்
நன்மைகுடி கொண்டமுனிவன்
நம்பியசன் ஞசிபதி ஞலுகற் பணிகள்மிக
[4]நழுவாதி யற்றிவருவோன்
சேதங்க ளேதங்கள் பேதங்க ளில்லாத
செவ்வஸ்தி யாய்[5]பெருஞ்சீர்ச்
செக்கெனுந் தேசிகரி னுதவியாற் பள்ளினிசை
செப்பத்து ணிந்தெனம்மா. 5

தரு

தருவென்னும் பாவினத்தாற் பாடப்பட்ட பின் வரும் பாடல்கள் ஆறும் வண்ணப் பாட்டுக்கள். இவையும் கடவுள் வணக்கத்தைச் சார்ந்தவை.

தனதந்தன தனதன தந்தன
தனதந்தன தனதன தந்தன
தனதந்தன தானன தனதன — தனதான

உலகும்பரு முயிர்களு மம்பர
மொளிர்திங்களு முதயவ னும்பல
வுடுவுந்[6]திகழ் வானிறை முகில்களு
—முயர்வாக

---

1. ஆதிகைக்கு நீள 2. ஆற்றுமா 3. கற்றவர்
4. நளுவாதி 5. பெருஞ்செக்கெனுந் 6. திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமுந்தட [1]வரையுமா காயமு
நெடிலுங்கனல் நீர்களு மேசெய்த
நிமலன்றிரு வேத[2]பள் ளின்னிசை
—நெறிகூற

விலகுங்கனி யானதி னுல்வரு
வினையந்தனை யேமண்ணி லேதள்ளி
விடவந்திடு தேவனு மானிட
—வுருவாகு

மூலைதந்திடு மூதறி வாலுயர்
முழுதுங்கன்னி மூவுல காளனை
முயலும்பல னேதர வேயடி
—பணிவேனே. 6

தானுதன தானன தானன
தானுதன தானன தானன
தானுதன தானன தானன — தனதான

தானுகிய னுதியு மாகியே
சடமுந்தரு நோவுமில் லாமலே
சகலதன்மைச்[3]சொ ரூபியு மாகிய
— தனிநாதன்

ஞானேதியு மாகியெல் லாமறி
வோனுகியெந் நேரமு மாகிய
யோகாதிபள் ளேசலு லாவெனு
— மிசைபாட

மானேர்குல மாய்வரு மாமரி
மனுவானவ ரானத யாபரி
மதுராகமி யானகிர் பாகரி
— தவிராசன்

---

1. வரயுகாயமு 2. பள்ளினிசை 3. சொருபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனோர்மனு வானத யாபரி
அறிவாலுயர் மாதர சாகிய
[1]அடியார்நன்மை யாகிய தாய்சரண்
— அயரேனே. 7

தந்தந்தன தானன தானன
தந்தந்தன தானன தானன
தந்தந்தன தானன தானன
— தனதான

அந்தந்திகழ் மாமலை மேலுயர்
கண்டந்தனி லாசன மேவியே
அன்றன்பொடு மாமுனி வாவென
— வருள்கூறி

சிந்தும்பிரவை சோதியு லாவவே
சென்றன்பொடு ஆதிய மாபெல
செம்பொன்பத மேவிய வேதபள்
— ளிசைபாட

தொந்திந்திமி தோதிகு தோவென
நின்றிங்கிசை பாடிட வானவர்
சென்றுந்திரண் மாமுடி மூவர்க
— ளடிபேண

வந்தும்பல கோவர்கள் கூடிட
மஞ்சஞ்செறி மாமலை மீதினில்
மைந்தன்றனை யேதரு மரிசரண்
— மறவேனே. 8

---

1. அடியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தானன தானன தானன
தந்தானன தானன தானன
தந்தானன தானன தானன
— தனதான

கஞ்சாமெனு மாபல வான்முன
மஞ்சாமத ராடமே லாகவே
தன்சாயலி லேதிசை நாழிகை
— தழலோனும்

மஞ்சார்முகில் மீதிலு லாவியே
துஞ்சானடி மைசெய்து ரோகிகள்
மங்காநெறி நீதிசொ ரூபர்பள்
— ளிசையோத

பஞ்சார்பெரி யோருயிர் யாவையும்
மிஞ்சார்துலை யேவியு லாவியே
பின்பேகதி யேறவுள் ளாய்விடு
— பெரியோனே

அஞ்சாகிய [1]பூதிய மோடுமென்
நெஞ்சாகிய ஆவியு மேவியே
[2]அன்பாய்வரு தாளினை நாவினி
— லயரேனே. 9

தனந்தனந்தன தனந்தன தனந்தன
தனந்தனந்தன தனந்தன தனந்தன
தனந்தனந்தன தனந்தன தனந்தன
— தனதான

---

1. பூதிய மோடுவென் 2. அன்பாய்வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனஞ்செறிந்திடு கருந்தலே வனந்தனில்
கரந்தெறிந்திடு கருந்தரு மரந்தனிற்
கலந்திருந்திசை பொருந்தவே பகர்ந்திடு
— கரைகாணுன்

[1]அனந்தரன்புற வருந்தவ னெழுந்திட
[2]வதின்பினங்கவ ரறங்களே விளங்கின
அதஞ்செய்வன்பினே [3]யரிந்திடு சரணபள்
— ளிசைகூற

தனந்தனந்தன வெனும்பல சிலம்பொடு
சதங்கைதண்டைகள் அலம்பிட நடம்புரி
சடங்களின்பகம் [4]பிறிந்திட விரும்புமென்
— மொழியாலே

தினந்தினந்தினம் நரகுறு கொடுங்கையர்
சிரங்களேந்திட வுயர்ந்தவின் ணடந்திடு
சிறந்தவன்கலந் திருந்துமென் ஞவினில்
— மறவேனே. 10

தனத்தானன தானன தானன
தனத்தானன தானன தானன
தனத்தானன தானன தானன
— தனதான

திசைக்கோவென வாறிரு பேர்களேத்
திடத்தோருயர் பூவினி னுதவியுஞ்
செகத்தோர்கள் பிரதானபி தாவென
— வருநாமம்

---

1. அருந்தவன்புற 2. வதின்பின்னங்கவ
3. யறிந்திடு சுரணபள் 4. பிறியவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கோ[1]அபி ராந்தவி நோவைய
ரிடத்தாகியுந் தேடரி தானவ
னியற்ருகிய வேதபள் ளாகிய
— விசைபாட

மயக்காதிய மாநில வாழ்வினை
மறப்பாகிய வானவர் நாதனை
மதிப்பாகவே தொழுதபன் னிருதூதர்
— மலர்ப்பாதம்

நயக்கோதுணை யாகவென் நாவினில்
நடத்தாளெண்ணி நானில மீதினில்
நமக்காசறு [2]பாதம தாய்ச்சரண்
— நவில்வேனே. 11

1. அபருந் 2. பாதமதாய்சரண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உழத்திப் பாட்டு

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

என்று மின்றுந்[1]தி ரித்துவ ஏகமா
யெவ்வு யிர்க்குமி ரக்கமுண் டாகியே
நின்று லாவகெ டுவானைம் பூதமும்
நிறுத்தி யாட்கொள்ளும் [2]நீதிசொ ரூபனை
அன்று மின்றும ஞதிதா ஞகிய
ஆதி கர்த்தனை யஞ்சலித் தீர்களாய்ச்
சென்று [3]மோக்கிச வீடடை வீர்களே
திருட்டி யாற்கண்டு தேறுஞ்ச னங்களே. 12

பள்ளன் பள்ளி தோற்றம்

சிந்து

[4]அழகாய் முடிதிருத்தி யதனில் மலரிருத்தி
யாலோ னிகரென வேதில தம்பொருத்தி
இருபத் தாறுசங் கீதத் தொனியோ
[5]டுளமுரு கும்படிக்கு நடமுற் றுநடத்தி
பவனங் கதித்த[6]வே தம்பரித்த நீதி
[7]பழகுஞ்செரு சலைநாட்டுப் பள்ளியுடனே
[8]எனயிங் கிதத்த வோசையிடு மங்கலத் துரேமைக்
கிணங்கும்பள் ளன்பள் ளத்தி தோற்றினரே. 13

---

*உளத்திப் பாட்டு

1. திறித்துவ 2. நித சொருபனை 3. மோக்ஷெ
4. அளகாய் 5. டுளமுளங் களிக்கமுருகும்படிக்கு
6. வேத பரித்த 7. பளகும் செருசலே நாட்டிற் 8. யெனயிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகமண் ணும்விளங்க மங்கலமி கப்பெருக
[1]வாகு புரிகுழலில் மாலையுமிட்டு
ஆகமனு வாடைதன்னை அணியு மிடையிற் கட்டி
ஐயிரண்டு கற்பனையில் ஆவிதிருத்தித்
தேகமெங்குந் தன்மப்பணி சிறக்கஅ லங்கரித்து
திருவுளப்ப டியின்கொத்துச் செங்கை
யிலேந்தி
ஏகமறை வேதமென்னுஞ் செருசலை நாட்டில்
இருக்கும்பள் ளன்பள்ளத்தி தோற்றினரே. 14

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

இறந்தி றந்தின்ன மும்[2]பிறப் போமென்றே
எண்ணி [3]யேழைக ளிச்சித்தி ருக்கிறார்
கறந்து றைந்தபால் தாய்முலை யேறுமோ
கணக்கொ டேசென்ற காலங்கை கூடுமோ
பிறந்த றந்தெரிந் தாலுண்மை [4]மோக்கிசம்
பிழைசெய் தால்நர கந்திடன் பேதமோ
மறந்து சிந்தனை வாக்காற் [5]கிரியையால்
வாழ வேநன்மை வாஞ்டு தேடுமே. 15

---

1. வாகுபுரிங்குழையில் ஆலையுமிட்டு
2. பிறப்போமென் றெண்ணி
3. ஏழைக ளிச்சித்
4. மோக்ஷம்
5. கிரிகையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி தோற்றம்

சிந்து

[1]பதமிரண்டு நடமுயன்று பரிபுரங்கள் [2]புலம்பப்
பகைவிளங்கு முடலுலக மலகையங்கே மலங்க
அதமுமவன் [3]பிதிர்வழியுள் ளவர்கள்கெதி யடைய
அர்ச்சிய[4]சிட்ட சபையின்மிக அறந்தினமும்
விளங்க
மதமுடைய வெழுத லையின் [5]பாவமெலா மழுங்க
மகிமையுள்ள வரமேழும் வானவரு மிலங்க
[6]உதவுநன்மை தமக்கெல்லாம் உகந்தபுவி யான
ஞேமானுநகர்ப் பள்ளத்தி உகந்துதோற்றி
னளே. 16

பள்ளன் தோற்றம்

[7]இடையினிலே கயிறுகட்டி இந்திரிய மொடுக்கி
இதமாக எரிசுடரை யிருகரத்தி லேந்தி
உடையவன்றன் வயலான உலகத்தா ரகத்தை
ஒப்பாக மண்வெட்டி யொரு[8]தோளிற்
சுமந்து
மிடியுங்கன உடமையுஞ்சொல் மீறுத தயவும்
மேற்குருவி னிடமாக மேதினி விளங்கும்
படிஞேமை நகராளும் [9]பாப்புசொல்லுக் கிணங்கும்
பழுதில்லாத் [10]தன்மகுணப் பள்ளனுந்
தோற்றினனே. 17

---

1. பதவிரண்டு 2. புலம்ப 3. பிதிர்வளி
4. சிஷ்சபை 5. பாவமழுங்க
6. உற்றநன்மை தனக்கெல்லாம் 7. இடையினிற்
8. தோழிற் சுமந்து 9. பாப்புச் 10. தன்மக்குணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுறுத்தல்

நேரிசை வெண்பா

சத்திய வேதந் தனையுணரா தேபோகப்
புத்தியல்லக் காணும் புவியோரே - நித்தியமும்
தாறு யிருப்போன் சரணபணிந்தா லென்றுமின்றும்
வாறு டடைவோம் மகிழ்ந்து. 18

இளையபள்ளி தற்புகழ்ந்து பாடி மகிழ்தல்

சிந்து

பொன்னுலகும் மண்ணுலகும் பொருந்துமுயி
ரனைத்தும்
பொருந்தாத காலந்த னிற்றனே [1]தாறுய்த்
தன்னுடைய நீதிவைத்துச் சகலத்தையும்
படைத்துத்
தானழித்துக் காத்தி ருக்குஞ் சகலதயா
பரனே
அன்னவனே யேக மாகி ஆள்வகையின் [2]மூன்றாய்
ஆதியும னாதியும ரூபமுமா ரூன
என்னுமொரே கத்தனுக்கு இணங்குந்தேவ சுபாவம்
இன்பமா கப்பாடி யாடும்பள்ளி நானே. 19

---

1. தானுய் 2. மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னவர்கள் மன்னனான மகராச [1]தவீது
வங்கி [2]சத்தி லேயு தித்த கன்னி யானவள்
தன்னுதர மானதிலே [3]சரீரமெ டுத்துத்
தாரணியை மீளவென்று தன்சரீ ரத்தில்
உன்னிவெகு பாடுபட்டு உலகு மடிந்து யிர்த்து
உற்ற தன்பி தாவ லத்தில் ஓயாதி ருப்போன்
மன்ன[4]மனு சர்சு பாவ மகிமைதனை விளங்க
மாநிலத் திற்பாடி யாடும்பள்ளி நானே. 20

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

ஈறில் லாதவன் ருனாயி ருப்பவன்
[5]என்றும் உள்ளவன் எல்லாம றிந்தவன்
மாறில் லாதவன் மாட்சிமை யுள்ளவன்
வளரு நன்மைச்சொ ரூபம தானவன்
பேறு தானவன் பேரின்ப முள்ளவன்
பிறந்தி றக்குஞ்ச ரீரமில் லாதவன்
ஆறு லட்சண முள்ளவ னேகனா
மவனே கத்தன றிந்துகொள் நெஞ்சமே. 21

---

1. தவிது 2. வங்கிஷத்திலே 3. சரீரமெடுத்து
4. மனுஷர் 5. எப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியர் பெயர்ப் பெருமை கூறல்

மூத்த பள்ளி

சிந்து

தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
--தனதான

கனத்தி ருண்டிருள் பரவியே திசை தொறுங்
கதித்த கிவண்டிசை நிலைகளு மசையவே
கலக்கு றும்படி [1]யுருமென உறுமொரு
—மலைமீதே

வனத்தி னங்கொரு தினமதி லுலமிசை
வரைத்து வந்ததை முனிவினி மலருற
வருத்தி யெங்களை மறைமொழி யிதுவென
—ஒளிர்நாடு

எனத்தை முந்தவே செறுத்தமர் செலுத்திய
செயத்த யங்கியில் மடித்திடச் சிறுவனைச்
செலுத்தி டுந்தழல் பொருந்திய வரத்துயர்
—[2]திறஞகி

தனைத்தி னம்[3]புகழ் பரப்பியே மிசைப்படி
தயக்கு றும்படி நிருத்தம தியற்றிடுந்
தனிச்செ ருசலை நகர்ப்பள்ளி
யெனச்[4]சொலுந்
—தையஞனே. 22

---

1. யுறுமென
2. திருஞகி
3. புகள்
4. சொல்லுந் தேயநானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி

சிந்து

அடுக்கொ டெண்டிசை யகிலமும் [1]விளங்குறும்
அலர்த்த செஞ்சுடருட் பிரவையொ டுக்கியே
அதிற்ப ரந்திருள் பரப்பியே குடதிசை
—அடைகாலம்
மிடுக்கு டன்புய மதிற்சில்வை யிருத்தியே
மிசைத்த வன்றன்முன் னெதிர்த்திட
வெதிர்த்தவன்
விருப்பொ டாங்கர சிருப்பென விருக்குமுத்
—தமநாடு
எடுக்கி வந்தவர் குழவியை யறுத்திட
விரத்த முங்குடல் நணைத்திட விரும்பிய
[2]இறைக்கு மின்பக மிணங்கியே பரகதி
—யிடுநாடு
[3]உடுக்க ளிங்குள வூர்களெல் லாமிது
உடுக்க ளின்[4]பதி யானதூே மானுவி
னுரித்தெ னும்பள்ளி யானது நானுண்மை
—யுலகோரே. 23

அறிவுறுத்தல்

கட்டளைக் கலித்துறை

உண்டா முயிர்களுக் கெல்லா மொருவ னுடையவனைக்
கண்டா சர்க்கக் கடன்பாவ நீக்குங் கடவுளன்றிக்
கொண்டாடிப் பேய்க்குக் [5]கொடுப்பவர் பற்றுற்ற
கூளியுடன்
[6]மிண்டா நரகத்தில் மீளா திருப்பர்கள் மெய்யிதுவே. 24

---

1. விளங்குரு மலர்த்த
2. இறைக்குமின்பக
3. உடுக்களிங்குள்ள
4. பதியாள
5. கொடுப்பர் பற்றிவிற்ற
6. மிண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு வளம்

இதுமுதல் இருபத்தாறு பாடல்கள் மூத்த பள்ளியும் இளைய பள்ளியும் தம்முளுறழ்ந்து தத்தம் நாட்டு வளம் கூறல்.

மூத்த பள்ளி

சிந்து

அண்ட கோளமு மப்பாலே கண்கட்
    [1]கடங்கி டாத ரூபலங் காரமும்
துண்ட வெண்பிறைச் சூரிய னும்மண்ணும்
    தோற்ற வேமுன்னந் தானுயி ருந்தோன்
[2]பண்டந் நாளிலும் பூதமுஞ் செய்து
    பணிந்த லோகத்தைப் [3]பாலித்த கத்தனைத்
தெண்ட னிட்டுப் பரவத் தெரிந்த
    செருச லைத்திரு நாடெங்கள் நாடே. 25

ஏக மாகித் திரித்துவ மாகியெப்
    போது மாகி யெல்லாம றிந்தோன்
தேக மானிட [4]தேவனென் றாகிச்
    செகத்தி லே[5]வந்து ரட்சித்த நாளில்
[6]ஆக மானஅர்ச் சியசிட்ட சபை
    அம்பு வியுள்ள மட்டா யிருக்க
ஓகை யாகத் தெரிந்துயர்ந் தோங்கு
    ரோமா னுபுரி நாடெங்கள் நாடே. 26

---

1. டங்கிடாத
2. பண்டன்றுளிலும்
3. பாவித்த
4. தேவனென்றாகிச்
5. வந்திரட்சித்த
6. நாகமான அர்ச்சிய சிஷசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த பள்ளி

மூவு லகும்ப டைத்தபி தாவின்
மூர்க்க மாகியி ருந்தமுன் னோர்க்காய்க்
1காவ லன்னென முள்முடி சூட்டிக்
2கரத்தி லும்மொரு செங்கோல் பிடித்து
நாவ லம்பெறு நல்வாக் கருளி
நலஞ்சி றக்கத் தனியேல் முனிக்குத்
தேவ லோகந்தி றந்துமுன் காட்டுஞ்
செருச லேத்திரு நாடெங்கள் நாடே. 27

இளைய பள்ளி

எண்டி சையும்வி ளங்கும் பகலொளி
3ஏகி யேகுட பாலில டைந்தபின்
தெண்டி ரைப்புவி யோர்கள்4த மக்காய்ச்
செருச லேயிற்சு மந்தசி லுவையை
அண்டர் நாதன்தி ருத்தோளி லேவைத்து
ஆறிரு வர்க்கு முன்னிமுன் தோன்றி
உண்டு நன்மையிங் கேதானென் றோதும்
றோமா னுபுரி நாடெங்கள் நாடே. 28

மூத்த பள்ளி

பூசிக் கும்வேளை கோயிற்குட் போகின்ற
புண்ணி யவாளர் தம்மை நயத்தி
நேசித் தோர்கள் நெடுவளம் புக்கியே
நேர்ந்த வண்ணம் நிமல னிரங்கும்

---

1. காவலனென்ன
2. கரத்திலுமொரு
3. மேவியே
4. தமக்காய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசித் தாயென்ன ஆண்ட யெனக்கு
மணைத்து யிருக்கு மன்புள்ள கன்னியைத்
தேசத் தோர்கள் கெதிபெற வீன்ற
செருச லைத்திரு நாடெங்கள் நாடே. 29

இளைய பள்ளி

ஆதி நாதன் மனுவான காலத்தில்
அம்பு வியொன்று மாதித்தன் மூன்றும்
நீதி வானத்தில் நின்றேயு லாவ
நிலவி னுக்குள் ளொருகன்னி பாலன்
ஏதி லாதக ரத்தேந்தி நிற்பதை
ஏந்தல் [1]கண்டிரு கண்களி கூர
ஓதி யே[2]யங்கு சாவித் தெளிந்த
ரோமா னுபுரி நாடெங்கள் நாடே. 30

மூத்த பள்ளி

அந்த மாதியொன் றில்லாத சோதி
யருள்பெ ருக[3]அபி ராமைக் கூவியுன்
மைந்த னைவ ளைத்தரு வாய்பெலி
மாமு னியென வாய்மைகள் கூறி
அந்த நாளிற் பெலிபீட மேற்றி
[4]அருஞ்சு தன்றனை யறுக்கின்ற நேரம்
சிந்தை கூரவே வானோன் விலக்குஞ்
செருச லைத்திரு நாடெங்கள் நாடே. 31

---

1. கண்டு இருவிழிகூர 2. யெங்கு
3. அபிறுமைக் 4. அருஞ்சுதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி

இந்தி லம்படைத் தாதிபி தாச்சுத
　　ஙிஸ்பி ரீத்துச்சாந் தென்னுமாள் மூவர்
தன்னு டன்பெரு நேசமுண் டாகிய
　　சங்கை மாமுனி யின்ஞசி யார்க்கு
நன்மை சேர்நெறி காட்டி விளங்க
　　நாளும் கூளிக ளோடிந டுங்கத்
தன்னி கரில்லான் வந்துக ளிக்கத்
　　தந்த ஞேமானு நாடெங்கள் நாடே. 32

மூத்த பள்ளி

விண்ணு லாவிய கோள்வழி காட்ட
　　வேந்தர் வந்த விவரம றிந்து
[1]எண்ணி லாதகு ழந்தைக [2]டம்மை
　　யிரக்க மின்றி யிருகூற தாக்கி
அண்ண லானுக்கு மைந்தனுக் கும்[3]மோ
　　ரற்பு தந்தனை யாதிகாட் டாமற்
திண்ண மானந வங்கோடி செய்த
　　செருசலைத்திரு நாடெங்கள் நாடே. 33

இளைய பள்ளி

தோற்று மாமுனி வோருந்து தித்திடச்
　　சொல்லு லாவிச் சுருதிவி ளங்கும்
மாற்று யர்ந்தபொன் மாமுடி சூட்டி
　　மறைக்கெ லாந்தலை யான குருவோன்

---

1. எண்ணில்லாத　2 டன்னை　3. மொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்று நாதன ரும்பாடு பட்ட
　　இதயம் நீங்கி யகலா திருக்க
ஊற்று லாவு கருணைவி ளங்கும்
　　ரோமா னுபுரி நாடெங்கள் நாடே. 34

மூத்த பள்ளி

முந்து மோட்சத் துக்கு நிகரென
　　மூவ ரேகன் முழுக்கின மாக்கிச்
சிந்து நாட்டி லிருக்கையிற் காட்டுஞ்
　　செருச லேத்திரு நாடெங்கள் நாடே. 35

இளைய பள்ளி

ஏங்கு மாந்தர ழுங்குரல் கண்டு
　　இளங்கு ழந்தை யுயிர்கவ ராதமன்
ஓங்கி யேயர சாண்டங் கிருக்கும்
　　ரோமா னுபுரி நாடெங்கள் நாடே. 36

மூத்த பள்ளி

மாகத் தன்வாச [1]சந்தோச முற்றிடு
　　மாமுனி [2]தன்னை மண்மே லிருத்தித்
தேகத் தோடாதி வன்மத்தைக் காட்டுஞ்
　　செருச லேத்திரு நாடெங்கள் நாடே. 37

---

1. சந்தோஷ　　2. தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி

கன்னி மாமரி தான்வீற் றிருந்த
கனக மாளிகை யானதை 1வானோர்
உன்னி நேர்கொண்டு வந்தங்கி ருக்கும்
ரோமா னுபுரி நாடெங்கள் நாடே. 38

மூத்த பள்ளி

ஏந்திர வாவி யானதி லேவந்
திணையில் லாச்சம் மனசோர் குளிக்கச்
சேர்ந்த பேர்க்குத் திரள்பிணி நீங்குஞ்
செருச லைத்திரு நாடெங்கள் நாடே. 39

இளைய பள்ளி

செய்ய நோய்பிணி யுற்றவர்க் கெல்லாந்
தெருவு நீளநி ழல்கொண்டு தீர்த்தோன்
உய்ய வேயர சாட்சிபு ரிந்த
ரோமா னுபுரி நாடெங்கள் நாடே. 40

மூத்த பள்ளி

துங்க ராச தவிகுலத் தோனுக்குந்
துய்ய தேசிக்கும் அபிரா முக்குஞ்
செங்கை மேவிய கம்புது ளீர்த்த
செருச லைத்திரு நாடெங்கள் நாடே. 41

---

1. யானோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி

காட்டில் வாழுங் கலைவேத மோதிக்
கடவு ளானைக் கருதியென் றன்றலை
ஓட்டின் மீதே சிலுவையி ருந்த
ரோமா னுபுரி நாடெங்கள் நாடே. 42

மூத்த பள்ளி

அறந்தெ ரிந்த முழுமல டானவ
ளாண்ட தானதுந் தொண்ணூறுஞ் சென்று
சிறந்தி டும்பெல வான்றனைப் பெற்ற
செருச லைத்திரு நாடெங்கள் நாடே. 43

இளைய பள்ளி

நற்ற வஞ்செய்து மூவாயி ரம்பேரை
நாளு மேவல் நடத்து மேமியா
முற்ற நீதி யகலா திறையீன்ற
ரோமா னுபுரி நாடெங்கள் நாடே. 44

மூத்த பள்ளி

குருக்க ளானவ ராறிரு பேருடன்
கொள்கை மாமரி யீன்றகு மாரன்
தெருக்கள் மீது அழுதுமுன் சென்ற
செருச லைத்திரு நாடெங்கள் நாடே. 45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி

கள்ளன் பானின்ற காதலன் காதலி
காண வேயிரு பேரையு சாவி
[1]உள்ளன் பாலர சிலிருப் பான
ரேமா னுபுரி நாடெங்கள் நாடே. 46

மூத்த பள்ளி

மங்கை பேரின்ம காகுற்றஞ் சாட்டியே
வந்த பேர்கள் மறுத்துரை யாமற்
செங்கை கொண்டுது ரும்பால் வரைந்த
செருச லைத்திரு நாடெங்கள் நாடே. 47

இளைய பள்ளி

மாறில் லாதே தினம்புகழ்ந் தோதியே
மங்கை சீவனோ டாயிரங் காத
மூறு செய்யா தேமூவர் கொண்ட
ரேமா னுபுரி நாடெங்கள் நாடே. 48

மூத்த பள்ளி

ஏக நாதன்பி றந்தேவ ளர்ந்து
எமக்கு வேண்டியி றந்தேயு யிர்த்துத்
தேக மானதுங் கண்ணுரக் கண்ட
செருச லைத்திரு நாடெங்கள் நாடே. 49

1. உள்ளன்பாலராசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி

நற்க ருணையி லெங்கோ னிருப்பதும்
நாடொ றும்பூசை யேற்றிப்பு கழ்வதும்
உற்ப வித்து உயிர்த்ததுங் கண்ட
ரோமா னுபுரி நாடெங்கள் நாடே. 50

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

அண்டர் வானும் புவியும்ப டைத்தவ
ரத்த னைக்குமு பகார மானவர்
துண்ட வான்மதி சூரிய னைச்செய்து
தொல்பு விக்குத் துணையாக வைத்தவர்
தொண்டர் ஞானிகள் தோத்திரம் பண்ணவே
சுருதி தந்து துணையாயி ருப்பவர்
கண்டெங் நாளு மளவிடொண் ணாதவர்
கர்த்த ரானவ ராகுமென் னெஞ்சமே. 51

பள்ளியர் தலைவன் பெருமை கூறல்

இதுமுதற் பன்னிரண்டு பாடல்களில் தலைவனாகிய கிறித்து பெருமானின் பெருமையை மூத்தபள்ளி இளைய பள்ளிக்குக் கூறுகிறாள்.

சிந்து

பண்டு கானிடைப் பள்ளை மேய்த்துப்
[1]பருந்தெ ருவினில் மானுரி போர்த்தும்
அண்ட ராகித்தி ரிந்திடு மோசை
இலகு வானத் திசைவையுங் கூட்டிக்

---

1. பருந்தெருளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட றிந்துகொள் தானுயி ருக்குங்
கடவு ளானெனக் கைக்கோல்கொ டுத்து
எண்டி சையு முயிரும்பொ ருந்தமு
னேக மாகியெப் போதுமி ருந்தோன். 52

ஏக மாகித் திரித்துவ மானவ
னெவ்வு யிர்க்கு மிரக்கமு மானவன்
மாக மாமண்ணும் விண்ணும்ப டைத்தவன்
வண்மை ஞானப் பெலசொரூ பத்தினன். 53

விண்ணி லேநவ கோடிபல் ரூபம்
விளக்கு ஞானவி லாசச பையென்னும்
எண்ணில் லாச்சம் மனசைப்பு ரந்தவ
னிங்குள் ளோர்சிலர் செய்பிழை கண்டு
மண்ணின் 1கீழே நடுநர கானதில்
வாட வேயென்றும் வன்சிறை வைத்தவன்
நண்ணு பூதல மானதி லேமுந்த
நாட்டு லோகித மேவையர் தன்னை 54

ஆதி மானிடன் செய்பிழை கண்டு
அவனை யுமவன் சந்ததி யாரையும்
நீதி யாற்கண்டு பூமியிற் றள்ளி
நெடுந்து யரைநி றுத்தியே வைத்தோன். 55

1. கீளே

275608

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்ட தானவி ரண்டாயி ரஞ்சின்ன
மம்பு வியைச்ச லத்தால ழித்து
மீண்டு நோவை யிடமாக வேயிந்த
மேதினியை வியனுகக் காத்தோன். 56

அம்பு விக்குமு யிர்க்குந்து ணையென
வந்த நாளபி ராமுனிக் கன்புசெய்
திம்பர் மீதிலி யக்கோ பிதிர்களை
யேந்தல் செம்மிட ராமலி ரட்சித்து
தம்ப மான முகிலின் கொடியும்
தலத்தி ருக்குந்த ழற்கம்ப மிட்டு
அம்பு ராசிகள் சீற வழிகண்டு
ஆன போசனம் வானுல் வரவிட்டு 57

தம்பி யானவன் பூசிக்க மூத்தவன்
தானே வெல்லத் தனிவாய மீந்தோன்
நம்பி நாவலர் நாக்கிலெட் டாதவன்
நாத ஞனவன் கீர்த்தியை யன்னுள். 58

துண்ட வீணையு மாயிரங் கம்புந்
துணையி றுக்கியே யாளுங் கரத்தோன்
1அண்ட கோள முருவந் திரண்ட
ஆச னங்கட்டி யானந்தம் பாட 59

---

1. அண்டர் கோள முருபந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறில் லாத மகராச தேசிகன்
மாம குடத்தவி ராச ஞனேன்
கூறி யேவைத்த வாக்கியத் தன்பன்
குறிக்க ரியதி ரித்துவ ஏகன் 60

தந்தை யுங்கத்தன் மைந்தனுங் கத்தன்
தக்க சாந்தி ஸ்பிரீத்து வுங்கத்தன்
எந்தை யாள்வகை மூவ ராகிலு
மேக மாகியி ருக்குஞ்[1]சு பாவத்தை 61

வான வானவர் வாக்குப் புவிதனில்
மாந்தர் வாக்குமொன் ருகி யிருக்கினும்
ஆன தேவ[2]சு பாவத்தைக் கூறி
அளவி டப்புத்தி யாற்கண்டு மண்ணில் 62

எண்டி சையும்[3]புவி யாவினுந் தானய்
இருக்கு மென்ற[4]நற் தேவசு பாவத்தை
உண்டாக் கப்பட்ட புத்திக ளாலே
யுரைக்கொண் ணுது ஞேமானு பள்ளி. 63

அறிவுறுத்தல்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

மனுவாயெ டுத்தவுடல் மடியாதி ருப்பதிலே
மகராச [5]மெய்த்த விமலன்
கனமாயு ரைத்தபடி கதிரோன்மு ழக்கிடிகள்
கடல்சூழ்பு வீக்கு லமெலாம்

---

1. சுபாபத்தை 2. சுபாபத்தை 3. புவியானுந்
4. னற் தேவ சுபாபத்தை 5. மொய்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனலாலெ ரிக்குமுதல் அடியார்பி ழைக்கவருள்
அரசேய ளிப்ப வெனவே
நினைவாலு [1]மிக்குடைய ஒளியாலு முத்தர்சொன
நிலைதேடு முற்ற மனுவே. 64

இதுமுதற் பதின்மூன்று பாடல்களில் தலைவனுகிய கிறித்து பெருமானின் பெருமையை இளைய பள்ளி மூத்த பள்ளிக்குக் கூறுகிறுள்.

சிந்து

நீட்டு வானும் நிலமொடைம் பூதமும்
நேச மான வுயிர்களி யாவுங்
கோட்டு முன்னமே தாஞயி ருந்தவன்
கோல மான [2]மனுசர்சு பாவத்தைக்
கேட்டி டக்கூறு வேனெங்க ளாண்டே
கிளர்பு வியைப்ப டைத்தவந் [3]நாளினில்
நாட்டி ஞராதி மானிட ஞகவே
நம்மை யீன்ற அதமேவை [4]தம்மையும் 65

மண்ணி லேவைத்து நீதிவ ரங்கள்
மகிமை யாவும வர்க்குக்கொ டுத்து
எண்ணி லாத[5]தீர்க் காயுசு பெற்றுரென்
றிறப்பி லாம லிருமென் றிருத்தி
விண்ணி ழந்து நரகினில் வீழ்ந்திடும்
விண்ப சாசு வினைகொண்டு சூட்டிப்
பெண்ணெ ணும்மேவை தன்னைக்கொ டுத்த
பிழைக்கு வேண்டியே பேரின்ப நாதன் 66

1. மிக்கதொளிநெறியாலு 2 மனுஷர் சுபாபத்தைக்
3. நாளில் 4. நன்னையும் 5. தீர்க்காசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிட சென்மந் தானே யெடுத்து
    மகிமை யான [1]மனுசசு பாவத்தை
ஆன பாடுகள் தான்பட்டு வாடியே
    ஆதி நாதன் [2]திருவுள மாகியே. 67

மாந்த ருக்குள் மகராச ஞகிய
    மன்ன வன்றவி ராச[3]கு லத்தினில்
போந்த கன்னிகை மாமரி அம்மையைப்
    பூவை மார்க்கர சாகவி ருத்தியே
ஏந்த லாதிபி தாவுந்[4]தி ருச்சுத
    ஸிஸ்பி ரீத்துச்சாந் தேகநே சத்தால்
சேர்ந்த நீதிவ ரங்கள்கொண் டிந்தச்
    செகத லத்தில்ம னுவை[5]ரட் சிக்கவே. 68

நித்தி யகன்னி தன்னுத ரத்தில்
    நினைத்தெம் மானிட ஞகச்செ னித்துச்
சத்தி யமொழி முன்னுரைத் தபடி
    தற்ப ரன்மனு வாகப்பி றந்தார். 69

தேவன் மானிட னைது மொன்ருய்ச்
    செகத்தை மீளப்பி றந்தவர் தம்மைக்
கோவர் தேடினர் ளானவர் பாடினர்
    கொற்ற வர்மூவருங் கொண்டாட்டஞ்
                                        [6]செய்தனர்
ஆவ லாகக் குருவும் விதவையு
    மர்ச்சித் தார்கள் குலமுற்றும் நல்ல
தேவ சோபனங் கொண்டாடி யிந்தச்
    செகத்தி லாதியி ருக்குமந் நாளில் 70

---

1. மனுஷசுபாபத்தை 2. திருவுளமாகி 3. குலத்தில்
4. திரிச்சுத 5. ரட்சிக்க 6. செய்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூத ராறிரு பேர்களைக் கூட்டினர்
சொல்லொ ணுநவங் கோடி செய்தனர்
வேத வாய்மைவி ரித்துரை செய்து
வினையெ லாந்தள்ளி மேதினி யெங்கும்
நீதி ஞான நெறியை நடத்தி
நினைந்த வண்ண மொருகுரு சேறிப்
[1]பாத மானதுங் கையு மிறுகப்
பருத்த லாணியி றுக்கிய றைய 71

துஞ்சி யேதினம் மூன்றினு யிர்த்துச்
சுருதி யின்திறஞ் சொல்லிய வண்ணம்
அஞ்சு காயமுஞ் சோரிவி ளங்கவே
ஆதி கத்தன்வ லப்பாகஞ் சேர்ந்தார். 72

தூங்கு வான்முகில் மேகங்கள் மோதிடச்
சூரி யன்சந் திரனொளி மங்கிட
ஓங்கி யேயுறு மக்கினி யாக
லோக மெங்கும ழிந்திடுங் காலம் 73

அந்த ரத்திலே சிங்கா சனமிட்டு
ஆறி ருவரு டன்கூட நின்று
வந்து தீர்வை யிடுபவன் ருனே
[2]மனுசசு பாவமெ டுத்தவந் நாளில் 74

---

1. பாதமானது 2. மனுஷ சுபாப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணி லேசெய்த காரணங் களவை
வகுத்தெ ழுதிவச னிக்க வென்றால்
எண்ணி யேயிவ் வுலகங்கொள் ளாதே
ஏந்த லான செபதேயு மைந்தன் 75

தானெ ழுதிய தேவபு ராணத்திற்
சாற்றி னரந்தத் தன்மைகளெல்லாம்
வானு ளோரும் [1]மனுசருங் கூடி
வழுத்தி னாலும் வசனிக் கொணாது. 76

எங்க ளாண்டை யிவரெவ்வு யிர்க்கு
மிரக்க முள்ளவர் ஞானக் கிறீஸ்துவ
துங்க வாதிபி தாவின்சு தனிவர்
தோன்றல் காணுஞ் செருசலைப் பள்ளி. 77

அறிவுறுத்தல்

கட்டளைக் கலித்துறை

வாரிக் கரையில் வளர்வா னுலகமென் மாநிலத்திற்
பாரிக்கை யாக [2]அபிராங் கிளைகள் பலுகவைத்த
சீருக் குகந்த [3]திரித்துவ ஏகனைச் சிந்திப்பவர்
[4]ஆருக்கு முந்திப் பரலோக நன்மை யடைவர்களே. 78

---

1. மனுஷருங் 2. அபரூங்
3. திரீத்துவ 4. ஆருக்கு முத்திப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குயில் கூவல்

சிந்து

தந்ததன தந்ததன
தந்ததன தந்ததன
தனனதன தனதந்த — தானதனன

அண்டபகி ரண்டமுயி
ரெண்டிசையு மண்டலமு
மளவிடவ ருவேனென்று
— கூவாய் குயிலே
[1] துண்டமதி கண்டசுட
ருண்டனைய பொருளெலாந்
தொகுத்தநன்மைச் சொரூபனென்று
— கூவாய் குயிலே. 79

எப்போது மிப்போது
முப்போதுந் தானாகி
எல்லாமறி பவனென்று
— கூவாய் குயிலே
ஒப்பரிய வேகனு
மூவருந்தா னாகி
ஓயாதி ருப்பனென்று
— கூவாய் குயிலே. 80

---

1. துட்டமதி

* 'பண்ணைக்காரன் தோற்றம்' என்பதற்கு முன்னதாகக் 'குயில் கூவல்' என்னும் இப்பகுதி பழைய பதிப்பிற் காணப்படுகின்றது. ஏனைய பள்ளுப்பிரபந்தங்களில் 'மழைபெய்ய வரங்கேட்டல்' என்பதன் முன்னதாகவே 'குயில் கூவல்' காணப்படுகின்றமையின் இங்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. இதுவே பொருட் பொருத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவன்மா னிடனுகி
மனுவைரட் சிக்கவந்த
1செகராச ராசனென்று
— கூவாய் குயிலே
மூவுலகும் மகிழவே
முப்போதுங் கன்னிகையார்
முன்ம லேயி லீன்றதெனக்
— கூவாய் குயிலே. 81

சத்திய வேதமது
எத்திசைகள் தோறும்முத்தி
தழைத்தோங்கி வாழவே
— கூவாய் குயிலே
உத்தமநன் னெறிநீதி
யோங்கிய திருச்சபை
யுலகுதனில் வாழவே
— கூவாய் குயிலே. 82

சன்னுசி யின்னுசி
தேவனே மேலான
தவமுனிவன் வாழவே
— கூவாய் குயிலே
2எந்நாளு மெமக்கருள்
பிரஞ்சீஸ்க்குச் சவேரியா
ரின்பநாமம் விளங்கவே
— கூவாய் குயிலே. 83

---

1. ஜெகராஜராஜ 2. எந்நாளௌமக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரான பாராளும்
பிடுத்துக்கால் மனுவென்றன்
பிறதானம் வீசவே
— கூவாய் குயிலே
நேரான மன்னவர்கள்
நேய அதிபதிகள்
[1]நீடூழி வாழவே
— கூவாய் குயிலே. 84

*தழைவுபெற்ற [2]யாழ்ப்பாண
சத்தியகி றிஸ்துவர்கள்
சந்ததமும் வாழவே
கூவாய் குயிலே. 85

அறிவுறுத்தல்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பாசவலை யானபுவி வாழ்வைமிக வாகவெண்ணிப்
பாதகம தானமனுவோர்
ஆசைதவி ராமல்மண்ணி லாவிதளர் வாகியுய
ராதிதனை யேநினைகிலார்
வாசமனு வேநினைவ தோவறிவ தோகனலில்
[3]வாடுமன தோமுடியுநாள
தேசமென்ன தேகமென்ன தேவியென்ன தேடியென்ன
தேநாடு தேடுநலனே. 86

---

1. நீடுளி 2. யாட்பாண
3. வாடமனதோ முடியுநாள்
* 'தழைவு பெற்ற.......' எனத்தொடங்கும் அடிக்குப்பின் 'நேரான மன்னவர்கள்.........' எனத்தொடங்கும் அடி பழைய பதிப்பிற் காணப் பட்ட போதும் எதுகை நோக்கி இங்கு மாற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை பெய்ய வரங்கேட்டல்

கொச்சசகக் கலிப்பா

ஆரணஞ்சேர் ஸ்ரீமானு மர்ச்சிய[1]சிட் டசபையில்
பூரணஞ்சே ருந்தலத்தின் புனிதர்குரு முதலாக
நற்குருக்க ளானோரும் நரபால ரானோரும்
வர்க்க[2]வணி கேசர்களும் மகிமையுள்ள
வாணர்களும்
உள்ளவுயிர்க் குலமனைத்து மூண்டான வுலகமெலாம்
தெள்ளருமோ ராதியெனுந் தேவனுட னடிபணிந்து
பணிந்தபுவி தனிலிருந்து பன்னாளு மேவணங்கித்
தணிந்தபவங் [3]காடேற்றத் தன்மமியாம்
செய்தவர்க்குச்
செய்யமழை தாருமென்று [4]சிறந்தவருங் கேட்டபடி
வையமெங்குஞ் செழிப்புறவே வானபரன் றானிரங்கி
அனந்தனந்த வருளான அற்புதனுந் தயவாகித்
தினங்கிருபைச் சமுத்திரத்திற் சேர்ந்தமுகில்
நீரையள்ளித்
தன்மமாய் [5]முழங்கிமின்னித் தாரணி[6]யெங்
கும்மிருண்டு
[7]வன்பிலாச் சமாதான மழையுலகிற்
பொழிந்ததுவே. 87

---

1. சிஷ்டசபையில் 2. வழிக்கேசர்களும் 3. கடேற்றத்
4. சிறந்தோவருங் 5. முளங்கி 6. யெங்குமிருண்டு
7. வன்பில்லாச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுறுத்தல்

நேரிசை வெண்பா

வஞ்சினமும் பொய்யும் [1]வழக்கீன மும்புரிந்து
நெஞ்சறிய நாளும் நெறிகடந்தாற் - கொஞ்சமிது
மாக்களே உங்கள் மனநினைவு வார்த்தைகளை
யாக்கு மொருவனுக்கு மன்பு. 88

மழை பொழிதல்

சிந்து

தனதத் தனதன தனதத் தனதன
தனதத் தனதன தனதன

கிருபைத் திரள்முகில் பரவித் திசைமிசை
கிளர்மொய்த் தவசுள [2]முனிவோரும்
உறுதிப் படியதி வுயிருய்யத் தனபெரு
முகிலிற் றெளிவுறப் பொழியவே. 89

பருதித் தெளிவுறு பழுதுற் றசடர்கள்
பதறிக் கதறியே நெளியவே
அருவித் துளிபட வடலுற் றதிகமெய்
யணிகைக் கலைமலை யலையவே. 90

ஓடிக் குலமுகில் கூடிப் பலபல
வேலைத் திரையென நாடியே
சாடிப் பகைஞர்கள் சாலப் படி[3]மினித்
தாரைப் புனலது சொரியவே. 91

---

1. வழக்கினமும் 2. முனிவரும் 3. மின்னித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக் கன்புள ராகத் தன்பொடு
ஆடிப் பலபுகழ் பாடவே
நீதிக் கிருபைமழை நீடித் தவசுளா
நேசப் [1]படிதனிற் பொழியவே. 92

தனதன தனன தனதன தனன
தனதன தனன தனதன

திடுதிடு திடெனச் செருமிடி குமிறத்
திரண்மலை யலைகொண் டுலையவே
கிடுகிடு கிடென வுடலுயிர் வெருவக்
குழாமுட [2]னெழிலிகள் பொழியவே. 93

தலையெழு பாவ [3]முயிர்வகை மூவரும்
தழலுறை பேய்களு மலையவே
கொலையொடு களவுங் கொடியபொய் தாமுங்
கொடுகியே நிலையற் றுலையவே. 94

தந்தத் தனன தனதன தனன
தானன தனன தனதன

தன்மக் குணமுந் தவநெறி பொறையும்
தானிடு செபமும் பொழியவே
நன்மைக் குணமுந் [4]தவநெறி பகுதி
நன்மழை தானே பொழிந்ததுவே. 95

---

1. படிபாரிற்
2. னெகிளிகள்
3. முயிர்கை
4. தவநெபறிகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

ஈட்டி யீட்டிப் புதைக்குந் தனங்களும்
இரப்ப வர்க்கொன்று மீயாம னங்களும்
மூட்டி மூட்டி முழுநா ளுக்கிடு
[1]மோச வாழ்க்கையும் முந்துகு ணங்களும்
கூட்டை விட்டுயிர் போகின்ற வேளையிற்
கூடி நம்முடன் வாராது மாந்தரே
போட்டு வித்தொழி லம்பரத் தாதிமுன்
போக வேணும் புரியுஞ்ச னங்களே. 96

ஆற்றில் வெள்ளம் வருதல்

சிந்து

உம்பரு முலகுந் தானு னவனுக்
குகந்து [2]மனுச சுபாவமாய்
உதிக்குங் கால வெண்ணை யாதி
ரேமை நாட்டிற் பெருகியே
அம்புவி யாகிய ஐந்துநி லத்தில்
அநவி பாயும் நீத்தத்தை
ஆரணப் படியே காரணத் துரைக்க
அறிந்து கேளும் பள்ளீரே. 97

---

1. மோசவாட்கையிங் 2. மனுஷசுபாபமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சி

ஓங்கும் புனவிற் றேங்கு மருவி
உதித்துக் குதித்துக் குவடெல்லா
முழக்கிச் சந்தகில் [1]கிளப்பிச் சிந்துர
முதறி [2]வேர்கழை சிதறியே
நீங்கத் தருக்க டுங்கப் பெருத்த
நீத்தத் தாற்கழை பரந்துதாழ
நெடிய யாளியுங் கொடிய வேங்கையும்
நீர்க்குள் ளேபரந் தார்க்கவே. 98

கதறிப் புரள வெயிலி னிற்கிளை
கலங்க வாரண முழங்கொளும்
கரடப் பகடுந் திரளைப் பிணையுங்
[3]காவிற் குவியு மாவிபோய்
விதறிப் பதறி யாளிக் குலங்கள்
வேழத் தரளஞ் சிதறிட
மெய்ப்புனல் பரந்து ஒப்புற நிமிர்ந்து
மேவி [4]மலையைத் தாவியே. 99

முல்லை

படியைப் படர்ந்து உதறிப் பிடுங்கிப்
பார்த்தே நீக்க மாற்றியே
பண்டெங்க ளுதன் கொண்டங்க மோடு
பாரிற் பிறந்த நாளிலே
அடியர்க் கிரங்கி யிருந்த மாமலைக்
கடுத்தமலையென் றிரங்கியே
அப்புறத் தகன்று வெப்புறத் தெழிந்து
அணியு முல்லைய டைந்ததே. 100

---

1. கிழப்பிச் சிந்துர 2. வோர்கழை
3. காவி 4. மலையத்

அணியு முல்லை நிலத்திற் புகுந்து
அண்டர்கள் சேரியிற் ருவியே
அலர்த்த கொடியும் நிலத்த தருவு
மலைய வேர்கள்விட் டுலையவே
மணியுந் தரள வரம்பு கேளும்
[1]வாழ்ச்சி யாய்ச்சியர் கொழிக்கவே
வாலத் துருளை போலக் குரல்விட்
டலைய வேமனங் கலையவே. 101

பள்ளை நிரையும் வெள்ளை நிரைத்த
பாலுந் தயிரும் மோர்களும்
பருத்த சாடியுஞ் சிறுத்த சாடியும்
படலும் பட்டியு மிதக்கவே
வெள்ளம் பரந்து வெட்டுங் குடலை
வீழ்த்திக் காற்றொடு தூற்றியே
வேத மனுவிலி ருந்த நிலத்தை
மேனி யாயரன் பாய்க்கண்டு 102

உறைந்த தயிரும் வறுத்த கடும்பு
மூறுங் கிருதம் பால்களும்
உண்டிடக் கொடுத்துக் கண்டுளத் தரித்த
வுரிமை யாட்க ளாமென
உறைந்த நீர்ப்புள் ளொறுத்தே போந்த
[2]உழவ ரிருந்த தலமென்று
[3]உத்தம மருதத் துழவர் நிலத்தில்
உரங்கொண் டேசென் றடைந்ததே. 103

---

1. வாட்சியாட்சியர் கொளிக்கவே 2 உளவரிருந்த தலமென்றும்
3. உத்தமருததத்து நிலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதம்

பதிக்கு மருத நிலத்திற் புகுந்து
வாழைச் செடியைத் தாவியே
வண்டலை யடைத்துக் கொண்டலை யுடைத்து
வழங்குந் தாதுகள் திரும்பியே
கதிக்கும் பஞ்சங் கமுகோ டலர்ந்த
கன்ன லுளி கேரமும்
காம்பு தூங்கிய மாங்க னிகளும்
கலவினி வுற்ற தியவே. 104

ஏற்றம் பரந்து நீற்றம் பொருந்தி
யிடித்து நிலத்தை முடுக்கியே
யிரண்டு கரையும் திரண்டு தரள
மேறிப் பாதவ மூறியே
நாற்றம் பொருந்தும் [1]பழனக் கரையு
நறும்பூங் கொடியும் வேலியும்
[2]நாகண வாய்ப்புள் கோகில மேற்கொள்
நற்றரு வான துதைக்கவே. 105

கொம்பிக் [3]குழுறிக் குதறி விதறிக்
கோவித் தேயலை பாவித்தே
கோல வளவர் சேரியை நாடிக்
[4]கூண்டுநீ ரின்ன மீண்டுதான்

---

1. பளனிக்கரையு மரும்பூங்கொடியும்
2. நாகணவாய்ப்புள்ளுங் கோகுலமேற்கொள்ளும்
3. குமிறிக் 4. கூண்டநீரின்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்பர்க் கிறைவன் மனுவ தாகியே
யுயர்ந்த [1]நிலத்திற் போம்வழி
ஓதி [2]யுழவர் சாதியர் நிலமென்
றேங்கு நீரது தேங்கியே. 106

நெய்தல்

அம்பிக் கீதத் துலைக்கு மலைக்கு
மாதிவே தர்க்கு மேற்று[3]வாழ்
அரிய பரதர் சேரி யாகிய
வடர்ந்த நெய்தலும் புகுந்ததே
வெம்பிப் புகுந்து [4]நெய்த னிலத்தில்
[5]மெய்த்தொழி லாளர் பாடியில்
விரைக்குஞ் செந்நெலும் நிரைக்குங் கன்னலும்
வீழ்த்தியே வெள்ளந் தூர்த்தியே. 107

பாரக் கயிறும் வலையுந் தூண்டிலும்
பரும்புலால் கூடும் மரங்களும்
பாயுந் தோணியுந் [6]தோயுஞ் சோங்கும்
பவளக் கொடியு மணிகளும்
ஆரத் திரளுஞ் சூளத் திரளி
யலைத்து வுடலம் பொருத்தியே
ஆறு மலையு முற்றுஞ் சிதறி
அகில மெங்கணும் பரந்துநீர் 108

---

1. யேலத்திற் 2. யுளவர் 3. வாள்
4. நெய்த நிலத்தில் 5. மெய்த்தொளிவாளர்
6. நோயுசோங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத் திறைவர் பகுதி யிறுத்த
கடலில் மீனுந் தொபியசு
கண்ணுக் கினிய மீனு முத்தினங்
கற்றோ னிருந்த மீனுநீள்
[1]தாலத் தவர்க்கு ளுயர்ந்த குருமுன்
தன்வலை புகுந்து மீன்களும்
சற்குரு வாகிய முனிவ னறிவு
சாற்றிடக் கேட்ட மீன்களும் 109

வாலைத் திருப்பித் தலைவைத் தொழுங்கை
மகரக் கடலை யுழக்கியே
[2]மாங்கிச வுயிர்க்குல மடுக்கப் பிறந்த
மனுமகன் பாதம் [3]வாழியே
சாலத் துயர்ந்த மோட்சம் புவிகள்
தான்முன் னுதித்த வூரதாந்
தலைநா லாகிய பந்தியிற் படிந்து
தாரணி நாலுங் கூறலும் 110

ஓடிக் குதித்துச் செருசலைப் பாங்கும
யொர்தாம் நதியிற் போகியே
உற்ற இசவல் பெற்றி டுங்களை
உலகிற் புகழ்ந்து பாடியே
பாடித் தெருவிற் கரங்கொண் டுயர்த்திப்
பருமி லாளைமுன் நடத்தியே
பாத்திப குருவை யேற்றியே அவர்தம்
பாதங்க டன்னையும் போற்றியே. 111

---

1. தாலத்தவர்க்கு உயர்ந்த
2. மாங்கிஷ
3. வாளியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தே புவியி லிறந்தே யுயிர்த்துப்
பெருகுந் தந்தை வலத்திலாய்ப்
போய்நடுத் தீர்க்கப் பாரிடத் தார்க்குப்
பேரின்ப நாத னுரிமையாஞ்
சிறந்த ரேமை நாட்டிற் புகுந்து
சிட்டர்ச முகத்தை வாழ்த்தியே
தேவன் கருணை யாறும் பாயும்
செய்தியைப் பாரும் பள்ளீரே. 112

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

சகல வல்லவர் சத்திய வாசகர்
தாம னைத்தையுந் தாங்கவும் வல்லவர்
அகல மாகிய வைம்பூதஞ் செய்தவர்
அத்த னைக்கும ருளாகி நின்றவர்
பகலி ராவும் படியே யளப்பவர்
பத்தி யுற்றவர்க் கற்புத மீபவர்
புகலும் வேதத்தி லுண்மையைச் சேர்ந்தவர்
பொன்னு லகத்தி லுண்மையுஞ் சேர்வரே. 113

பண்ணைக்காரன் தோற்றம்

சிந்து

இடையதனிற் கயிறுகட்டி இந்திரியங் களொடுக்கி
எரிகின்ற தீபமதை யிருகரத்தி லேந்தி
உடையுற்று லோகபண்பு முன்னறிவ தாகவேதான்
உற்றகனல் மீதோடு தேறலுமில் லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையுங்கைக் கோலுமின்றி யடப்பமுந்தா
னில்லாமல்
அம்பரத்தி லன்னை[1]யில்லா னன்றுரைப் படியே
படைவிட் டுடனுலகை பகைதொட்ட லகைதன்னைப்
பண்ணைக்கா ரன்வந்து தோற்றி னனே. 114

பள்ளியர் பண்ணைக்காரனை வணங்கல்

சிந்து†

[2]சிரமுண்டி தங்கள்பண்ணைத் தேகமொடுக்கிச்
செபங்கள்மி கப்புரிந்து தீனுமொறுத்து
உரமுண்டு றுதிகொண்டு துண்டமுடுத்து
உள்ளத மாபரண மொக்கவணிந்து
*நிகர்மண்ட வேபதமும் தருவிலிறுகி
தாரணியைமீண்ட கத்தன்க ருணைவிளங்க
பரமண்ட லமும்விரும்பிப் பாரையிகழ்ந்து
பண்ணைக்கா ரனைத்தொழ வாரும் பள்ளீரே. 115

மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் முறையிடுதல்

நீதமற [3]என்னைவிட்டு ரோமாபுரியில்
நித்தியமும் பள்ளியுட னேச மேயானன்
ஏதுபிழை யேயறியே [4]னென்னிடத்திலே
எல்லாமாண்டை தானறியு மென்றே
கூறினள். 116

---

1. யில்லானற்றுரைப்படி 2. சிரமொன்றி
3. எண்ணையிட்டு 4. னென்னிடத்தில்

† பள்ளிகள் தரு என்பது பழைய பதிப்பு.

* 'நிகர்மண்ட......' எனத் தொடங்கும் அடி சிதைந்து கிடக்கின்றது போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி எதிர்மாற்றங் கூறுதல்

கூறியென்ன நீ[1]குழப்பங் குற்றங் களல்லோ
—வாண்டே
கோதிலாத [2]தன்மகுணப் பள்ளன் றன்னையே
ஆறியிரு மென்றென்னிட மாக்கி யேவிட்டார்
[3]ஆனதினு லன்புகொண்டே [4]னுதரவிலே
சீறியழப் பெற்றதாயும் [5]சீடர்களுந்தான்
சிலுவைதன் னைச்சுமத்தித் தேவன்மகனைத்
[6]தாறிருப்பி னுலறைய மெய்பொருந்திய
சத்துருநீ யல்லவோ சாற்றடிபள்ளி. 117

மூத்த பள்ளி ஏசல்

சத்துருநீ யென்ன சொன்னுய் ஆண்டவர் முன்னே
சாதுரிய மாக[7]வென்றன் பள்ளன்றன்னையே
நித்தியமும் பூசைவைத்துத் தானம் [8]வழங்கி
நேர்ந்தசெபங் கள்தியான நீதி புரிந்து
[9]ஒத்தனை யேஒறுத்து ஓதி வணங்கு
உள்ளன்பு கொண்டுநீயும் வாசம்பண்ணி
பத்தியினு லேமகிழ்ந்து விட்டேன் பள்ளனைப்
பார மாக்கிக் கொண்டதுநீ தானல்லோபள்ளி.
118

---

1. குளப்பங் 2. தன்மக்குணப் 3. ஆனதினுலேயன்பு
4. னுதரையிலே 5. சிஷர்களுந்தான்
6. தாரிருப்பினு 7. வெந்தன்
8. வளங்கி 9. ஒத்தனேவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி ஏசல்

என்மருந்து [1]போலவேறு மருந்திலையோ
இரக்கமே சற்றுமில் லாதேபள்ளி
நன்மருந் தாயுலகில் வந்த நாதனை
நால்வருடன் கூடிநீயு மோச மேபண்ணி
பொன்னருந் தலைமுடியில் முள்ளுமிருத்திப்
போற்றுமொரு பீறல்கொண்டு போர்த்து
மேனியில்
மன்னவன்சொ லாரெமக் கொத்துநீயுமுன்
மக்களுந்தா னல்லவோடி [2]வஞ்சகப்பள்ளி. 119

மூத்த பள்ளி ஏசல்

வஞ்சகியா ளுகிலுமோர் தற்கபாபமாய்
மண்பொருந்து நாளையிலே வந்தவேதமும்
தஞ்சமென வேயெழுதித் தந்தவேதமும்
தள்ளியேதன மானிடனாய் வந்தவேதத்தை
நெஞ்சறிய வேயெடுத்த வேதபண்ணையில்
நெல்விரையுங் கலப்பை வர்க்கநிரையும்
அஞ்சமுறி வொன்றருவிற் றுஞ்சுமுறிவு
[3]மத்தனையும்நீ யெடுத்துக்கொண்
டாயேபள்ளி. 120

---

1. போலவேஉன்னவேறு 2. வஞ்கப்பள்ளி
3. மத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி ஏசல்

அத்த னையும் நாமெ டுத்தென் [1]அதிட்டந்தான்
அதிலுமு மைக ளுக்கு அந்தநா ளையில்
கத்த ஞகி யேயி ருந்து மன்னர் சேனையைக்
கார ணத்தி ஞல்மடிய வேக டலிலே
வைத்து மக்க ளுக்குவழி போக விடுத்து
வானமுத போச னத்தைத் தந்த நாதனை
மத்தி யான மாகுமுதற் சல்லி யவாரம்
மாறு பாடு செய்துகொண்ட வஞ்ச கிநீயே. 121

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

ஆண்ட நாதனை ஆரென் றறிகிலீர்
அவனி [2]வாழ்க்கையி லன்புகொண் டாடுறீர்
பூண்ட செல்வம் புனல்மேற் [3]குமிழியாம
போகு மீந்தப் புவிதனில் [4]வாழ்க்கையே
மாண்டு போனவர் தம்மையுங் கண்டின்னம்
மயக்க மேவிட்டு வாஞடு தேடுவீர்
காண்டு கொள்ளுங் கனிவான நாளிலே
கடனி றுத்துக் களிப்ப [5]தருமையே. 122

---

1. அதிஷ்டந்தான்
2. வாட்கை
3. குமிளியாம்
4. வாட்கையோ
5. தரிமையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணைக்காரன் பள்ளனிடம் பண்ணைக் கணக்குக் கேட்டல்

சிந்து

ஆதி மானிட னுகவே வந்து
அதத்தை மீண்டிரட் சித்தஅந் நாளில்
நீத மான ருேமாபு ரிச்சபை
நீண்ட பண்ணையிற் கூண்ட வயலில்
வேத மானது பூதக லப்பையும்
வித்து மாடு வெகுத்த துரகமும்
[1]ஏதி லாததோர் மண்வெட்டி வர்க்கமு
மின்ன தென்று இயம்பிடாய் பள்ளா! 123

பள்ளன் கணக்குக் கூறல்

இதுமுதல் நாற்பது பாடல்களில் பள்ளன் மண்வெட்டி, மாடு, கலப்பை முதலியவற்றின் எண்ணிக்கையினையும் மற்றும் பண்ணைச் செயல்களையும் பண்ணைக்காரனுக்கு விரிவாகக் கூறுகிருன்.

சிந்து

முன்னை நாளாதி கத்தனு ரைத்த
முழும றையெனுந் தேவபு ராணத்தில்
கன்னி யானச லோமை மகனன்று
கார ணங்கண் டெழுதிய வண்ணம் 124

---

1. ஏதில்லாத

UNIVERSITY OF CEYLON LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டை கட்டி ரோமாபு ரியென்னும்
பண்ணை யில்வைத்த வேதவித் தானதை
சிட்ட ஞான சபைவய லானதிற்
தேச மெங்குஞ் சிதறிவி ரைத்தேன். 125

கல்வி லும்முள்ளி லும்வழி மீதிலும்
காட்டி லும்விழுந் தேபோச் சனேகம்
நல்ல தானநி லத்தில் விழுந்ததை
நானின் னஞ்சொல்லி ஒப்புத் தருவேன். 126

காத்தி ருக்கக் கழுதையுஞ் சேரவுங்
கடவுளா னுக்குக் காணிக்கை யாக்கவே
சாத்தி ரியென்னு மூவிரா சாக்களுந்
தன்ம மாய்க்கொண்டு வந்தபொன்
னெல்லாம் 127

மாந்த ருக்குள் மகராச னாகிய
மன்ன வன்றவி ராசகு லக்கன்னி
ஏந்தி யேகரங் கொண்டிரப் போர்க்கெல்லா
மிட்டல் லோபிச்சை யெல்லாம்போச்
சாண்டே. 128

பன்னி ரண்டுகு மாரனைப் பெற்ற
பார்வோனி யக்கோபு பிதிர்வழி
முன்னீ ரென்றும்ப டாமல் மொழிந்த
[1]முறைமை யின்கன்னி முப்போதுங் கன்னி. 129

---

1. முறமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பாலனைக் காணிக்கை யாய்வைத்துப்
பெருக்க வேமுத லில்லாத வண்ணம்
உற்றி ரண்டுபி ழுக்கிடுங் காசும்
உடைய வர்க்குக் கொடுத்தல்ல
வோமீண்டார். 130

அம்பு ராசியின் மீனம்வி ளங்க
அடக்க மாய்வைத்தி ருந்தபொன் னெல்லாம்
எம்பி ரான்முன் பகுதியி றுக்க
இராயப் பரெடுத் தெல்லாங் கொடுத்தார். 131

மாடத் தாள்மாமண மாளிகை தன்னில்
மனும கனுமா ளுக்கரு மாகக்
கூடத் தானே இருந்துண்ட போதினிற்
கொண்டு வந்து மதலேன கன்னிகை. 132

ஆண்டை பாதத்திற் பூசிய எண்ணெக்கு
ஆக வேண்டி யரும்பாவி யூதேயு
தீண்டி யேயெங்கள் ஆண்டையை விற்ற
தெனரி யுமென்ற முப்பது வெள்ளியும் 133

வீண தாகச் செலவழித் தேனில்லை
மிக்க வன்கோ முசெழுத் தின்படியே
காண வேமுன் றுயவரி லாக்கொண்டு
கட்ட ளைப்படி விட்டேனே ஆண்டே. 134

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டை நாதன் வளர வளர்ந்த
வழகு தையலில் லாதருஞ் சட்டையைத்
தூண்டி யேகரை போட்டன்று சேவகர்
[1]சூழ்ச்சி யாகவெ டுத்தல்லோ
கொண்டார். 135

மாந்தர் சென்மம கில்மேலெ டுத்தவன்
வதன மீதைத் துடைத்த துகிலேயும்
ஏந்தி யேயங்கம் [2]போர்த்திடுஞ் சீலேயு
மீட்டி யுமிருப் பாணியு முள்ளும் 136

சங்கை ரேமைச் சபைக்கு முதற்குரு
சத்தி யவேத [3]சாக்கிச ஞகிய
துங்க ராயப்பன் கோயிலிற் கொண்டுபோய்ச்
சூதா னமாகவே வைத்தேனே ஆண்டே. 137

கொங்கொ டுதரு ரோமானு வாண்டைக்குக்
கொள்கை யாகக் கொடுத்த துகிலேயும்
சங்கை மானன்று கோயில் முகப்பிற்
றரித்தி ரவானுக் கீய்ந்த துகிலேயும் 138

பங்க மாகவே யூதர்கள் ஆண்டைக்குப்
பாதகம்பண்ணிப் போர்த்த துகிலேயும்
எங்கே தான்வைத்தி ருக்கு தோவென்று
யானுந் தேடினேன் காண்கிலே ஞண்டே. 139

---

1. ஞட்சியாக 2. போந்திடுஞ்
3. சாக்கிஷஞகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

இறந்து போஞ்சட மென்றேயென் ணுமலே
யினிமை யாக [1]வியல்வாழ்க்கை தேடியே
மறந்து ஏகப ராபரன் சோதியை
மயக்கு மான வலைபுகு மாக்களே
பிறந்த கோலமும் பின்வருங் காலமும்
பிறர்ப டுந்துய ருங்கண்டு பேணிஞல்
சிறந்த [2]மோக்கிச வீடடை வீர்திடன்
தேவ வாக்கியந் திட்டந்தான் காணுமே. 140

சிந்து

எங்க ளாண்டை [3]மனுசசு பாவ
மெடுத்த போது இருநிலந் தன்னில்
மங்க ளவேத வாக்கியங் கூறியே
மாந்தர் கேட்க வசனிக்கு நாளில் 141

அங்கோர் போதினி லையாயி ரம்பேர்க்கு
மதன்பின் னோர்முறை நாலாயி ரம்பேர்க்குஞ்
சங்கை யாக அசனங் கொடுத்தது
தான்வெ குத்த செலவல்லோ ஆண்டே. 142

அற்பு தக்கன்னி தன்னுற வாகிய
[4]அம்பு வியினிற் பெரியவன் மண்ணில்
முற்ப டவந்த மாந்தருக் கீய்ந்த
முந்தி ரிகைப்ப ழவிர சந்தான் 143

---

1. யியல் வாட்கை 2. மோக்ஷிஷ வீட்டை
3. மனுஷ சுபாப 4. அம்புவியிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்ப டவந்த பேர்களுஞ் டாறிடப்
பேரு லகிலறு சாடி நீரை
நற்பு டன்செய்து அச்செல விட்டது
[1]நானி லத்திற் செலவல்லோ ஆண்டே. 144

ஆறிரு வர்க்குப் பாதங் கழுவியே
அத்தி ராவுபொன் வார மதிலே
பேறு சூழவி ருந்துகொ டுத்தது
பேசி னுஞ்செல வல்லவோ ஆண்டே. 145

நண்ணு ஞேமைச் சபையிலுண் டாகிய
[2]நானி லத்தினு ழவருந்தானே
தன்ம மாகவே பத்திலொன் றுண்டைக்குத்
தந்த செந்நெல் சகலமுந் தானே 146

தேவ [3]பூசைத் திருநா டனுக்குந்
திருப்ப திதன்னைச் சேவிக்கும் பேர்க்கு
மாவ தாகிய தானமுந் தான்கொடுத்
ததனை யுஞ்சில விட்டேனே ஆண்டே. 147

அங்கங் கேயவர் தன்[4]நாழி கொண்டு
அளந்த வண்ண மளந்துகொள் ளும்படி
இங்கு மென்னிடத் தோர்நாழி தானுண்
டீதல் லோவினி யில்லையென் ஞண்டே. 148

---

1. நாநிலத்திற் 2. நாநிலத்தினுளவ
3. பூசைதிரு 4. நாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறி ருவரும் நால்வரு மாகி
யடைந்த மேன்மையை யாம்பெற் றிருந்த
பேறு டையமத் தேசெனு மாமுனி
பின்ன மேயறத் தீட்டிய வண்ணம் 149

போத நாதன் மனுவாக வேவந்து
பொய்ச்ச மையங்க ளைப்போக்க டித்து
வேத ரூமையிற் றீட்டியிற் ருனே
விளங்க வேதா னடைந்திடுங் காலையில் 150

வெய்ய பேயென்னும் வேங்கையைக் கண்டு
வெருண்டு போன தொருகோடி காளை
ஐய மாகியே யான்சொல்லு மீறிய
வாதி நாளிலும் போன தனந்தம் 151

கோபு ரஞ்செய்து பாஷைவே ருகிக்
குலைந்து போனதொரு கோடி காளை
மாபு ரஞ்செல்ல வேயுல கமுடல்
மண்ணிற் கூட்டியே போனதுங் கோடி 152

அந்த நாளில் மனுமக ளுருக்கு
ஆத ரையில் விடுதி கொடுத்தென்
சிந்தை யாகவே [1]தானே யெழுதிய
தேவ வேதத்திற் கூறிய வண்ணம் 153

---

1. தானேயெதிழுய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி நாத னழைத்த [1]விருந்தினி
    லன்று தான்புதி தாய்க்கண்ட சேய்கள்
ஏதில் லாமலே பார்க்கவென் றுற்கையி
    லெத்த னையெரு தென்றறி யேன் நான். 154

கோதில் லாத குலராச கன்னிகை
    கோவர் வாழுங் குடிலிற் குமாரனைப்
பாதி யானவி ராவிற் போய்ச் சென்று
    பார்த்து நின்றெருத் தொன்றுண்டு
                                        ஆண்டே. 155

முன்னை நாளிற் செருசலை யாகிய
    முந்து வேதத்தி ருப்பதி தன்னில்
மன்ன ஞான சலமோ னெடுத்த
    மகிமை யாகிய தேவாலை யத்தில் 156

எண்ணில் லாத குருமுனி வோர்க்கு
    மேச ஞான மனுமகன் றானும்
மண்ணி லாதி [2]யுமுகலப் பைகள்
    மாறு பாடாக வேயைந்து போச்சு. 157

நீதி யோங்கு மெழுபர மாநகர்
    நிற்கு மாற்றங் கரையிலந் நாளில்
சாதி யான தவிராச கோத்திரத்
    தாய்ம ரிக்கு மிளையவன் புத்திரன் 158

---

1. விருந்தரி   2. யுழுக்கலப்பைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னி சாகமுன் மண்மே லெடுத்த
கதித்த கோயில் நிலமுழுக் கச்சே
உன்னித் தேய்ந்த [1]கொழுவுங் கலப்பையும்
ஓது கில்வெகு வாகவுண் டாண்டே. 159

எந்நே ரமுமொரு கோல்கள்கொண் டோச்சிய
ஏந்த லாகிய கோதைதொம் தாதினு
பன்னி ருவர்முனி வனுக்குக் கோயில்
பாரு ரேமையில் நாட்டுமந் நாளில். 160

பூட்டி யேயுழு மேருங்க லப்பையும்
பொன்னி னேருட் கொழுவுமொன் றுண்டு
காட்டு வேன்பின்னை யெல்லாந்தா னுண்டைக்குக்
கற்ற வேதக் கணக்கடை வேதான். 161

நற்சி யேபிர சங்கியே கொண்டு
நடுவனென்றிடு நன்முனி சொற்படி
அர்ச்சி ய[2]சிட்ட சங்கை ரேமை
யாதர யெங்குவி யாடுதி ருத்தி. 162

எண்ணில் லாதவர் மேற்குரு சொற்படி
யெண்டி சைக்கு [3]முழவர்க ளானோர்
பண்ணை யிலுள ஏத்திவெட் டியெல்லாம்
பங்கிட் டுப்பகிர்ந் தேகொண்டு போனார். 163

---

1. கொழுவுங்லகப்பையும்
2. சிஷ்ட 3. முளவர்களானோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை நாளாதி மானிடன் கையிலே
  மூவு லகும்ப டைத்தோன்கொ டுத்த
[1]இன்ன மும்மொரு மண்வெட்டி யுண்டு
  இதற்கு மேலொன்று மில்லையென்
    றுண்டே. 164

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

[2]வண்பி லேசிறு வாழ்வினைத் தேடியும்
  வழக்கி லார்நெறி வாணளை வாடியும்
[3]அன்பி லேயய லாருடை மைக்கெலா
  மாசை வைத்து அலைகின்ற மாக்களே
முன்பி லேசெய்த மோசமெல் லாந்தள்ளி
  முதல்வ னுரு மொழிகின்ற தெண்ணியே
பின்பி லேவருங் காரணம் யாவையும்
  பேணு வீர்திடன் பேரின்பஞ் சேர்க்குமே. 165

மூத்த பள்ளி முறையீடு

இதுமுதல் எட்டுப் பாடல்களில் பள்ளனைத் தண்டிக்குமாறு மூத்தபள்ளி பண்ணைக்காரனை வேண்டுதல் கூறப்படுகிறது.

---

1. இன்னமுமொரு 2. வன்பிலே சீர்
3. அன்பிலே அயலாருடமைக்கெலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்து

பள்ளன் ஞுன்சொன்ன வார்த்தையெல்
லாமுன்னம்
பண்ணை யிற்பண்டம் பாழாக்க மாட்டான்
கள்ளந் தான்மூத்த பள்ளிசொன் னேனென்று
கண்டி ருக்க மனதிலுடையவர் 166

உள்ளன் பாக ஞுமானு பள்ளிக்கு
உண்டான நன்மைக ளெல்லாங்கொ டுத்தான்
துள்ளங் காலியுஞ் செந்நெலும் பொன்னுந்
துலைவற வென்னி டம்வைத் திருந்த 167

துய்ய யோபுக்கு மிச்கவ ஞுன
தொபியா சுக்குத் துயரம்வ ருத்தி
[1]ஐயை யோவையோ ஆஸ்திக ளோடே
அடங்க லையும ளித்தல்லோ
போட்டான். 168

மிக்க மேன்மைச்சு வானியுந் தேவியும்
வேண்டி யேகன்னி மாமரியா யுக்கு
அக்கா [2]லம்மலை மேற்செய்த கோயி
லம்ப ழங்காய்வி ழுந்தவி டத்தில் 169

---

1. ஐயையோ ஆஸ்தியோடு 2. லமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லை மாமலை தன்னிலே ஆண்டவன்
மேதி னிக்காய்ப் பிறந்தே கிடந்த
புல்ல ணையும்பொ ருந்திய தொண்டும்
புனித மாக[1]அ வட்குக்கொ டுத்தான். 170

முன்னை நாளிலி ராயப்பர் பாதத்தில்
மூட்டி யே[2]தொடுத் திட்டசங் கிலியை
பின்ன மாக்கியே யெண்ணையும் போட்டுப்
பேசா தேகொண்டு போய்விட்டா
ளுண்டே. 171

கன்னி பாலன் றனைக்காய மேற்றிக்
கற்ற மாதவன் காட்சியைப் போலே
என்னி டத்தில்வந் தேமுகங் காட்டி
இளைய பள்ளியி டத்திருக் கின்றான். 172

இப்ப டிக்கொத்த பள்ளனுக் கேது
மெங்க ளாண்டைக்கி ணங்கிய வண்ணம்
செப்ப மாகவோ ராக்கினை செய்யத்
தீரு மென்று தெண்டனிட் டாளே. 173

அறிவுறுத்தல்

நேரிசை வெண்பா

எத்தனைநாள் மண்ணி லினிமையுற வாழ்ந்தாலும்
முத்தர் [3]சொனவார்த்தை மோசமா — அத்தனையு
மாக்குவோன் றானே யழிப்போன் றவனைப்பொன்
தேக்குவோன் சீர்பாதந் தேடு. 174

---

1. அவட்க்குக் 2. தொடுத்த 3. சொன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணைக்காரன் பள்ளனை வினவுதல்

சிந்து

பண்ணை மாட்டையு முன்கட்டி வைத்த
பலன தானநற் பாக்கிய வித்தையும்
எண்ணை யாற்றில் விளைநிலந் தானும்
யான்கட்டி வைத்த ஏருங்க லப்பையும்
பின்ன மாகியே மூத்தவள் தன்னைப்
பிரிந்தி ளையாளி டங்கொண்டு போக
என்ன காரண மென்றுண்டை கூற
இயம்பு வான்பள்ள னின்னமுந் தானே. 175

பள்ளன் மறுமொழி கூறல்

ஆண்டே யாண்டே அதிகப லன்பெற்று
அந்த நாளிலி ருந்த[1]செ ருசலை
வேண்டுவா ளென்று மூத்தவள் பள்ளிமெய்
வேத மானதை வீணாக்கிப் போட்டாள். 176

கத்த னூர்சொன்ன கற்பனை மீறிக்
கடவு டன்னைக்க டைத்தெரு நீளம்
பித்த னென்றும் [2]பிழைகார னென்றும்
பிடித்தி ழுத்துப்பின் கட்டாகக் கட்டி
எத்த னைபங்கங் கொண்டது மன்றி
இரக்க மற்றிருகள்வர் நடுவே
சத்து ரர்திகள் கையிற்கொ டுத்திவள்
தானல் லோகொல்லு வித்தாள்கா
ணண்டே. 177

1. செருலை 2. பிழைகாறனென்ம்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி யானுயிர் மீண்டுமு யிர்த்தார்
அதனை யும்மன தற்பமெண் ணுமல்
[1]ஏதி லாதவன் றன்னையு நிந்தித்து
எண்சி லுவைசு மந்தது கண்டு
சாதி யான இவளையும் மற்றுள்ள
சங்கை தேடுந் தனவான்கள் தம்மையும்
நீதி யாய்விட்டு நீண்டவு ரேழைமையில்
[2]நித்தி யமும் நினைத்தேனே ஆண்டே. 178

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

பாபம் பாவம் புவிவாழ்வு பொய்யவிர்
பருதி கண்ட பனிபோலொ ழிந்துபோம்
சாபந் தானது வந்தட ராமலே
தன்ம மெண்ணித்த வஞ்செய்யு மாக்களே
பூபன் தான்முன்பு வானத்தையெண்ணியே
பொருந்து வீர்களி ரண்டிலொன் றுமெனச்
சாபந் தானன்றிச் [3]சந்தோச மாகவே
சத்தி யந்தற்ப ரன்றுள டைவீரே. 179

சிந்து

வஞ்ச கிழுத்த பள்ளி யாகிலும்
மாந்தர்க் காகம னுச்சட்டை போர்த்தோன்
செஞ்சொ லால்முனந் தீர்க்க தரிசிகள்
தேவ வேதத்திற் றீட்டிய வண்ணம் 180

---

1. ஏதில்லாதவன் 2. நித்தியமு 3. சந்தோஷமாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லின் மீதும்பு ரட்டெரு மீதும்
பொருந்த வேநற் சிலுவையின் மீதும்
கல்லின் மேற்கல்லி ராதென்று சொல்லிக்
கடவு ளானமு தானிந்த வூர்க்காய். 181

ஒற்ற ஞகி யூதேயு தன்னை
யுகப்ப தாக வொருவ னிடத்தே
பெற்ற தாய்கொண்டு வந்த பொழுதாதி
பேசு வார்த்தைதத னைக்கேட்டி லையோ? 182

அத்தி ராவில டர்ந்தேறிச் சேவுக
ராண்டை தன்னைய வம்பிடிக் கச்சே
புத்தி யால்மிக மூத்த குருவுக்குப்
போதித் தகதை நீரறி யீரோ? 183

காவி லேதவஞ் செய்திடு மாமுனி
கண்டு பாவீய கறறிய கற்ற
ஆவி கொண்டவர்க் காயின்னம் மண்ணி
[1]லாக்கி னையாண்ட வன்பெற்ரு
ராண்டே. 184

எங்க ளாண்டை யிறந்தே யுயிர்த்தேவிண்
ணேகும் போதுமி ராயப்ப னுக்குச்
சங்கை யாகவே கூறிய வாக்கியந்
தன்னை நானறிந் தேசெய்ய வேணும்

---

1. லாக்கினைபடவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கை யாகிய மூத்த செருசலே
மாறு பாடுக ளேசெய் தாலும்
எங்கே தானே பொறுக்கக் கடனென்
றியம்பு வான்பள்ள னின்னமுந் தானே. 185

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

திருத்து வானுஞ் செகதல மானதுஞ்
சென்று நின்றுதி ரும்பிடுங் காலமும்
பொருத்து மாதி பெலவீன மாகுமோ
புவியில் மாந்தர் பொருளறி யாமலே
ஒருத்த ராற்றுமம் வேற்றோர கத்திலே
[1]உட்பு குந்திட்டு லாவுமென் றெண்ணிஞல்
வருத்த முற்ற மதிகே டிதுவெலாம்
மனும கன்சொன்ன வார்த்தையை நம்புமேன். 186

பண்ணைக்காரனிடத்திற் பள்ளன் முறையீடு

சிந்து—தாளம் ஒற்றை

தனத்த னந்தனஞ — தந்தன
தனத்த னந்தனஞ

பொறுப்ப துங்கடன்தான் — ஆண்டைசொல்
மறுப்ப துமுளதோ
புவியி னிற்ற லையாஞ் — செருசலேப்
பதியெ னப்பிறந்த

1. உட்புகுந்துலாவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறப்பெ ருந்தலைவி — வெகு
சிறப்ப துபொருந்தி
அனாதி யிலிருந்த — செல்வ
அகந்தை யினாலே
தினமெ னைக்கண்டு — மறந்தாள்
[1]மணவி னைகொண்டு
கத்த னைமறந்தாள் — மெத்துங்
கத்தை யுமிழந்தாள்
தன்மங்கொண் டுபொருந்தாள் — தவம்
நன்கென் றுவருந்தாள்
வினைகொண் டுமிருந்தாள் — சற்று
மெனக்கொன் றுமிரங்காள்
பூசித் தும்வணங்காள் — என்னை
நேசித் துமிணங்காள்
பூத லத்துயர்ந்த — [2]மலபரி
பாகத் துயர்ந்தாள்
வாசித் தும்விளங்காள் — நித்தீ
யாமித் தை[3]யிழந்தாள்
பகைச்சொல் லைத்தவிராள் — மூத்த
செருச லைப்பள்ளி. 187

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

கனங்கொள் நீருங் கனலுமா காசமுங்
காலு மண்ணுங் கதிரின்கு ழாங்களும்
மனங்க ளுமெங்கள் [4]வாக்குங்க லங்குநாள்
வருமி னந்திடன் மாநில மாக்களே

1. மணவினைகொண்டுபிறந்தான் 2. மளபரி
3. யிளந்நாள் 4. வாக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனங்க ளென்தந்தை தாயென் பிறவியென்
தார மென்பெற்ற பிள்ளைபூ ணாரமென்
இனங்க ளென்சடத் திம்மையில் வாழ்க்கையென்
ஈத லாந்தந்த ஏகனைத் தேடுமேன். 188

மூத்தபள்ளி குட்டையி லடைக்கப்பட்ட பள்ளனுக்கு வருந்திப் பரிந்துரைசெய்து பண்ணைக்காரனை வேண்டல்

சிந்து

பண்ணைக் காரனுந்தான் — தன்மக்குணப்
பள்ள னைப்பார்த்துச் — சொன்ன
பண்பு கள்தனையே — யவர்
நண்பு றக்கண்டு — மிகப்
பழுது சொல்லாரோ — நல்லோர்
அழுது கொள்ளாரோ — பந்த
பாத கியானேன் — இந்தப்
பாரி னில்நானும் 189

ஆவி கொண்டிடும் — பே
ரான வளானேன் — என்றன்
அகந் தையினாலே — நன்மை
அடங்க லுமிழந்தேன் — முன்னும்
பூவில் வந்திருந்த — மனுப்
பூபன் றனக்குத் — தொல்லை
பூட்டி யேவிரலாற் — சொல்லிக்
காட்டி யுங்கொடுத்தேன் — குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவி யபடியே — மாநகர்
ஞேமை யின்சபைக்குத் — தன்ம
மிணங்கி யும்புரியே — னின்னம்
வணங்கி யுந்திரியேன் — இப்
பூவி னிலடியாள் — நானும்
புரிந்தி டும்பாவந் — தன்னைப்
பொறுத்தி டவேணும் — என்னை
வெறுத்தி டவேண்டாம். 190

தவிகு லம்வாழ வந்தகனித ருஞ்சுதனுர் — புயந்
தாங்கி யசிலுவையென்னுந்
தவத்தொ ழுவதனைப் — பள்ளன்
புவித னிற்றினமு மென் னைமுனிவு கொண்டிருந்தாற்
— றுய
ராற்று வதாரோ — துன்பம்
மாற்றி யேஆண்டே. 191

[1] மனுச ருந்தழைக்க — வெண்ணியே
யெளியா ளும்பிழைக்கத் — துய்ய
மறைப்பள் ளன்றனையே — விட்டெனைப்
பிணைக் கொள் வீராண்டே. 192

அறிவுறுத்தல்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருண்மேவு சிட்டசபை யசையாமல் நட்டதூ
ணதிறுல்வ ரம்பெற்றவர்
குருவோனு ரைத்தபடி கொடியோர்க லக்கமுறு
குருசோட றைக்கவருநாள்

---

1. மனுஷருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவாமல் மெய்ப்பகைகள் விடமேவி மிக்கவல
வியனுயி ருக்கவடியேன்
தருவாயெ னக்குதவி தவிராச வர்க்கமுள
தலைமானி டர்க்கிறைவனே. 193

சிந்து

ஆதி கத்த னுன வர்க்கு வஞ்ச கஞ்செய்த
அந்தநகர் தன்னைவிட்டு அன்பன் படைத்த
நீதி யுரோமா புரியில் வேத சபையில்
நீண்ட பண்ணை தனிலுள்ள பேர்க ளுக்குமே
பூத லமெல்லா மறிய நானு மகிழப்
பொய்ச்சமைய மானதுக ளச்ச முறுக
ஓது நீயென் றேயு ரைக்க வாண்ட வருக்கு
உற்றபடி யத்தனையு மொப்பு ணைசெய்வாய் 194

உற்றரோ மானுபுரிச் சங்க மதிலே
உம்பர் நாதன் மானிடனு யுய்ய வந்தநாள்
நற்ற வர்க ளாகவயல் தன்னை யுழவே
நன்மைவிடை யாகவைத்த சேவ துகள்தான்
எற்றுமுட லுக்குமெழு மாற்றுமத் துக்கும்
ஏழுபதி னுலுமாக வெங்கள் பண்ணையிற்
கற்றதவி ராசகுலக் கன்னி புதல்வன்
கட்டளையாய் வைத்த தன்மங் கண்டு
கொள்ளுமே 195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்ட நாத னண்டிவில குங்க னிதன்னே
யன்றதமு மேவையருந் தின்ற திருலே
வேண்டுமனு வாய்ப்பிறந்து நின்ற தருவை
வெட்டி யேகு றுக்கமரங் கட்டியிறுக
மாண்டு யிர்த்துத் தானிறைவ னத்த ருவிலே
மானிடசென் மம்பிழைக்க வே[1]யு ழக்கோலாய்க்
காண்டருளும் பண்ணேதன்னில் வைத்திருக்குது
காரணம றையுழுங்க லப்பை யிதுவே. 196

பொய்தி ரண்ட வன்பாரோ மறித்த குடிகள்
போகவழி கொண்டதுதான் புண்ணி யமோசே
ஐயிரண்டு கற்ப னேயை வாங்கி வேதமாய்
ஆருமறிந் தேவிரைக்க வற்பு தம்வைத்தாய்
மெய்தி ரண்ட சங்கைரூமைப் பண்ணே தனிலே
மிக்ககு ருவிடமாய் வைத்தி ருக்குது
கையி ரண்டு மேயிறுகப் பரத லத்திலே
காத்திருந்த வருகந்தோர் கண்டு
[2]கொள்ளுமே. 197

அறிவுறுத்தல்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

வாணுளை டுத்த மனுவேயு மக்கு
வருநாளி றத்த லறியிர்
ஊணுறல்ம ருண்டு லகவுடல்பேய் மருண்டுமது
உள்ளங்க ழிக்க நினேவீர்

---

1. புழகோலாய் 2. கோள்ளுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுதி ருப்ப துடல்பிரிவே யுயிர்க்குவரு
பெருநோய்வ ருத்த மடைவீர்
நாணூர்ப வத்தை யினிநாடா தவத்தைமிக
நவில்வாய்செ கத்தி லினியே. 198

பள்ளன் வயலுழும்போது எருதுமுட்ட மூர்ச்சித்து விழுதல்

சிந்து

ஆண்டவ னுரைத்த வார்த்தையின் படியே
ஆகிய தன்மக் குணமெனும் பள்ளன்
வேண்டியே றோமா புரிச்சபை யதனில்
வேதம துரைத்த வார்த்தையின் படியே
தீண்டி[1]யே ழிரண்டு எருத்தையும் பூட்டித்
திருமறைக் கலப்பை யெனுஞ்சிலு வையினாற்
தூண்டியே சால்விட் டுழுகின்ற நேரந்
துரந்தெழு மகர மெனுந்தலைப் பாவம். 199

பாய்ந்தெழு நீரோ டிரைப்பதைக் கண்டு
பதறியே விடைகள் கதறியே பள்ளன்
தோய்ந்திடச் சகதி வயலிடை வீழ்ந்தான்
துணையெனக் காரோ திணையினி லாண்டே. 200

---

1. யேளிரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுறுத்தல்

கட்டளைக் கலித்துறை

காலஞ்செல் லாதிந்தக் கன்மத்தின் [1]வாழ்க்கை கடந்தவரே
கோலங்கொள் வானிற் குடியா யிருப்பர் [2]குலவுபுகழ்ப்
பாலன்சொல் வாக்கியம் பாழ்போவ தில்லைப்
பயன்றெரிந்தோர்
ஆலங்கள் பாக்கி யமிர்தெனும் நன்மை
யடைவர்களே. *201*

மூத்தபள்ளி புலம்பல்

சிந்து

அண்டருலகும் புவிகளுந்தானே பொருந்தி
ஆதியுமனாதியு மானான்
மண்டலமீதே யதத்தையு மவனுடைய
மங்கையையும் வைத்த நாளிலே
தெண்டிரை சூழும் புவிதனில் வந்திருந்த
தேவனுக்குகந்த பள்ளனே
கண்ட சோபமே துனக்கையோ என்கொடுமை
காணேன் மாயமாகி நின்றாயோ. *202*

அரியமுறிவைந்து பெற்றவன் பிறஞ்சீஸ்கு
அன்றுரைத்த வாசகப்படி
உரியவுழக்கோல் சிலுவையின் கனமான
துன்னைச் சோகமாக்கி விட்டதோ
பெரியபண்ணை பார்ப்பவராரோ நீதிக்கென்
பிள்ளைகளு நானுமுய் வோமோ
சரியொருவ னுன்னை நிகரோ எனது
தன்மப் பள்ளனே யெழுந்திராய். *203*

---

1. வாட்கை 2. குலவுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

கங்கை நீர்கரை யென்னப் பெருகிய
கன்ம வாழ்வைக் கனமாக எண்ணியே
சங்கை தேடி யிரவும் பகலுமே
தளம்பு ரியுந் தராதல மாக்களே
மங்கை மார்க்கர சாகித் தவிகுலம்
வாழ வந்த மகராச கன்னிகை
கொங்கை யூட்டி வளர்த்தகு மாரனைக்
குருசு டன்கண்டு கும்பிடுங் காணுமே. 204

மூத்த பள்ளி புலம்பப் பள்ளன் எழுந்திருத்தல்

கொச்சகக் கலிப்பா

நன்மையெனும் நற்குலமே நானிலத்தோர்
பாக்கியமே
இம்மைதனி லென்துணையே எவ்வுயிர்க்குந் தாபரமே
எனக்குனது துணையல்லாது இருநிலத்தி லாருதவி
மனத்துயரால் நீகிடக்கில் மக்கள்கெதி
பெறுவாரோ
உனைமறந்த பேர்களெலா முலகிலென்னைப்
புறக்கணிப்பார்
நினைவிழந்து நீர்கிடந்தால் நேசபண்ணை
பார்ப்பராரோ
சிட்டறே மானுசபைத் தேசமெங்கு முனைநினைந்து
[1]பட்டினியும் பசியுமுண்டாய்ப் படுந்துயரால்
வருந்துகிறார்

---

1. பட்டினியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டெனவே நீரெழும்பித் தேவபண்ணை
பார்த்திடென்னத்
தொட்டுநீ ரைத்தெளிக்கத் தூயபள்ள
னெழுந்தனனே. **205**

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

பரந்த மண்ணும் பரலோக மானதும்
பாவி மெய்விழிக் கேயடங் காததும்
கரந்து தாமா யேகமு மாகிய
கடவு ளான்றன் கழல்பணி யாமலே
சுரந்த பாவச் சுமையின்க ணத்தொடு
சூழு நாளுஞ் சுடுங்கனல் நீங்கிடு
வரந்த ருங்கன வார்த்தையை நம்புநீர்
[1]மதியில் லாதநன் மாநில மாக்களே. **206**

நாற்றுநடுகை காண வருமாறு பள்ளியர் பண்ணைக்காரனை வேண்டுதல்

சிந்து

எவ்வுயிர்க்குந் தானதாகி நின்றநாத
ரெங்கள் பிழைதீர வந்தநாளிலே
கவ்வையென முன்நடந்த கார ணந்தள்ளிக்
கட்டளையிட் டேருமைச் சிட்ட சபையில் **207**

---

1. மதியில்லாததன்

ஞா-10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவரும் ஞானிகளும் மாமு னிவோரும்
வஞ்சகமில் லாததவ நெஞ்சு டையோரும்
நீதியுரோ மாபுரியில் வேத வயலில்
நின்றுவிரைத் திட்டசெந்நெல் நாலு முளைத்து
கீதமென வேசிலம்பு கிண்கிணி பொங்கு
கிள்ளைமொழி வாய்திறந்து சங்கீதம் பாட
ஓதரிய நாற்றுநாங்க ளீட்டுவ தெல்லாம்
ஒக்கநின்று காணவேணு மாண்டவர் தாமே. 208

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

அனந்த ஞான வரபெலத் தாதியா
[1]னகன்ற வானு மவனியுந் தந்தவன்
வனந்த னிலொரு நாற்பது நாளுமே
[2]வருந்தி யூனற்று றங்காதி ருக்கையில்
தீனந்தி னம்பகை கொண்டவ ருங்களைச்
செய்த காரணந் தீதென்றி கழ்ந்ததை
மனந்து ணிந்து மனுவே யறிந்தீராய்
வான நாடு மகிழ்ந்து பெறுவீரே. 209

நாற்று நடுதல்

சிந்து

வானும் புவியும் வரையுந் திரையும்
மகிழ்ந்திடச் சோதி யானவன்
[3]மனுச னுக வந்துபி றந்து
மரித்துயிர்த் தாதி வலமதாய்

1. னதன்ற 2. வருதி 3. மனுஷனுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் புவியோர் பிழைக்க வேசெய்த தரும
ரோமைச் சபையெனும்
சத்திய வேத நித்திய நீதி தழைக்கும்
பண்ணை வயலிலே
ஈனந் தவிர்ந்திங் கிடுங்கற் புடைய வினிய
மூவிதக் கன்னியும்
இலங்கவே சங்கந் துலங்கவே செய்த
இணையில் லாமுனி மார்களும்
ஆன பூரண காக்ஷரேனு மழகுத
வத்தின் மார்களும்
ஆனந்தம் பாடியே தானந்த ஞவென
அன்பாய் நட வாரும் பள்ளீரே. 210

ஏக மாகித் திரித்துவ மாகி யெப்போ
துந்தா ஞகியே
எல்லாம றிந்தவன் வல்லாளன் றன்னையும்
பொல்லா நரகிற்போட் டவன்வலப்
பாக மாக விருந்த சோரனைப்பரக
திதனிற் சேர்த்தவன்
பண்ணை யாகிய [1]ரோமா னுசபைப் பதியில்
விளங்கும் வயலிலே
ஆகத் தெத்தவா நிலையிற் றிருப்பி ஐம்புன
லாதியை யொடுக்கியே
ஆவிப கைதனை யொடுக்கியே ஆற்று
முன்னுரை நெருக்கியே
தேகத் துணையை யொறுத்தே வெறுத்துத்
தேவன் கருணை யொற்றத்தைச்
சிங்கா ரத்துடன் னிங்கா ரம்பிடித் துச்சி
றந்துநட வாரும் பள்ளீரே 211

---

1. ரோமானுசபை

நன்மைச் சொரூபன் சகல வல்லவன் நாத
ஞன நவையில்லான்
நமது சரீரந் தானில் லாதவன் எவையும்
புரக்குந் தயவுள்ளான்
புன்மைக் கணையைத் தாட்கீழ் மிதித்துப்
புவிக்கெ லாம்நன்மை விளங்கிடும்
புண்ணிய ரேமை யிணங்க வாழும்
பொருந்தும் பண்ணை வயலிலே
தன்மக் குணமும் தவமும் நெறியும் சகல
[1]மோட்ச வாளரும்
தற்பரன் புகழைப் பாடி நாங்க ளற்புத
நாற்று நடுகச்சே
கன்மத் திணங்குங் கரந்தை யாகிய[2]கரும
மேழ்தலைப் பாவமுங்
[3]காற்றிற் சேற்றெடு மோதிக் குதிக்குங்
காரணம் பாரும் பள்ளீரே. 212

முன்னை நாளி லெண்ணெண் ணைத
வெண்ணச் சம்ம ளசுவை
முயன்றே படைத்து விட்டவி தத்தை
முட்ட வேசிலர் போட்டதால்
அன்ன லார்களை வன்னி யானதி லடைத்து
நன்மை படைத்தான்
அர்ச்சிய [4]சிட்ட ரேமா னுசபை
யழகு பண்ணை வயலிலே

---

1. மோக்ஷ 2. கருமமேள்தலைப்
3. காத்திற் 4. சிஷ்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னி யான கத்திரீனவுந் தவமுனி யான
1பேதுருவும்
காரணன் புகழைப் பாடி யாடிக் கலந்து
நாற்று நடுகச்சே
சென்னி மேல்முடி தன்னை மேவிய மன்ன
ஞனவ னெருதமுந்
தீரநெட் டூர மூரனிட் டேசெய் தீமையைப்
பாரும் பள்ளீரே. 213

மண்டிய கூந்தலிற் பண்டொரு ஆதுலன்
தண்டிய துகிலைப் போர்த்தவன்
வாரணங் கூப்பிட ஆரணங் கார்ப்பவன்
மனது கலங்கப் பார்த்தவன்
நண்டிரை யாகத் தெண்டரை மீது கொண்டத
மேவையை வைத்தவன்
நாட்டிய ஞேமை சூட்டிய வேதங் கூட்டிய
பண்ணை வயலிலே
துண்டவெண் நிலவை யடிய நுதலிற் சேர்ப்பி
யான்முதல் மூப்பியான்
தோன்றலு மவருஞ் சான்றெனவே தீர்த்துத்
தூண்டியே நாற்று நடுகச்சே
கண்டொரு நாளில் மண்டல மாளும்
பண்டொரு பாவி யானவன்
கண்டத்தை யறுத்துத் துண்டத்திற் சேர்த்துக்
கொண்டதைப்பாரும் பள்ளீரே. 214

---

1. பேதுரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கி யேமுகில் தேங்கி யேசொரி
யுமிடிகள் மலையினுலிந்த
தொல்புவி யெரிந்து பல்லுயி ரழிந்து சூரிய
நிலவுந் தொலேந்தொளிர்
ஏங்கியைம் பூதந் தீங்குறுங் கால மிறப்ப
வரிருப் பவர்க்கெல்லாம்
ஏற்கவே நடுவைத் தீர்ப்பவன் சபையென்
றிருக்கும் பண்ணே வயலிலே
ஓங்கியே கடலில் நீங்கியே திரிந்த
உத்தம கிறிஸ்து நாளுடன்
உயங்கி ருசியாள் சுசீலியாளு முகந்து
நாற்று நடுகச்சே
தாங்கியே நரகில் வீங்கியே யெரிந்து சந்தம்
புரியும் பாவிகள்
தாங்கியே நெருக்கம் போக்கிவிண் ணடைந்த
சங்கத்தைப்பாரும் பள்ளீரே. 215

மெய்யா கியமா னிடனு மாகி வேதப்
பொருளு மாகியே
வெல்லே மலேயிற் பிறந்து சிறந்து புல்லணே
மீதிற் கிடந்தவன்
ஐயா யிரத்தி னதிகந் தழும்பி னழகு
முறிவைந் துடையவன்
ஆரண ருமை காரண சபையி னரிய
பண்ணே வயலிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யா மொழியு சிலியாளொடு பொருந்து
மறையின் சாஸ்திரம்
பூவையர் பதினு ராயிரம் பேரும் புகழ்ந்து
நாற்று நடுகச்சே
செய்ய நெறிவஞ் சகத்தோர் திரண்டு
கொய்தார் சிரத்தை யவருயிர்
தேவ னருகிற் சிறந்தே யிருக்குஞ்
செய்தியைப் பாரும் பள்ளீரே. 216

மெய்ப்பாங் கரத்தி லிப்பியை யெடுத்து
அப்பினை யிறைத்த சிறுவனர்
எத்தவர் போற்று முத்தர்கள் சாற்று
மெய்யொளி ஞான நீதியார்
ஒப்பாங் கடலில் வைப்பா மயிலைக் குரைக்கு
முனிகைச் சிறுவனர்
புகழ்ந்தே வேதம் பகர்ந்தே நீடு முரிய
பண்ணை வயலிலே
ஒப்பி லாத அப்பு லோனிய மெய்ப்பு
லூசிய விறிசிதாள்
ஒருவர்க் கொருவர் பெருகப் புகழ்ந்து
உண்மை நாற்று நடுகச்சே
தப்பி லாதவர் சற்குரு வானவர் தயவா
யதிகருணையாய்த்தான்
பரிமாறு ஆன்மநற் கருணைச் சங்கத்தைப்
பாரும் பள்ளீரே. 217

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லையில் முனிந்து வல்லய மொன்று
கொண்டுல கமெல்லாம் மகிழ்ந்திட
உத்தமர் கூடச் சுத்தம தாய சொற்றவர்
தேடு கோதிலான்
நல்லதென் றெவர்க்காய்ப் புவியினிற் பாடு
நவிலொ ணுவி தம்பட்டுமே
நாட்டிய ஞேமைச் சூட்டிய சமையம்
பூட்டிய பண்ணை வயலிலே
அல்லா லிருவர் சொல்லா லுரிய நல்லான்
சிசிலி யாருடன்
மங்கை குலாவு மரிக்குத் தானும் மகிழ்ந்து
நாற்று நடுகச்சே
கொல்லா கலியம் நில்லா துலகி னெல்லா
மறிந்த வன்வலம்
கோண்டாட் டத்துடன் சென்றவ ரிருக்குங்
கொள்கையைப் பாரும் பள்ளீரே. *218*

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

தனத்தில் வாஞ்சையுந் தையலர் வாஞ்சையுந்
தாரணியையுந் தானேநி னைந்தீராய
மனத்தி லெண்ணமுற் றேதினம் பாதக
வலைபு குந்துவ ருந்திடு மாந்தரே
கனத்தில் வந்திடுங் கத்தாவின் தீர்வையைக்
கண்டரே [1]நீரி தற்கேது சொல்லுவீர்
நினைத்தெந் நாளுந் திரித்துவ [2]ஏகனை
நீண்ட வேத நெறியைந டப்பீரே. *219*

---

1. நீரதற்கேது 2. ஏகனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிவிவெட்டுதல்

சிந்து

எண்சீரடி வண்ணம்

வானும் புவனம் படைத்தோ னிந்த மண்ணில்
மனுவாய் வந்த [1]நாளில்
தானும் புவியி னிறுத்தி [2]வைத்த தரும்
ருேமைச் சபையின்வய
லான [3]மனுச ருளத்திற் பள்ள னன்புற்
றுச்[4]சொல் லுந்நே ரம்பிழை
யீனம் படுத்திப் பகைகள் வந்தெ திர்ப்ப
தைப்பாரும் பள்ளீரே. 220

சற்சங் கமான ருேமைத் தலைவன் குருவுஞ்
சொன்னதைக் கேட்டு வேத
நற்சங் கநீதி யெழுதி மண்ணில் நாட்டு
வேனெனத் தீட்டிய வண்ணம்
வற்க உழவன் வயலில் வருந்தி வளருஞ்
செந்நெல் லூடே மண்ணில்
கற்க மிடும்ப கையா ளர்விரை தன்னையும்
பாரும் பள்ளீரே. 221

முன்னுயர் பண்டித ருக்குமுன் ஞல்வரம்
பெற்ற ஞானியுயர்
தன்னுடை நாவெழுத் தாணியிவை தானெனச்
சாற்றிய வண்ணம் மறை

---

1. நாளிற் 2. வைத்தரும்
3. மனுஷ 4. சொல்லுநேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்நெல் விளைவதின் கூட்டநிற் குந்தீ
வினைகள் தன்னையறுத்து
இந்நில மேற்[1]சூடு போடவிப் போதே
வாரும் பள்ளீரே. 222

கர்த்தன் முன்னு ளிலேசொன்ன கணக்கான
உவமை யின்விரை
ஒத்த கதவை நிகர்த்த வேத உண்மைவித்
தானது மத்திசை
எத்தல மானதும் வாழத் தானே யெங்கும்
[2]விளைந்தது செந்நெல் தன்னைத்
தித்திமி தித்திமி தோவென் னக்கதி ரொட்டோ
டேகொய்ய வாருமே. 223

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

சமைய மெத்தனை யென்றுநி னைத்துநீர்
தளம்பு றீரிது சத்திய வாசகம்
அமையு மத்தனை யும்படைத் தோனொரு
ஆதி யானரு ளற்புதத் தாருளர்
எமையு மித்தனைக் கன்போடி ருத்திய
ஏக னார்மனு வாகவந் தெம்பவச்
சுமையி றக்கச்சு மந்த குருசெனச்
சொல்லு வோர்கள் சுருதிகள் பாருமே. 224

---

1. சூடு 2. விளைந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடடுக்குதல்

சிந்து

ஆதி மானி டன்று ணுகி வந்த நாளிலே
அம்புவியிற் செய்தொகுதி யானது வெல்லாம்
நீதி லாத நால்வ ரான வேத கணக்கர்
தேவபு ராணமதிற் றீட்டிய வண்ணம் 225

முன்னை நாளி லேயி றைவன் சொன்ன புதுமை
மோசமற வேவிளைந்த செந்நெல றுத்து
வன்ன மலையன் னதென்னச் சூடிடச் [1]சின்ன
வஞ்சகர்வி ரைத்தகளை தானு மறுத்தோம். 226

செந்நெ லைமிதித் துத்தூற்றிப் பத்தா லித்திட்டுத்
தேவ னுரு ளம்விரைத்த சூடிட வேணும்
சொன்னபடி காணிக்கைப் பண்ணைக்
காரனுர் நாங்கள்
சூடிடுங்க ளத்தில்வர வேணுங் காணே. 227

அறிவுறுத்தல்

நேரிசை வெண்பா

ஆகமத்தி லேகண் டறுக்கையிட்ட சொற்படியே
மாகனத்த வேத வழிநடந்தாற் — சாக்ஷித்தம்
வன்னாகிற் போடாமல் மாக்களையே வானுட்டில்
இன்னகரி சேர்ப்பார் திடன். 228

---

1. சின்னெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிகள் ஒருவரையொருவர் ஏசல்

சிந்து

இளையபள்ளி குற்றச் சாட்டு

ஆண்டவருந் தானறிவார் நீண்ட [1]ருேமை
அர்ச்சிய[2]சிட் டசபையி லன்பு டையோராய்
ஆண்டவருந் தானறிவா ரென்கருமங்கள்
அத்தனைகாண் காணியார்க்கு விண்ணப்
பஞ்செய்தேன்
வேண்டாண்மைகள் மெத்தவுண்டு
மூத்த பள்ளிதான்
வேத னுக்கந் நாளிற்செய்த தேதுந் தவிர
நீண்ட தன்ம மொன்றுஞ் செய்யாள்
என்னை யுந்தேடாள்
நித்தம் பூசை தானுங் காணாள்
நேச மும்பேணாள். 229

இட்டமுடனே தூயவர் கிட்டி டாமலே
எத்தனைவகைகள் எண்ணி யின்ன மும்வேத
கட்ட ளையெல் லாந்த விர்த்துத் தன்ம
னப்படி மூத்த
காரிகைநடப்ப தெல்லாங் கண்டு கொள்ளுமே.
230

---

1. உரோமை 2. சிஷ்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தபள்ளி குற்றச் சாட்டு

கண்டுகொள்ளு மென்று ஆண்டே மட்டி லேபோன
காரி யங்க ளான தெல்லாம் வீரி யங்களாய்
மிண்டு பேச வீணே பள்ளன் சண்டை பண்ணினான்
மெய்யும் பொய்யுஞ் செய்தொ ழில்கள்
வைய மறியும்
கொண்டுதிரிந் தென்னை முன்னு ளாண்டே யறியக்
கொள்கை யாய்நடந்த தெல்லாந்
தள்ளி யேவிட்டுத்
தொண்டரடி வேரோடுந் [1]தோழர் களோடுந்
துய்யரூ மாபுரியிற் போன நாளிலே 231

என்னையிகழ்ந் தேயிளையாள் தன்னை நினைந்தே
எத்த னையுண் டானநன்மை யத்த னையுந்தான்
[2]முன்னையிளை யாளெ னக்கு மூத்த வளாண்டே
மோச மாரி டத்தி லென்று நேசம் பாருமே.
232

மூத்தபள்ளி ஏசல்

பாராண்மைநீ சொல்லாதே ஆண்டைமுன்னுகத்
— தன்மப்
பள்ளனுமக் காசைகொண்டாற் பாக்கியந்தானே
ஏராதுநீ செய்ததிந்தவூ ரறியவில்லை — யோ
என்னுல் வாராக் குற்றஞ்சொல்லக் கேளடி.
233

---

1. தோளர்களோடுந் 2. முன்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி ஏசல்

சொல்லச் சொல்லத் தன்மைதன்னை
வெல்லப்பேசிறுய் — எங்கள்
சோதிநாதன் மானிடனுய் [1]வந்திடு முன்னம்
நில்லப்பாலே [2]கல்லைத்தொழு
தல்லற்பாடதாய்த் — தானே
நீணிலத்தி லேதிரிந்த தாரடிபள்ளி. 234

மூத்த பள்ளி

ஆரடி யென்றதிக மேனடிசொன்னுய்
அம்புவிக்கெல் லாந்தலைவன் நாமகுஸ்தீஞர்
பேரெழுதி யுங்களைக் கடமைகொண் டார்நின்
பிள்ளைகளும் நீயும் பிறவலங் காணும். 235

இளைய பள்ளி

[3]பிள்ளையென வேயிறைவன் கன்னி வயிற்றிற்
பேருலகில் வாறசெய்தி யான கதைகள்
உள்ளபடி யத்தனையுந் தானெழு தி[4]வைத்த
துங்கள்குலத் தாரோ பள்ளியுண்மை
யாய்ச்சொல்லும் 236

---

1. வந்திட முன்னம் (237-ஆஞ் செய்யுளில் 'வந்திடு முன்னம்' என வருவது காண்க)
2. கல்லைக் தொழு
3. எல்லாமிப்படிப் பிள்ளையெனவே 4. வைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த பள்ளி

உண்மை யாயுங் கள்கு லத்தில் மின்னூர்கள் தானே
உம்பர் நாதன் மானிடனாய் வந்திடு முன்னம்
தன்மையாய்த் தூவலா லேமுன்நா ளெழுதிச்
சாற்றி வைத்த துங்களிலுஞ்
சந்தேக முண்டோ. 237

இளைய பள்ளி

உண்டுரிமை கொண்டு நீயும் விண்டு பேசிறாய்
யோகோரா லாயிரத்து முன்னூறு [1]வருடம்
கண்டுகொள்ளா தேமானே நீயும் மக்களும்
காடுறைந்து போனதுசொல் லாரடிபள்ளி. 238

மூத்த பள்ளி

காடுநக ராகி யெல்லோ காசினிக்கெல்லாங்
கத்தனாகி யேயிருந்த யொத்தவியானு
தேடு நாதன் மானிடனாய் வந்தா ரெனக்குச்
செங்கோல் வேண்டா மென்றுசொன்ன
தாரடிபள்ளி. 239

---

1. வருஷம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி

செங்கோல் வேண்டா மென்று மன்ன
னெங்க ளரசன்
தேவ ராச கன்னி யோடு கூதல் காலத்தில்
தங்க வெல்லை மாநகரிற் பேரெழுதி னேனென்
சூட்சியா லழைத்ததுவு மாரடிபள்ளி. 240

மூத்த பள்ளி

சூட்சி யாலே முன்னோர்க ளெழுதிய வண்ணம்
சூசையுமி ராசகன்னி யான வளுந்தான்
ஆட்சிதவி ராசகுலத் தான வள்கண்டால்
ஆனதுகண் டந்நகரிற் போனு ரேபள்ளி. 241

இளைய பள்ளி

அந்நகரிற் கேயனுதி யான வர்தம்மை
ஆறுஇளைப் பாறெனஓர் வீடுங் கொடாமல்
உன்னையறிந் தவர்களா ரென்று சாற்றி
ஊர்கடக்க ஓட்டுவித்த தாரடிபள்ளி. 242

மூத்த பள்ளி

ஓட்டினுலு 1மன்றவரைக் கூட்டி யேபோனுர்
உம்பர்தொழு மெம்பிரான்பி றந்த
கோலத்தைக்
காட்டில் வாழும் மாட்டிடையர் நாட்டமுறவே
காணிக்கை முதற்கொடுத்த தாரடிபள்ளி. 243

---

1. மென்றவரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி

காணிக் கைபொன் தூபமீறை யானதுமுடிக்
காவலர்கள் மூவருந்தான் கன்னி பாலனை
நாணிக்கவுன் னூருக்காகச் சேணில் தாரகை
நம்பி முந்தி வந்து கண்ட தாரடிபள்ளி. 244

மூத்த பள்ளி

நம்பி னுவி ரண்டுதினத் தெம்பி ரான்றனை
நாம மிட்டுக் கொண்ட தன்றி நாற்ப
தாம்நாளில்
இம்பர் மீதி லேசலமோன் செய்த கோயிலில்
ஏந்தி யேநடந்து சென்ற தாரடிபள்ளி. 245

இளைய பள்ளி

ஏந்தியே யிருகரத்தி லேகன் மகனை
எத்தனை[1]காலமுமி ருந்த கற்ற கிழவன்
மாந்திய[2]கா ணிக்கைதனை நேர்ந்திட வந்த
மாதவமே யென்றபயன் நீய றியாயோ. 246

மூத்த பள்ளி

மாதவனு மங்கேயுள்ள மங்கையர்களும்
மற்றுமுள் ளோருஞ்சொன்ன துற்ற படியே
ஆதவ னவனியோரை மீட்டி ரட்சிக்கவந்த
அற்புத வாழ்வடிவா யாரணப்பள்ளி. 247

---

1. காலமிருந்த 2. காணிக்கையதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி

தாக்கரசன் மந்திரிபி லாத்தூ சின் [1]கீழாய்த்
தற்பரன்சு தனூர்பாடு பட்டா ரென்பதும்
வாக்கியஞ்ச லமோன்மகன் சொன்ன துமல்லால்
வசனித்து வந்துடனே சூதா கப்பள்ளி. 248

மூத்த பள்ளி

சூதாடியுன் மக்கள் முந்தக் கன்னத் தடித்தார்
தூயனூர்மு கத்திற் கரங்கட்டி வரிந்தார்
காத லாப்ப ரோசிறை கடத்தி னவருங்
கட்டியிழுத் தேசிலுவை யோடு வதைத்தார்.249

* இளைய பள்ளி

[2]கமந்து செல்ல [3]எவ்வொருபே ருதவக் கண்ட தில்லை
யேதமில் சீமானல்லோ தானு தவினன்
என்கு லத்தி லுள்ள வர்கள் ஏக பரனை
ஈனமறக் கொன்றதென்று எல்லாந் தாலமேல்.
250

மூத்த பள்ளி

தாலமெல் லாந்தழைக்க வேணு மென்றல்லோ
தன்சரீர மானதிலே பாடு கள்பட்டார்
சாலவுடல் மேலயதி பாடு கள்பட்டுத்
தார ணிக்கு வேண்டி யாதி துஞ்சி னதாலே 251

---

1. கிளாய்த் 2. சிமந்து 3. எவலொரு

* இப்பாடல் சிதைந்து காணப்படுகின்றது போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி

தேடியதி ஞான நன்மை கூட வேபதில்
  தீமைநிறை உள்ளமுடை யோர்க ளாகவே
நாடி யேமெய் யானதுகள் தன்னை மறக்க
  [1]நாட்டி னது முங்கள் குலத் தாரடிபள்ளி. 252

மூத்த பள்ளி

நாட்டினவர் முன்னெழுதி வைத்த படியே
  [2]நம்மை யாள வந்தபரன் றன்ம னப்படி
பாட்டைப்பட் டிறந்துயிர்த்தா ரெண்ணுமல் என்மேற்
  பழியேன்சு மத்துருய்நீ பாரி னிற்பள்ளி. 253

இளைய பள்ளி

பாரழியுங் கால மின்ன [3]மந்த ரத்திலே
  [4]பன்னிருவ ரோடுகர்த்தன் வாற துகண்டால்
ஆரடியெதிர்ப் பாயுன் மக்க ளும்நீயும்
  அப்பறிவா யிப்பறியாய் தப்ப றைகாறி. 254

மூத்த பள்ளி

தப்ப றையு டையாளென்று ஒப்ப னைசொல்லிச்
  சண்டையிடக் கண்டா ராண்டே யுன்னு னதெல்லாம்
[5]எப்படியா கிலும்நானே பாத கிதானே
  எண்ணித் திரிந்தபள்ள னுன்னி டமானுன். 255

---

1. நாட்டினுனது   2. நம்மையாழ
3. மந்தரத்திலெ   4. பன்னிருயரோடு   5. எப்படியகிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய பள்ளி

உன்னுடை யகந்தைகளு முன்கு ணங்களும்
ஓதியவி ளுமொழியு மாண்ட வர்கண்டால்
என்னுடைய வண்டனம் மென்றி ளையாள்காண்
என்று ரைக்க ஆண்டையுமி ணங்கி
யேவிட்டார். 256

அறிவுறுத்தல்

கட்டளைக் கலிப்பா

[1]இணக்க மோநன்மை யீனமெல் லாந்தின்மை
யிறந்து போற திதுவே கடனுண்மை
வணக்க மேசெய்து வாளுளை நம்புநீர்
[2]மதியி லாதநன் மாநில மாக்களே
பிணக்க மேசெய்யும் பேயுமு டல்களும்
பெருத்த லோகமும் பின்னுத வாதுகாண்
கணக்கெ லாம்முற்று நாளி லொருவ னைக்
கண்ட னுதொழக் காரணங் காணுமே. 257

ஞானப்பள்ளு முற்றிற்று.

---

1. இணக்மோ 2. மதி யிலாததன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு முதற் குறிப்பு அகராதி

பாட்டு	பக்கம்
அ	
அங்கங்கே யவர்தன்	54
அங்கோர் போதினிலையா	53
அடுக்கொடெண்டிசை	15
அண்ட கோளமு	16
அண்ட பகிரண்டமுயி	32
அண்டர்வானும் புவி	24
அண்டருலகும் புவி	71
அணியுமுல்லை நிலத்திற்	40
அத்தனையும் நானெடு	48
அத்தி ராவில டர்ந்	63
அந்தந்திகழ் மா	4
அந்த நாளில் மனுமக	55
அந்த மாதி யொன்	18
அந்தரத்திலே சிங்காசன	30
அந்நகரிற் கேயனுதி	88
அம்பிக்கீதத் தலைக்கு	42
அம்புராசியின் மீனம்	51
அம்புவிக்கு முயிர்க்குந்	26
அரியமுறிவைந்து	71
அருண்மேவு சிட்டசபை	67
அழகாய் முடிதிருத்தி	9
அற்புதக் கன்னி நன்	53
அறந்தெரிந்த முழு	22
அனந்த ஞானவர	74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ

ஆகமத்திலே கண்டறுக்கை	83
ஆண்டதான விரண்டா	26
ஆண்டநா தனண்டி	69
ஆண்டநாதனை ஆரென்	48
ஆண்டவருந்தானறி	84
ஆண்டவனுரைத்த	70
ஆண்டே யாண்டே அதிக	61
ஆண்டை நாதன் வளர	52
ஆண்டை பாதத்திற் பூசிய	51
ஆதிக் கன்புளராகத்	37
ஆதி கத்தன் திரு	1
ஆதி கத்தனவர்க்கு	68
ஆதி நாதன் மனுவான	18
ஆதி நாத னழைத்த	56
ஆதி மானிடன்செய்	25
ஆதி மானிடன் றூஞகி	83
ஆதி மானிடனுகவே	49
ஆதியானுயிர் மீண்டு	62
ஆரடியென் றதிக மேனடி	86
ஆரணஞ் சேர் ரூேமானு	35
ஆவிகொண்டிடும்பே	66
ஆறிருவர்க்குப் பாதங்	54
ஆறிருவரும் நால்வரு	55

இ

இட்டமுடனே தூயவர்	84
இடையதனிற் கயிறு	44
இடையினிலே கயிறு	11
இணக்கமோ நன்மையீன	92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலம் படைத்தாதி 19
இப்படிக்கொத்த பள்ளனுக் 60
இறந்த காலமும் 2
இறந்திறந் தின்ன 10
இறந்துபோஞ் சடமென்றே 53

ஈ

ஈட்டி யீட்டிப் புதை 38
ஈறில்லாதவன் ருனுய் 13

உ

உண்டா முயிர்களுக்கு 15
உண்டுரிமை கொண்டு 87
உண்மை யாயுங்கள்குலத் 87
உம்பரு முலகுந் தானு 38
உலகும்பரு முயிர்களும் 3
உள்ளன்பாக ஞேமானு 59
உற்றஞே மானு புரிச் 68
உறைந்த தயிரும் வறு 40
உன்னுடை யகந்தைகளு 92

எ

எங்களாண்டை மனுச 53
எங்களாண்டை யிவரெவ் 31
எங்களாண்டை யிறந்தே 63
எண்டிசையும் புவியாவி 27
எண்டிசையும் விளங்கும் 17
எண்ணில்லாத குருமுனி 56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணில்லாதவர் மேற் 57
எத்த னைநாள் மண்ணி 60
எந்நேரமுமொருகோல் 57
எப்போது மிப்போது 32
எவ்வுயிர்க்குந் தான 73
என் மருந்துபோலவேறு 47
என்று மின்றுந் திரித்துவ 9
என்னை யிகழ்ந்தே யிளையாள் 85

ஏ

ஏக நாதன் பிறந்தே 23
ஏகமாகித் திரித்துவமாகி 75
ஏகமாகித் திரித்துவமா கியெப் 16
ஏகமாகித் திரித்துவ மானவன் 25
ஏங்கு மாந்த ரழுங் 20
ஏந்தியே யிருகரத்திலே 89
ஏந்திர வாவியான 21
ஏற்றம் பரந்து நீற்றம் 41

ஒ

ஒட்டினுலு மன்றவரை 88
ஒல்லையில் முனிந்து வல் 80
ஒற்ற ஞகி யூதேயுதன்னை 63

ஓ

ஓங்கும் புனவிற் றேங்கு 39
ஓடிக் குதித்துச் செருசலை 43
ஓடிக்குல முகில் கூடிப் 36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க

கங்கை நீர் கரையென்ன	72
கஞ்சாமெனு மாபல	6
கண்டு கொள்ளு மென்று	85
கத்தனர் சொன்ன கற்பனை	61
கதறிப் புரள வெயிலி	39
கர்த்தன் முன்னிலே	82
கல்லிலும் முள்ளிலும்	50
கள்ளன் பானின்ற	23
கன்னி சாகமுன் மண்மே	57
கன்னி பாலன் றனைக்	60
கன்னி மாமரி தான்	21
கனங்கொள் நீருங்	65
கனஞ் செறிந்திடு	7
கனத்திருண்டிகாருள்	14
காட்டில் வாழுங்க லை	22
காடு நகராகியெல்லோ	87
காணிக்கை பொன்தூப	89
காத்திருக்கக் கழுதையுஞ்	50
காலஞ்செ ல்லாதிந்தக்	71
காலத்திறைவர் பகுதி	43
காவிலே தவஞ் செய்திடு	63
கிருபைத் திரள் முகில்	36
குருக்களானவ ராறிரு	22
கூறியென்ன நீ குழப்பங்	46
கொங்கொடு தரு ஞேமானு	52
கொப்பிச் குமுறிக் குதறி	41
கோதில்லாத குலராச	56
கோபுரஞ் செய்து பாஷை	55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச

சகல வல்லவர் சத்திய	44
சங்கை ஞேமைச் சபை	52
சத்திய வேதந்தனை	12
சத்திய வேதமது	33
சத்துரு நீ யென்னசொன்	46
சமைய மெத்தனையென்று	82
சற்சங்கமான ஞேமைத்	81
சன்னுசி யின்னுசி	33
சிரமுண்டிதங்கள் பண்ணி	45
சுமந்து செல்ல எவ்வொருபே	90
சூட்சியாலே முன்னேர்க	88
சூதாடி யுன் மக்கள்	90
செங்கோல் வேண்டாமென்று	88
செந்நெலை மிதித்துத்	83
செய்ய நோய்பிணி	21
சொல்லச் சொல்லத் தன்மை	86

த

தந்தையுங் கத்தன்	27
தப்பறையுடையாளென்று	91
தம்பியானவன் பூசிக்க	26
தலையெழு பாவ முயிர்	37
தவிகுலம் வாழவந்த	67
தழைவுபெற்ற யாழ்ப்பாண	34
தன்மக் குணமுந் தவ	37
தனத்தில் வாஞ்சையுந்	80
தாக்கரசன் மந்திரி	90
தாலமெல்லாந் தழைக்க	90
தானுகியனுதியு	4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானெழுதிய தேவபுராண	31
திசைக்கோவென	7
திடுதிடு திடெனச் செரு	37
திருத்து வானுஞ் செக	64
துங்க ராச தவி	21
துஞ்சியே தினம் மூன்றினு	30
துண்ட வீணையு மாயிரங்	26
தூய்ய யோபுக்கு மிக்க	59
தூங்கியே முகில் தேங்கி	78
தூங்கு வான்முகில்	30
தூதராறிரு பேர்களைக்	30
தேடியதி ஞான நன்மை	91
தேவ பூசைத் திருநாடனு	54
தேவன் மானிடனுகி	33
தேவன் மானிடனுனது	29
தோற்று மாமுனி	19

ந

நண்ணு ரேமைச் சபையி	54
நம்பி ஞவிரண்டு தினத்	89
நற்கருணையிலெங்கோன்	24
நற்சியே பிரசங்கியே	57
நற்றவஞ் செய்து	22
நன்மைச் சொரூபன்	76
நன்மையெனும் நற்குலமே	72
நாட்டினவர் முன்னெழுதி	91
நித்திய கன்னிதன்னுத	29
நீட்டுவானும் நிலமொடைம்	28
நீதமற என்னைவிட்டு	45
நீதியோங்குமெழுபர	56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப

பங்கமாகவே யூதர்கள்	52
பட்டை கட்டி ரோமாபுரி	50
படியைப் படர்ந்து உதறிப்	39
பண்டு கானிடைப் பள்ளே	24
பண்ணைக்காரனுந் தான்	66
பண்ணை மாட்டையுமுன்	61
பதமிரண்டு நடமுயன்று	11
பதிக்கு மருத நிலத்திற்	41
பரந்த மண்ணும் பரலோக	73
பருதித் தெளிவுறு பழுதுற்	36
பள்ளன்றன் சொன்ன	59
பள்ளை நிரையும் வெள்ளை	40
பன்னிரண்டு குமாரனைப்	50
பாசவலை யானபுவி	34
பாபம் பாவம் புவி வாழ்வு	62
பாய்ந்தெழு நீரோடிரை	70
பாரக்கயிறும் வலையுந்	42
பாரழியுங் கால மின்ன	91
பாராண்மை நீசொல்லாதே	85
பிள்ளையெனவே யிறைவன்	86
பிற்படவந்த பேர்களுண்	54
பிறந்தே புவியிலிறந்தே	44
புல்லின் மீதும் புரட்டெரு	63
பூசிக்கும் வேளை	17
பூட்டியே யுழுமேருங்	57
பெற்ற பாலனைக் காணிக்கை	51
பேரான பாராளும்	34
பொய் திரண்டவன் பாரோ	69
பொறுப்பதுங் கடன்தான்	64
பொன்னு பரண் கொலுவும்	1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுலகும் மண்ணுல 12
போதநாதன் மனுவாக 55

ம

மங்கை பேரின் மகா 23
மண்டிய கூந்தலிற் பண்டொரு 77
மண்ணிலே செய்த காரணங் 31
மண்ணிலே வைத்து நீதி 28
மன்னவர்கள் மன்ன 13
மனுசருந் தழைக்கவெண் 67
மனுவாயெடுத்த வுடல் 27
மாகத்தன் வாச 20
மாகமண்ணும் விளங்க 10
மாடத்தாள் மாமண 51
மாதவரும் ஞானிகளும் 74
மாதவனு மங்கே யுள்ள 89
மாந்தர் சென்ம மகில்மே 52
மாந்தருக்குள் மகராசனாகிய 29, 50
மாறில்லாத மகராச 27
மாறில்லாதே தினம் 23
மானிட சென்மந் தானே 26
மிக்கமேன்மைச் சுவாமி 59
முந்து மோட்சத்துக்கு 20
முன்னுயர் பண்டிதருக்கு 81
முன்னை நாளாதி கத்தனு 49
முன்னை நாளாதி மானிடன் 58
முன்னை நாளிலி ராயப்பர் 60
முன்னை நாளிலெண்ணெண் 76
முன்னை நாளிலே யிறை 83
முன்னை நாளிற் செருசலே 56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவுலகும் படைத்த	17
மெய்ப்பாங் கரத்தி	79
மெய்யாகிய மானிடனு	78

வ

வஞ்சகி மூத்த பள்ளி	62
வஞ்சகி யானாகிலு மோர்	47
வஞ்சினமும் பொய்யும்	36
வன்பிலே சிறு வாழ்வினைத்	58
வாணா ளெடுத்த மனுவேயு	69
வாரிக்கரையில் வளர்	31
வாலைத்திருப்பித் தலை	43
வான வானவர் வாக்குப்	27
வானும் புவனம் படைத்தோன்	81
வானும் புவியும் வரையுந்	74
விண்ணி[illegible]லன்னையும்	2
விண்ணிலே நவகோடி	25
விண்ணுலாவிய	19
வீணதாகச் செலவழித்தே	51
வெய்ய பேயென்னும் வேங்கை	55
வெல்லை மாமலை தன்னிலே	60
வேதலட்சண தாரி	2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் பிற நூல்கள்

1. கருத்துரைக் கோவை
1959

2. ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை
1963

3. சுமேரியன் ஒரு திராவிடமொழி
(ஆங்கிலத்தில்) 1965

4. ஈழத்துக் கவிதைக் களஞ்சியம்
1967

5. ஈழத்துப் பேச்சுத்தமிழ் அகராதி
(அச்சில்)

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MICROFILMED
Positive
Negative ,
Reel No. 1/057
Date: 20.09.91

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Class No..................

Acc. No..................

This book is returnable on or before the last date stamped below.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This Edition
First published in Ceylon 1968
by ARASU Publications
&
Printed in Ceylon by
Rainbow Printers
231 Wolfendhal Street Colombo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org